விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

தொகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 வைகாசி திங்கள் 2-ம் நாள் (16—5—67) செவ்வாய்க்கிழமை லயர் 5 | இதழ் 47

# போதனு மொழி ஆங்கிலமா?

## "இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு"

### ஹுசைன் வெற்றி பற்றி எஸ். ஜே. வி. கருத்து

"பாரதத்தின் மிக உயர்ந்த பதவியான ஜனுதிபதி பதவிக்கு டாக்டர் ஹுசைன் தெரிவு செய்யப்பட்டது ஜனநாயகத்துக்கு கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும். பாரதத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் சிறுபான்மைபெரும்பான்மை என்ற பாகுபாடின்றி சம உரிமையை அனுபவித்து வருகிருர்கள் என்பதையும் டாக்டர் ஹுசைனின் வெற்றி உறுதிப்படுத்துகிறது." இவ்வாறு பாரதத்தின் புதிய ஜனுதிபதியாக டாக்டர் ஹுசைன் தெரிவுசெய்யப்பட்டதுகுறித்து சுதந்திரன் நிருபரிடம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வி. செல்வநாயகம் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது—

'டாக்டர் ஹுசைனுக்கு கிடைத்த மகத்தான வெற்றி ஜனநாயகத்துக்கு கிடைத்த ஒரு மகத்தானவெற்றியாகும். ஜனநாயகம் நல்லமுறையில்



செயல்படும் நாட்டில், சிறுபான்மை பெரும்பான்மை என்ற வேறுபாடுகளும், மத வேறுபாடுகளும் தலை தூக்க முடியாதென்பதை. பாரதம் நிரூபித்துவிட்டது.

'முஸ்லிம்களும்இந்துக்களும் ஒன்றுபட்டு ஐக்கியத்துடன் பாரதநாட்டில் வாழுகிருர்கள் என்பதையும் டாக்டர் ஹுசைனின் வெற்றிஉலகுக்கு உணர்த்தி விட்டது.'

## மாவட்ட சபை

உத்தேச மாவட்ட சபைகள் பற்றி எஞ்சியுள்ள சில பிரச்சினைகளும் தெளிவாக்கப்பட்ட பின்னர், அது அரசாங்கத்திலுள்ள இதர கட்சிகளின் ஒப்புதலையும் பெற்றுச் சட்டவடிவம் பெறும் என்று தெரிகிறது.

மாவட்ட சபைகள் பற்றி தமிழரசு தூதுக்குழுவினரும் மந்திரி சபை உப குழுவினரும் பல தடவைகள் சந்தித்துப் பேசியது தெரிந்ததே. இப்பேச்சுவார்த்தைகளின் போது மாவட்ட சபைபற்றிய பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்பட்டதாக அறியப்படுகிறது. மாவட்டசபை பற்றி உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் சமர்ப்பித்த திட்டம் ஒன்றும் ஆராயப்பட்டதாக தெரிகிறது.

எனினும் இன்னும் சில பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்றும்அப் பிரச்சினைகள் தெளிவாக்கப்பட்ட பின்னரே மசோதா நகல் சட்ட வடிவம் பெறும்'என்றும் அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாரம் பிரதமர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியொன்றிலும் இதே கருத்தையே வலியுறுத்தியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜீ. ஜீ. யின் கூற்று கட்சியில் சலசலப்பு

### ஏழைப் பிள்ளைகளுக்கு கைவிரிப்பு

**தமிழ் பேசும் பிள்ளைகளின் போதனுமொழி எது? தமிழா? ஆங்கிலமா? இப்பிரச்சினை பற்றி தமிழ் காங்கிரஸில் பிளவும் பூசலும் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. திரு. பொன்னம்பலம் அண்மையில் மட்டக்களப்பில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், "ஆங்கிலத்திற் படிப்பதே நல்லது" என்று கூறினுராம். இப்பேச்சு அவரது கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.**

தமிழ் காங்கிரஸ் தலைவர் தமிழ் பேசும் பிள்ளைகளின் போதனுமொழி ஆங்கிலமாக இருந்தால் நல்லது என்றுகருதுகிருராம். ஆனுல்அவரது கட்சியிலுள்ள மற்ற இரு எம். பிகளும் தமிழே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனரென்று கூறப்படுகிறது.

தமிழ் காங்கிரசுக்கு தமிழ் பேசும் பிள்ளைகளின் போதனு மொழிபற்றி ஒரு தெளிவான கொள்கை கிடையாது.

மட்டக்களப்பு நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் பேசுகையில் கீழ்க்கண்டவாறு கூறினுராம்.

"இந்தோனேஷியா இந்தியா போன்ற நாடுகளில் ஆங்கிலமே பொது மொழியாக இருக்கிறது. எந்த ஒரு பாடத்தையும் ஆங்கிலத்திற் கற்பது எளிது. இப்படி நான் சொல்வதால் சுய மொழியை மறந்து விடுங்கள் என்பது அர்த்தமல்ல. ஆங்கிலத்திற் படிப்பது நல்லதென்றே கூறுகிறேன்"

போதனு மொழி சம்பந்தமாக! திரு. பொன்னம்பலம் எங்கே போய்க் கொண்டிருக்கிருர்? அவரது உண்மையான கருத்து என்ன, என்பதை இந்தப் பேச்சு அம்பலப்படுத்தி விட்டதென்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

தாய் மொழியே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்பதை உலகம் முழுவதுமுள்ள கல்வி அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் பேசும் பிள்ளைகள் எந்தப் பாடத்தையும் தமிழ் மூலம் கற்பதுதான் எளிது என்பதை இந்நாட்டுக் கல்விமான்களும்

(9-ம் பக்கம் பார்க்க)

## 'கப்பல்களுக்கு தமிழ்ப்பெயர்சூட்டுக'

### து. நா. இ. க. கோரிக்கை

'வெளி நாட்டிலிருந்து புதிதாகத் தருவிக்கப்படும் இழுவைக் கப்பல்களுக்கும் மணல் வாரிக் கப்பல்களுக்கும் சிங்கள மன்னர்களினதும்வீரர்களினதும் பெயர்கள் சூட்டப் பட்டுள்ளது போல, தமிழ் மன்னர்கள், வீரர்கள் பெயர்களும் சூட்டப்பட வேண்டும்' இப்படி ஒரு கோரிக்கையை துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இத்தகவலை துறைமுக நாவாய் இயக்குனர் கழகத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

அவர் மேலும் கூறுகையில், துறைமுகத்தில் வேலை செய்வதற்கென புதிதாக அரசாங்கத்தால் இழுவைக் கப்பல்களும், மணல்வாரிக் கப்பல்களும் வாங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன; இக்கப்பல்களுக்கு சிங்கள மன்னர்களினதும், சிங்கள வீரர்களினதும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. நந்திமித்திரா, சுராநிமல, புசதேவா, கன்சதேவா, போன்றவை அவற்றில் சில.

'இந்த நாட்டைத் தமிழ் மன்னர்கள் ஆளவில்லையா? தமிழ் மன்னர்களினதும்,

(9-ம் பக்கம் பார்க்க)

31-5-67 முதல்

சுதந்திரனில்

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த

போப்துரை

கொலை வழக்கு...

ஆரம்பமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிவதை

# இராமனின் வெற்றிக்கு ஏற்பட்ட களங்கம்

கம்பனின் மகோன்னத இலக்கிய பாத்திரங்களுள் வாலியும் ஒருவன். மாபெரும் வீரன் மட்டுமல்ல சிறந்த கொடையாளி, கல்விமான், பக்திமான், சிறந்த ஆட்சியாளன் எனக் கம்பன் காட்டுகிறான். இவ்வாறு பல சிறப்புக்களைக்கொண்டுள்ளபோதிலும் தவறுவது இயல்பு என்பதிற்கு விதிவிலக்காக அமையவில்லை. குற்றத்திற்கு உள்ளாகிய வாலிக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை எவ்வளவு தூரம் பொருந்தும்? வாலி வதையில் ஏனையோர் பங்கு என்ன? என்பதினை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

கம்பனின் காவியக் கொள்கையின் அடிநாதமாக 'அதர்மத்தைத் தர்மம் வெல்லும்' என்பது விளங்குகின்றது. அத்துடன் பெண்மைக்கு உரிய இடம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு இழையோட விடப்பட்டுள்ளது.

கம்பராமாணத்தில் மூன்று பெரிய அரசுகளைக் காண்கின்றோம். வடக்கேயுள்ள அயோத்தி, அடுத்து வாலியின் ஆட்சிக்குட்பட்ட பகுதி, தெற்கே இராவணனுடைய ஆளுகைக்குட்பட்ட பகுதி, என்ற மூன்று அரசுகளைக் காண்கின்றோம். இராவணன் அதர்மத்தின் அணைப்பிலும், இராமன் தருமத்தின் காவலனாகவும் காட்சிதருகிறார்கள். அதர்மத்தை அழிக்க முற்பட்ட போது வாலி அதற்கு ஒரு தடங்கலாகவே காட்சிதருகிறான். எனவே வாலியின் அழிவு தவிர்க்க முடியாதது ஆகும் என்பர்.

கம்பன் இராமனைக் காட்சிப் படுத்தும்போது 'அறமும் நாறும் மேனியர்' 'திருவுறை மார்பன்' 'புவியிடையண்ணல்' என்பன போன்ற உவமை, உருவகங்களால் ஓர் அவதார புருடனாகவும்; வாலியைக் காட்சிப்படுத்தும் போது 'பரிவிலன்'

'கெடுந்திறல் வாலி' 'வாலியெனைத்தோரா வெவ்விடம்' என்பன போன்ற அடைமொழிகளினால் அவனை ஒரு கொடுமையானவன் என்று உணர்விக்க முற்படுகின்றார். வாலியின் திறமையைக் காட்டும் போது பாற்கடலைக் கலக்கி அமுது எடுத்ததை நினைவூட்டுவதின் மூலம் அவன் அகங்காரத்தை எமக்கு உணரத்தருகின்றார். 'சுழலும் வேலைக்கடையும் தோளினான்' என்பது போன்று பல விடங்களில் நினைவு படுத்துகின்றார்.

### சிறியன சிந்தியாதான்

வாலி ஆங்காரம் கொண்டவனாகக் காட்சி தந்தபோதும் இராமனைக் காணும் போது தெய்வமாகவே காணுகின்றான்.

'கண்ணுற்றான் வாலி நீலக்
கார் முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில்லேந்தி
வருவதே போலும் மாலைப்
புண்ணுற்ற தனைய சோரிப்
பொறியோடும் பொடிப்பநோக்கி
எண்ணுற்றாய் என்ன செய்தா
யென்று ஏசுவான்
இயம்பலுற்றான்

எனக் கம்பர் காட்சிப்படுத்துகின்றார். அறிவுக்கும், அகங்காரத்துக்கும் ஏற்பட்ட போராட்டத்தைக் கம்பர் சுட்டிக் காட்டுகின்றார். பாராட்டுவதற்குத் தகுதி உடைய வாலியை 'சிறியன சிந்தியாதான்', 'சொற்றநை' 'செவியுறு கேள்விச் செல்வன்' எனக் கம்பர் புகழ்ந்து பேசுவதெல்லாம் 'நீயெனபொறுத்தி' என இராமனிடம் கூறிய பின்னரே என்பதினை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

'வாலி என்னும் அளவிலா ஆற்றலான் உயிர் தெறக்காலன் வந்தனன்' 'இந்திரன் செல்வன் இன்று மடிவது திண்ணம்' என அனுமன் கூறுவதிலிருந்து வாலி மடியப் போவதை முன்னரே உணர முடிகிறது. சவரியும், கந்தவனும் ஏன் உதவி நாடி வாலியிடம் செல்லும்படி இராமனிடம் கூறவில்லை? இவற்றினை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது வாலி வதையைப் பலரும் விரும்பினார்கள் என்பது புலப்படுகின்றது.

தண்டனையை எல்லோரும் விரும்பினால் மட்டும் போதாது. தண்டனை பொருந்துவதாகவும் அமையவேண்டும்.

### குற்றங்கள்

வாலிமீது இராமன் இரு பெருங் குற்றங்களை சுமத்துகின்றான்: உமது தம்பியிடம்

## இலக்கியப் பூஞ்சோலை

குற்றமில்லை என உணர்ந்தும் பின்னவன் என்றும் பேணமல் உனக்கு அபயம் என்ற பின்னும் கொன்றனை என்பதும், சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்தமையுமாவன அவை.

'அறம் திறம்பிவிட்டாய், மறம் திறம்பி விட்டாய்' என்ற இரு குற்றங்களையும் கூறி தனது நாட்டின் மனுதர்ம நீதியில் வாலிக்கு தண்டனை அளிக்கின்றான் இராமன்.

இராமன் துயிலும் போது கண் விழித்து இருந்து சீதையைக்காத்த இலக்குவன் பாசத்துடனும் பதினான்கு வருடமும் வடக்கு நோக்கி இருந்து பாதரட்சையைத்து ஆட்சி செய்த பரதன் பாசத்துடனும் தம்பியின்றி மண்மேல் மாண்டுகிடப்பனோ என்ற கும்பகர்ணன் பாசத்துடனும் தனது அண்ணன் வாலிக்கு, கூற்றுவனாகிய இராமனைக் கூட்டிவந்த சுக்கிரீவன் பாசத்தை நிறுத்தவேனும் ஒப்பிட முடியாது. எனவே தம்பி என்ற பாசத்தை வாலிகடைப்பிடியாது விட்டது குற்றம் என்று கூறுவதற்கில்லை.

சுக்ரீவனின் மனைவி உருமையைக் கவர்ந்தது வாலிசெய்த மாபெரும் குற்றங்களில் ஒன்றாக இராமன் கணிக்கின்றான். 'மற்றொருவன் புணர் தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கரோ' என இராமன் கூறுவதில் அவனது அடங்காக் கோபம் தெரிகின்றது. சுக்கிரீவனுடைய ஆவி ஒத்த புணர் தேவியைக் கவர்ந்த வாலிக்கு மரண தண்டனை அவசியமா?

### வாலி கூறும் கற்புநெறி

'ஓர் உயிரை உருவாக்க முடியாதபோது அதனைக் கொல்லுதல் நியாயமன்று' என வாதிக்கப்படுகின்றது. கொலைத் தண்டனை சரியானது அன்று என்று கூறுகையில் எதிரியின் முறைப்பாடுகளை அவனது நியாயத்தைக் கேட்காத நிலையில் வாலி வதை நிகழ்ந்து உள்ளது. உருமையைக் கவர்ந்தமை குற்றமன்று என வாலி ஆதாரங்களுடன் கூறுகின்றான்.

'ஐய நுங்கள் குல
கற்பினைப் பொய்யின்
மங்கையர்க் கேய்ந்த
புணர்ச்சி போற்
செய்திலன் எமைத்
தேமலர் மேலவன்
எய்தி னெய்தியாக
வியற்றினன்'

எனத் தனது காட்டு ஆட்சியில் உள்ள ஒழுக்க முறையையும், நாட்டு மனுநீதிக்கும்

மு. சின்னத்துரை

உள்ள வேறுபாடு வழிவந்த கற்பு நெறி பற்றி வாலி கூறுகின்றான்.

'மணமுமில்லை,
மறை நெறி வந்தன
குணமுமில்லை
குல முதற் கொத்தன
உணர்வு சென்றுழிச்
செல்லும் ஒழுக்கலால்'

என்று மேலும் வாலி விளக்கம் கூறுகின்றான். எமது காட்டு சமுதாயத்தில் இவ்வாறு நடப்பது சகஜம்; என வாலி கூறுகின்றான். இராமன் வாலிக்கு நிதிவழங்க முற்படும்போது அவனுடைய நியாயங்களையும் கேட்டு காட்டுச் சமுதாய நீதியிலேதான் நீதி வழங்கி இருக்கவேண்டும். அவ்வாறு

## தர்மத்துக்கு விடுத்த சவால்

செய்யாது இராமன் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டு விட்டான். அடுசரம் தொடுத்து படுநிலத்தில் வீழ்த்திய பின்னரே வாலியின் வாதத்தை இராமன் கேட்கின்றான்,

'நின்ற நன் நெறி
நீ யறியா நெறி'

என நீ அறியாத நெறி இல்லையாகையால் அதன் படி நடக்கவில்லை என இராமன் குற்றம் சாட்டுவதும் பொருந்தாது. சமுதாய ஒழுக்கம் வேறுமாதிரி இருக்கும்போது அதன்படி வாலி நடக்க முற்பட்டதும், தான் அறிந்த நீதிநெறிப்படி நடவாமல் விட்டமையும் குற்றம் என்று கூறமுடியாது' இதே நேரத்தில் ஒரு முரண்பாட்டையும் காண்கின்றோம். 'நீ யறியா நெறி' ஒன்றுமில்லை எனக் கூறிய இராமன் அதே வாயால்சிறிதுநேரத்திற்குமுன்

'பித்தாய விலங்கின்
ஒழுக்கினை பேசலாமோ'

என்று முரண்பட்ட வார்த்தை கூறி இருப்பது இங்கு குறிப்பிட வேண்டிய தொன்றாகும்.

'நித்தியா நின்ற
செங்கடை வாய்ச்சியர்'

பலருடன் சுக்ரீவன் புணர்ந்ததாகக் கூறுவதினையும் இங்கு குறிப்பிடலாம். வான்மீகியும், கம்பரும் வானரங்களின் கற்பு நிலைபற்றிக் கூறவில்லை. சீதையின் கற்புநிலைபற்றி பல விடங்களில் கூறும் கவிகள் வானரங்களின் கற்பு நிலைபற்றி வாய் திறக்கவில்லை. எனவே காட்டுச சமுதாயத்தின் ஒழுக்க நிலை வாலி கூறிய ஒழுக்கமாகவே நாம் கொண்டு அதன் படி வாலி ஒழுகியது குற்றமில்லை எனக் கூறலாம்.

### தனக்கு ஒரு நீதி

இராவணனிடம் தனது மனைவியை அனுப்புகின்றாயா? எனத் தூது அனுப்பும் இராமன் வாலியிடம் ஏன் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அவ்வாறு ஒரு தூது மூலம் இராமன் கேட்டிருந்தால் நிச்சயம் வாலி இணங்கி இருக்க முடியும். இராமன் மீது அளவிட முடியாப் பக்தியை வைத்திருந்தமையும், இராமனைத் தெய்வமாகப் போற்றுவதும் ஆகிய வாலியின் செயல்கள், வாலி இராமனுடைய பேச்சைக் கேட்டிருப்பான் எனத் துணிய உதவுகின்றன.

வாலியுடன் இராமன் ஏன் நேர் நின்று போரிடவில்லை. நேர் நின்றால்பாதிப்பலம் வாலியிடம் சென்றுவிடும் என்ற பயமா? மறைந்து நின்று அம்பு தொடுத்தமைக்கு வாலி காரணம் கேட்டபோது இராமன் வாய் பேசாது நிற்கும் காரணம் யாது? இராமன் வாய் அடைத்து நிற்பது கண்டு இலக்குமணன் ஒரு பொய்ச் சாட்டைக்கூறி மழுப்புகின்றான்.

உருமைதான் சுக்கிரீவனுக்கு உருத்து. ஆனால் இராமன்

'தலைமையோடு
தாரமும் தருவான்'

என்று எவ்வாறு கூறமுடியும்? எவ்வாறு வாலியின் அரசு சுக்கிரீவனுக்கு உரிமையாகும்: ஆராய்ந்து பார்க்கும் போது வாலிமீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பெரிய குற்றங்கள் அல்ல. உருமையைக் கவர்ந்தமை அவனது சமுதாய ஒழுக்கம். ஆனால் சுக்கிரீவனைக் கொல்ல முற்பட்டகுற்றத்தை வாலி ஏற்கின்றான். எனவே இக் குற்றத்திற்கு வாலி வதை அவசியமற்றது.

'அற்றார் நவை என்றலுக்கு
ஆகுநர் யார் கொல்'
'மெய்மை உற்றார் சிலர்
அல்லாதவரே பலர்'

என்று எல்லாம் கூறும் இராமன் தவறுவது இயல்பு என்பதினைக் கொண்டு வாலியை மன்னித்துவிட்டிருக்கலாம். ஆனால் வாலி வதைக்கப்பட்டது ஒருபோதும் பொருந்தாது. எனவேதான் மாபெரும் வீரனும், கொடையாளியும்

(14-ம் பக்கம் பார்க்க)

# பாம்புகடிக்கு வீணாகப் பலியாகாதீர்!

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம்

பாம்பு கடியால் சம்பவிக்கும் மரணங்கள் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன. பாம்பு கடிக்கு ஆளானவர் யாவரும் இறந்து போகவேண்டுவது நியதியல்ல. ஆயினும் போதிய கவனம் எடுத்திருந்தால் காப்பாற்றப்பட்டிருக்கக் கூடிய பல உயிர்களை, மக்களின் அறியாமையாலும், மூடநம்பிக்கைகளாலும் பாம்பு கடியால் ஏற்படும் விஷத்துக்குப் பலி கொடுத்து வருகிறோம். யாழ்ப்பாணத்தில் இவ் வருடம் பாம்பு கடியால் இறந்தவர் தொகை முன்னிலும் அதிகரித்துள்ளது.

பாம்பு கடியால் ஏற்படும் விஷம் உடம்பில் பரவுவதை தடுத்து விஷத்தை முறிப்பதற்கு கை கண்ட மாற்று மருந்து அரசினர் வைத்திய [illegible] பாம்பு விஷத்தை ஊசி மூலம் குதிரைக்கு ஏற்றுவதால் இம் மருந்தை இந்தியாவில் தயாரித்து வருகிறார்கள்.

### மாற்று மருந்து

நஞ்சின் பயனைப் பலிக்கவிடாது எதிர்மாறாகத் தொழிற்படும்பதார்த்தம் ஒன்றை குதிரை உற்பத்திசெய்கிறது. பின் குதிரையின் இரத்தம் வெளிப்படுத்தப்பட்டு நீர்ப்பாயம் (சீரம்) வடிகட்டி எடுக்கப்பட்டு உபயோகத்திற்குத் தயாராகி விடுகின்றது. ஏற்பு அல்லது தொண்டைக் கரப்பன் ஏற்படாது தடை செய்வதற்கும், அவை ஏற்பட்ட பின் அழிப்பதற்கும் பயன்படுத்தப்படும் நீர்ப்பாயத்தைப் போன்றது தான் இதுவும். ஒருவர் பாம்பினால் தீண்டப்பட்டவுடன் அவர் உடம்பில் இம் மருந்தைச் செலுத்தினால். அது நஞ்சுடன் இரண்டறக் கலந்து நஞ்சைச் செயலற்றதாக்கி விடும்.

காலந் தாழ்த்தி இம் மருந்து ஏற்றப்பட்டாலும் மருந்து செலுத்தப்படுவதற்கு முன்பாகவே சொற்ப நஞ்சு உடலின் சில உறுப்புகளுக்கு சேதத்தை உண்டுபண்ணவும் அதற்கான குணங்குறிகள் தோன்றவும் செய்யும். ஆயினும், பாம்பு தீண்டியவருக்கு எந்தக் கட்டத்தில் தானும் இம் மருந்தை ஏற்றலாம். பாம்பு விடத்தால் உடம்பில் மேற்கொண்டு எவ்வித சேதமும் ஏற்படாது மருந்து தடுக்கும்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். ஈ. கே. கே. எஸ். இரத்தினம்
கல்லடி.

கே: அரசாங்கம் 4 இருத்தல் அரிசியை 2ருத்தலாக்கி, பல நோக்குச் சங்கக் கடைக்காரர் 2 இருத்தலை ஒன்றரை இருத்தலாக்க அரிசிஆலையில் கடமை புரிவோர் ஒன்றரை இருத்தலை ஒருருத்தலாக்கி, பின் அரிக்கும் சட்டியில் போட்டு அரித்தவுடன் முக்கால் இருத்தலாகின்றது. இப்படிக் கழிபட்டுக் கொண்டே இருந்தால் மிகுதி முக்கால் இருத்தல் அரிசியை என்ன செய்யலாம் குயுக்திக் கடவுளே?

ப: அதைக் கஞ்சி காய்ச்சி பசி பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு வார்க்கலாம் ஆண்டவனே!

கே: கல்முனையில் நடைபெற்ற முஸ்லிம்—தமிழர் போராட்டத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப; அது இனத்துவேஷத்தின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல. இதர கிராமங்களுக்கு அது பரவாததிலிருந்து இது தெரிகிறதல்லவா?

ஃ

தாழையூர் நாகராஜன்,
தாழங்குடா.

கே: மூதூர் முகம்மது அலி தற்சமயம் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: மார்க்சியத்துடன் சண்டை போடுகிறாராம்.

ஃ

நா. வடிவேலு,
மீசாலை.

கே: தமிழரின் முதல் எதிரி யார்?

ப: இனத்துள்ளிருந்து கழுத்தறுக்கும் அரசியல் வாதிகள்.

கே: மே தினத்தைத் தொழிலாளர் எல்லோரும் சேர்ந்து கொண்டாடாது. தனித்தனியே கொண்டாடி ஒருவரை ஒருவர் திட்டுவதேன்?

ப: திட்டினாலும், 'தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்ற ஒரே கோஷத்தை ஒரே மாதிரி எல்லோரும் கதறுகிறார்களே. அந்த ஒற்றுமை போதாதா?

கே: மாவட்ட சபையை எதிர்க்கும் ஜீ. ஜீ. வேறு என்ன மாற்று முறையைக் கையாளலாம் என்று இதுவரை கூறியிருக்கிறார்?

ப: மாவட்டத்திற்கு ஒரு வட்ட மேசை மாநாடு நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறாராம்!

ஃ

நிலவானம்,
புசல்லாவ.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைக் கண்டதும் தலையைக் குனிந்து கொள்கிறாள். காயா? பழமா?

ப: தலையைக் குனிந்து கொண்டு கடைக் கண்ணால் அவள் உங்களைப் பார்த்தால் பழம்! இல்லையேல் காய்.

ஃ

க. காராளசிங்கம்,
கல்முனை-3.

கே: திரு. பொன்னம்பலத்திடமிருக்கும் அந்த மாலையைக் கல்முனைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவாரா?

ப: அந்த மாலை இன்னும் அவரிடம் இருப்பதாக உங்களுக்குக் கூறியது யார்? அதைக் கொண்டுதானே தொழிற்சாலைகளைத் திறந்து வட பகுதியைத் தொழில்மயமாக்கியிருக்கிறாராம்.

ஃ

'தமிழ் செல்வி'
கொழும்பு-2

கே: பொன்னம்பலத்தின் மேதின விழா தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கவிருக்கும் மாவட்டசபை மசோதா(உரிமை) எதிர்ப்பு விழாவாக அமைந்ததே! ஏன்

ப: 'பொன்னம்பலத்தின் மே தின விழா' என்று நீங்களே பதிலும் கூறிவிட்டீர்களே! தொழிலாளர்களின் மேதின விழாவாக அதுஇல்லாதிருந்ததுதான் அதற்குக் காரணம்.

கே: தனிப்பெரும் தலைவர் தமிழ் பேசும் மக்களுக்கு செய்த துரோகங்களை வரிசைப்படுத்திச் சொல்லுங்கள் மாமா?

ப: அப்பப்பா! அதையெல்லாம் எழுத சுதந்திரனின் 16 பக்கங்கள் கூட போதாதே!

ஃ

மூர்த்தி,
உனுப்பிட்டி.

கே: குயுக்தியாரே, நான் உங்களிடம் பலமுறை கேள்விகள் கேட்டிருக்கிறேன். உங்கள் பதில் கிடைப்பதில்லையே!

ப: உங்களின் கேள்விக் கணைகள் வலுவுள்ளதாக இருத்தல் வேண்டும், அப்பொழுதுதான் அக்கணைகளை முறியடிக்க நான் பதில் கணைகளைப் பிரயோகிப்பேன்.

ஃ

தா. சிவசுப்பிரமணியம்,
விந்துலை.

கே: தமிழகத்தில் திருமங்கலம் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றபின் சுதந்திரா கட்சி தி. மு. க. விற்கும் சுதந்திராவிற்குமுள்ள தேன் நிலவைப்பற்றி என்னகூறுகிறீர்.

ப: 'தேன் நிலவை' முறித்ததால்தான் திருமங்கலத்தில் சுதந்திரா தோற்றது என்று கூறலாம். சுதந்திராவுக்கு

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
> கொழும்பு-12

நல்ல பாடம் இது—கடந்த பொதுத் தேர்தலில் தமிழகத்தில் சுதந்திரா பெற்ற 20 ஆசனங்களில் 12 தி. மு. க. வாக்குகளால் பெற்றவை என்ற உண்மையை சுதந்திரா இனி மூடி மறைக்க முடியாது.

ஃ

ஆர். ராமகிருஷ்ணன்.
மாத்தளை.

கே: தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: மூன்றும் மூன்று இனங்களின் தாய் மொழியாக இருப்பதுதான் முக்கிய வித்தியாசம்.

கே: கேள்வி பதில் பகுதி சில பத்திரிகைகளில் வெளி வருவதில்லையே ஏன்?

ப: அப் பத்திரிகைகளின் வாசகர்களுக்கு கேள்வி கேட்கட் தெரியாதிருப்பதும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் பதில் கூறத்தெரியமலிருப்பதும் தான் காரணம்.

ஃ

உமையொருபாகன்,
பதுளை.

கே: ஈழநாட்டுத்தமிழ்ப் பிரதேசங்களிலே கொலையும் சூறையும் அதிகமாக நடைபெறுவதேன்!

கே: தமிழ் தினசரிகள் சில சூறையாடல், கொலை, கொள்ளைச் செய்திகளால் பக்கங்களை நிரப்புவதால், அச் செயல்களுக்குத் தூண்டுதல் ஏற்படுகிறது.

ஃ

சு. மனோகரன்,
[illegible]

கே: [illegible] தோழரின் தாய்மொழி என்ன?

ப: மலையாள மொழியாம்.

கே: எத்தனையோ பத்திரிகைகள் நடிகர் நடிகைகளின் முகவரிகளைப் பிரசுரிக்கின்றன 'சுதந்திரன்' தமிழகத்திலும் ஈழத்திலுமுள்ள தமிழறிஞர்கள், அரசியல்வாதிகளின் முகவரிகளைத் தொடர்ந்து தந்தால் என்ன?

ப: கேளுங்கள்—கொடுக்கப்படும்.

ஃ

காதலிக்கநேரமுள்ளவன்
புசல்லாவ.

கே: நான் ஒருபெண்ணைக் காதலிக்கிறேன் அவளோ இந்தியா போகிறாள். பிரிவை மறக்க ஒருவழி கூறுங்களேன்?

ப: உங்களுக்கு காதலிக்க நேரமிருப்பதால், மற்றொரு பெண் மீது கண்ணோட்டம் விடுவதே பிரிவை மறப்பதற்கு பலன் தரும் வழி.

ஃ

இ. கேசவன்,
அச்சுவேலி.

கே: மனிதன் வாலில்லாக் குரங்கிலிருந்து தோன்றியதாக பலர் கூறுகின்றனர் இது உண்மையா குயுக்தியாரே?

ப: ஆம்! அதற்கு ஆதாரம் மனிதனுக்கு வாலில்லாமலிருப்பதே! வாலுள்ள குரங்கிலிருந்து மனிதன் தோன்றியிருந்தால் அவனுக்கும்......!

ஃ

விஜயகுமார்,
இலுப்பைக்கடவை.

கே: எனது நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். அவளும் அவனைக் காதலிக்கிறாள் பெண்ணின் பெற்றோர்களுக்கு விருப்பமில்லை. இதற்கு ஒரு வழி கூறுங்கள்.

ப: நண்பரின் பெற்றோரை ஏவி விட்டு பெண்ணின் பெற்றோரை வழிக்குக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள் இதனை நீங்கள் செய்யலாம்.

ஃ

செல்வி,
கொஸ்லந்தை

கே: காதலரைத் பதிவுத் திருமணம் செய்துகொண்டால், மாராலும் ஒன்றும் செய்துவிட முடியாதல்லவா?

ப: இருவருக்கும் போதிய வயதிருந்து காதலும் கருங்கற் கோட்டையாக வளர்ந்தும் இருந்தால் பதிவுத் திருமணம் இல்லாவிட்டாலும் யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது.

ஃ

தமிழன்,
வெள்ளவத்தை.

கே: முன்னாள் குத்துச் சண்டை விரன் 'ஜோலுயி'யும் இராணுவப் பயிற்சிக்கு சென்றிருந்தார். ஆகையால் தற்போது குத்துச் சண்டை வீரனான 'காசியஸ் கிளே' ஏன் செல்லக் கூடாது? நீர் இது பற்றி யாது நினைகிறீர்?

ப: ஒரு நீக்ரோ உலகக் குத்துச்சண்டை வீரனாக இருப்பது அமெரிக்க ஆட்சியாளருக்குப் பொறுக்க வில்லை. எனவே இராணுவத்தில் சேர்ந்து, வியட்நாமுக்கு அனுப்பி ஆளையே 'அபேஸ்' பண்ண முயற்சி செய்கின்றனர். இது ஒரு திரைமறைவு சதி.

ஃ

சாரதி,
தாவடி.

கே: தமிழ் அரசாங்க ஊழியர்கள் உயர் பதவிக்காக சிங்களம் படிக்க வேண்டுமென்றால் சிங்கள அரசாங்க ஊழியர்கள் எப்பொழுது தமிழ் படிப்பார்கள்.

ப: தமிழ் பகுதிக்குத் தமிழ் தெரிந்த ஊழியர்கள் மட்டுமே அனுப்பப்படுவார்கள் என்ற ஒரு கண்டிப்பான கட்டளை பிறந்துவிட்டால் சிங்கள ஊழியர் விழுந்துவிழுந்து தமிழ் படிப்பார்கள்.



'தாய்'ப்பிச்சை!

தாய்லாந்திடமிருந்து அரிசிவாங்கஇலங்கை முயலும்.

—செய்தி

—'தாயிடம்' பிச்சை கேட்டால், நிச்சயம் இரங்குவாள் என்று இலங்கை கருதுகிறதோ?

கஷாயம் தேனாகிறது!

ஆகாஷ்வாணிவானொலியாகும்.

—செய்தி

—கஷாயத்துக்குப் பதில் தேனைக் குடித்தது போல இருக்கிறது என்கிறார் ஒரு தனித் தமிழ்ப் பித்தர்.

மதுவிலக்கரின் கேள்வி

இந்திய வானொலியில் குடிவகைகளுக்கு விளம்பரம் செய்யப்படும்.

—செய்தி

—படிக்கிறது தேவாரம்—இடிக்கிறது சிவன்கோவில்—இதுதான் இந்திய அரசின் கொள்கையோ என்று கேட்கிறார் ஒரு மது விலக்கர்.

பசிக் கொடுமை இல்லை!

பகவான் நகரில் பஞ்சக் கொடுமை.

—செய்தித்தலைப்பு

—'பகவான்' இதனால் பாதிக்கப்படமாட்டார். ஏனெனில் அவருக்குத்தான் பசியெடுக்காதே!

அங்கு சொல்லுங்கள்

திருபாண்மை மேயரின் ஆதரவு சிறிமாவுக்குத் தேவை.

—லெஸ்லி

—இதை தமிழ் மக்களுக்கு சொல்வதைவிட சிறிமாவோ அம்மையாருக்கு எடுத்துச் சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

இதைச் செய்யுங்கள்!

விலையைக் குறைக்கத் தவறும் ஹோட்டல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

—செய்தி

—அதற்கு முன் தரங் குறைந்த உணவை விற்கும் ஹோட்டல்கள் மீது நடவடிக்கையெடுங்கள் என்கிறார் ஒரு ஹோட்டல் [illegible]காரர்.




## கவிஞர்களுக்கு ஒரு வாய்ப்பு

### புது முறைக் கவி அரங்கு

கவிஞர்களே!

இங்கு விளக்கப்படும் நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கவிதை இயற்றி அனுப்புங்கள். கவிதை வெண்பாவாகவோ, விருத்தமாகவோ, வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். 10-6-67 க்கு முன்னர் கவிதை அனுப்பப்படல் வேண்டும்.

நிகழ்ச்சி

'பெண்ணிற்பெருந்தக்க யாவுள?' என்று பெண்ணின் பெருமை பற்றி வினவுகிறார் திருவள்ளுவர். அவர் தமது துணைவியைப் பிரிந்தபோது 'அடிசிற்கினியாளே......' என்று பாராட்டிப் பாடியதாகவும் ஒரு கதையுண்டு. அத்தகைய திருவள்ளுவர் மேனாட்டைப் பின்பற்றும் இக்கால நவ நாகரிகை நங்கை ஒருத்தியைக் காணுகிறார் என்று கற்பனை செய்யுங்கள். காணும் போது அவர் பாடியதாக ஒரே ஒரு கவிதை மட்டும் இயற்றி அனுப்புங்கள். கவிதைகளிற் சிறந்தவை 22-6-67ந் திகதி 'சுதந்திரனில்' வெளிவரும். மிக மிகச் சிறந்த கவிதைக்கு ஒரு பரிசும் உண்டு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

புது முறைக் கவிதை
'சுதந்திரன்'
த. பெ. எண் 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிவாக்காளர் பட்டியலுக்கு தி. மு. க. எதிர்ப்பு

## ஒப்பந்தத்தைக் குலைக்கும் முயற்சி என்கிறது "நம்நாடு"

சிறிமா—சாத்திரி உடன்படிக்கையின்படி இலங்கை அரசாங்கம் தனது குடிமக்களாக ஏற்றுக்கொள்ள இசைந்திருக்கின்ற 3-இலட்சம் இந்திய மரபினரை, 'தனி வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது' என்ற பெயரால், மற்ற குடிமக்களிடமிருந்து பிரித்துவைக்க முயற்சிப்பது, அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கிவிடும். உடன்படிக்கை மூலம் இறுதியாகத் தீர்வுகாணப் பட்டுவிட்ட பிரச்சினை மீண்டும் தலைதூக்குவதற்கும், இந்தத் தனிவாக்காளர் பட்டியல் ஏற்பாடு தூண்டுதலாக அமைந்திடக் கூடும்.

உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள விதிகளுக்கும்—அவ்விதிகளின் உள்ளுணர்வுகளுக்கும், இந்தத் தனிவாக்கரளர் பட்டியல் ஏற்பாடு முரண்பட்டதாகும். இவ்வேற்பாடு, செய்துகொள்ளப்பட்டிருக்கின்ற உடன்படிக்கையையே சீர்குலைப்பதுமாகும்.

மேற்கண்டவாறு தி. மு. க' வின் தினசரியான 'நம் நாடு. (24-4-67) தலையங்கம் தீட்டியுள்ளது.

இத்தலையங்கம் மேலும் கூறுவதாவது:-

'ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்திய மரபினருக்கான தனி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும் என்ற கருத்தை, இப்பொழுதுதான் சிறிமாவோ கட்சியினர் வெளியிட்டிருக்கின்றனர் என்பதில்லை. உடன்படிக்கையின் உள்ளடக்கத்தை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டதற்குப் பின்னர், சில நாட்களுக்கெல்லாம் இந்தத் தனி வாக்காளர் பட்டியல் கருத்தை, இலங்கை அரசாங்கச் சார்பில் உடன்படிக்கையில்கையொப்பமிட்ட தலைமைஅமைச்சர்சிறிமாவோ வெளிப்படையாகக் கூறினார். இதுபற்றிய தமது விருப்பத்தை இந்திய அரசாங்கத்துக்கு சிறிமாவோ எழுத்து மூலம் அறிவிக்கவும்செய்திருக்கிறார்.

'சிறிமாவோ கூறிய இக்கருத்தை, இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை; 'இக்கருத்து உடன்படிக்கைக்கு விரோதமானது' என்றும், 'இதை ஏற்றுக்கொள்ள முடியாது' என்றும் இந்திய அரசாங்கத்தின் சார்பில், அன்றையத் தலைமை அமைச்சராக இருந்த லால்பகதூர் அழுத்தந்திருத்தமாக இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டார்.

'பிரதிநிதித்துவச்சபைக்குத் தங்களைச் சேர்ந்தவர்களைத் தனித்தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்துக்கொள்ள' இந்திய மரபினருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நினைப்பிலேயே, இந்திய மரபினருக்கெனத் தனி வாக்காளர் பட்டியல் தயாரிக்க விரும்புவதாக—தனிப் பட்டியல் ஏற்பாட்டிற்கு—சிறிமாவோ காரணம் கூறியிருந்தார். இதற்கு மேலும் அவர் விளக்கமும்கூறியுள்ளார்.

இலங்கைக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய 3 இலட்சம் இந்திய மரபினரும், மற்றக் குடிமக்களின் பொது நோக்கில் தொடர்பின்றி, இன்னும் சில ஆண்டு காலம்வரை சிந்திப்பதிலும்——செயல்படுவதிலும்—வாக்களிப்பதிலும் தனி ஒரு கூட்டமாகவே இருந்துவருவர். இவர்கள், இலங்கையிலுள்ள மற்ற குடிமக்களுடன் இரண்டறக் கலப்பதற்கு மேலும் பல ஆண்டுகள் தேவைப்படும்; இக்காரணத்துக்காகத்தான் இந்திய மரபினருக்குத் தனி வாக்களிப்பு முறை ஏற்படுத்தும் முயற்சி. இரு சாராரும் இரண்டறக் கலந்துவிட்டதற்குப் பின்னர், இந்தத் தனி ஏற்பாடு தேவையற்றதாகிவிடும்—என்ற விளக்கத்தை சிறிமாவோ, இந்திய அரசாங்கத்துக்கு அப்பொழுது அறிவித்திருக்கின்றார்.

'உடன்படிக்கையின்கீழ் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய 3 இலட்சம் இந்திய மரபினர் மீது, உள்நாட்டுக் குடிமக்கள் மீது நம்பிக்கை கொள்ளுவதுபோல் தாம் நம்பிக்கைவைக்கவில்லை என்பதை சிறிமாவோவின் விளக்கம் தெளிவாக்குகிறது. ஏற்றுக்கொள்ளப்படும் இந்திய மரபினரை, சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சிறிமாவோ மறக்கவுமில்லை—மாற்றிக்கொள்ள விரும்பவுமில்லை என்பதற்கு அவா கூறியுள்ள விளக்கமே போதிய சான்றாகும்.

'உடன்படிக்கையைச்செயல்படுத்த இன்றைய ஆட்சியாளர் கொண்டுவந்திருக்கின்ற மசோதா, இறுதியாகப்பெறக் கூடிய சட்ட உருவத்தைப் பார்த்த பின்னர்தான், சிறிமாவோ—சாத்திரி உடன்படிக்கையின் விளைவை வரையறை செய்ய முடியும். ஆனால், சிறிமாவோவின் நினைப்பும் செயலும், தேவையற்றதும், மனிதாபிமானமற்றதும்—செய்துகொண்ட உடன்பாட்டின் உணர்வுக்கு முழுவதும் முரண்பட்டது ஆகும் என்பதை மறப்பதற்கில்லை.'

## எங்குந் தமிழ் எல்லாந் தமிழ்.

தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பைத் தி. மு. கழகம் ஏற்ற பின்பு தமிழக ஆட்சியின் நிர்வாகத்தில் தூயதனித்தமிழ் சொற்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த முயற்சியில், இயல்பாகவே மொழிப் பற்று நிறைந்த தி. மு. க. அமைச்சர்கள் அதிக ஆர்வங் காட்டி வருகின்றனர்.

சித்திரைத் திருநாளன்று 'மெட்ராஸ் கவர்ன்மெண்ட்' என்ற பெயரைத்தூயதமிழில் 'தமிழக அரசு' என்றும், அரசாங்க செக்ரடேரியட்டை,' தமிழக அரசு தலைமைச் செயலகம் என்றும்,'சத்திய மேவ ஜயதே' என்று தமிழக அரசாங்க கடிதத்தலைப்புகளில் உபயோகிக்கப்படும் வடமொழி வாக்கியத்தை 'வாய்மையே வெல்லும்' என்று மாற்றியதும் தெரிந்ததே.

இதுவரை காலமும் அரசாங்கம் உபயோகித்து வந்த ஸ்ரீமான், ஸ்ரீமதி என்ற வடசொற்களுக்குப் பதிலாக, திரு, திருமதி என்ற தமிழ் சொற்களையும், தி. மு. க. அரசு வழக்குக்குக் கொண்டுவந்திருக்கிறது.

தமிழக நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை கூடிய விரைவில் தமிழில் நடத்துவதற்கு வேண்டிய சட்டச்சொற்களை தயாரிப்பதில் தமிழக சட்ட அமைச்சு இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக தமிழக மக்களும், தமிழறிஞர்களும் கோரி வந்தபடி ஆகாஷ்வாணியை 'வானொலி'யாக மாற்றுவதிலும், தி. மு. க. அரசு வெற்றி கண்டிருக்கிறது. ஆகாஷ்வாணியை, 'வானொலி' என்று மாற்றக்கோரி, பலமுறைபோராட்டங்கள் நடைபெற்றதும், தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் சிறைசென்றதும் தெரிந்ததே.

இனிமேல் தமிழகத்திலுள்ள வானொலி நிலையங்களில் 'ஆகாஷ்வாணிக்கு' பதில் வானொலி வழக்கில் வரவிருக்கிறது.

இவற்றைக் தமிழ் நாட்டு காங்கிரஸ் அரசாங்கமே மிகச் சுலபமாகச் செய்திருக்கலாம். மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருந்தால் இவைகளுக்கு ஆட்சேபனையின்றி அன்றே அனுமதி கொடுத்திருக்கலாம். ஒரு காசு செலவின்றி இவற்றைச் செய்திருக்கலாம். ஆனல் அந்த ஆட்சிக்கு மனமிருக்கவில்லை. தமிழ் மொழியின் [illegible] வில்லை. தமிழ் கலாசார [illegible]

## இந்தியச் செய்திகள்

### நெடுஞ்செழியன் யோசனை

கல்லூரிகளில் தமிழை போதனு மொழியாக்குவதற்கு ஐந்தாண்டுக் காலம் மிகவும் குறுகியது என்றும், 10 ஆண்டு காலத்தில் அதைப் படிப்படியாக அமுலாக்குவதை தாம்ஆதரிப்பதாகவும், 5 ஆண்டுகளில் இதைச் செல்வது காரிய சாத்தியமற்றது என்றும் டில்லியில் நடைபெற்ற கல்வி மந்திரிகள் மாநாட்டில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய தமிழக கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

### மொழி மசோதாவுக்கு அண்ணு ஆதரவு

இந்திய மத்திய ஆட்சியில் அவசியமானவரை ஆங்கில உபயோகத்தை நீடிப்பதற்காக ஆட்சி மொச் சட்டத்தை திருத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதற்கு தமிழக முதலமைச்சர் அண்ணு ஆதரவு தெரிவித்தார்.

### காங்கிரஸ் தோல்வி பற்றி காமராசர்

எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்ததே காங்கிரஸ்தோல்வியடைந்ததன் முக்கிய காரணம் என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராசர் கூறியிருக்கிறார்.

இதற்கு முந்திய தேர்தலின போது எதிர்க்கட்சி கூட்டணி அமைந்திருந்தால் அந்தத் தேர்தலிலேயே காங்கிரஸ் குறைந்த ஸ்தானங்களைப் பெற்றிருக்கும் என்றும் காமராசர் அபிப்பிராயம் தெரிவித்தார். திருமங்கலத்தில் கூட எதிர் கட்சிகள் ஒன்றுக இருந்திருந்தால் காங்கிரஸ் வெற்றியடைந்திருக்க முடியாது, என்றார் காமராஜ்.

### நம்பூதிரியின் எச்சரிக்கை

ஓரிரு ஆண்டுகளில் அனேக மாநிலங்களிலும், மத்திய ஆட்சியிலும் அரசியல் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும்' என்று கேரள முதல்வர் நம்பூதிரிபாட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### தமாஷாவரி நீங்காது

திரைப்படத் தொழிலின் மீது விதிக்கப்பட்டுள்ள தமாஷாவரி நீக்கப்படுவது சாத்தியமில்லை யென்று முதலமைச்சர் அண்ணு கூறியிருக்கிறார். தென்னிந்திய பிலிம் வாத்தக சபை அளித்த வரவேற்பின்போது அண்ணு இதை தெளிவாக்கினர். மத்திய சர்க்கார், திரைபடத் தொழிலுக்கு வேண்டிய அந்நியச் செலவாணியை விடுவிக்க வேண்டும். இப்படி செய்தால் வெளிநாடுகளில் திரைப்படங்களுக்கு நல்ல மார்க்கட் கிடைக்கும்' என்று அண்ணு அபிப்பிராயப்பட்டார்.

### தி. க—தி. மு. க. இணையுமா?

திராவிடக் கழகத்தினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுமென்று தமது கட்சித் தொண்டர்களுக்குதிராவிடக்கழகத்தலைவர் பெரியார் ராமசாமி வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

### நகரசபைத் தேர்தல் ஒத்திவைப்பு

தமிழகத்தில் நகரசபைத் தேர்தல்கள் ஓராண்டு ஒத்திவைக்கப்படவிருக்கிறது. இத் தகவலை தமிழக உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

### மந்திரி சபை விஸ்தரிப்பு

தமிழக அமைச்சரவை விரைவில் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. சில புதிய அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இத் தகவலை தமிழக முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

### தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம்

வைத்தியக் கல்லூரிகளில் திறமை அடிப்படையிலேயே மாணவர்களை சேர்க்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அதே வேளையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வழமைபோல சில இடங்களும் ஒதுக்கப்படவிருக்கிறதாம்.

### 6 கோடி நஷ்டம்

ரூபாய்க்கு 1 படி அரிசி கொடுப்பதால், தமிழக அரசுக்கு ரூ. 6 கோடி ஆண்டொன்றுக்கு நஷ்டம் ஏற்படவிருக்கிறதென்றும் இந்த நஷ்டத்தை ஈடு செய்ய என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பதை தமிழக அரசு ஆலோசித்து வருவதாயும் தமிழக உணவு அமைச்சர் திரு. மதியழகன் தெரிவித்தார். இந்த நஷ்டத்தை ஈடுகட்ட டெல்லி அரசின் உதவியை நாடவிருப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

### கட்சி மாறிய எம். பி. தாக்கப்பட்டார்

பஞ்சாப் சட்டசபையில் ஆளுங்கட்சியாகிய ஐக்கிய முன்னணியிலிருந்து பிரிந்து காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ள பல தேவ் சிங் என்பவர் சட்டசபைக்கு வரும்போது கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார். அவரது பற்களிலிருந்து இரத்தம் கொட்டியபடி சபைக்கு அவர் வந்து சேர்ந்தாராம்.

### நகரசபைக்கு பஸ் சேவை

நகர பஸ் சேவையை நகரசபைகளே ஏற்று நடத்த அனுமதிப்பது பற்றி தமிழக அரசு ஆராய்ந்துவருவதாக பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணநிதி கூறியிருக்கிறார்.

### வட்டி வசூலை ஒத்திவைக்க வேண்டுகோள்

ஆண்டு தோறும் தமிழக அரசு மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய ரூபா 20 கோடி வட்டியை இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்கழித்துப்பெற்றுக்கொள்ளும்படி மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஜெயப்பிரகாஷ் கோரிக்கை

மத்திய அதிக ஸ்திரமாகவும், அதிக ஆதரவுடனும், அதிக தன்னம்பிக்கையுடனும் செயல்பட ஒரு கூட்டு அரசாங்கம் வேண்டுமென்றும், இதுபற்றி காங்கிரஸ் ஏனைய கட்சிகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும ஜயப்பிரகாஷ் நாராயணன் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறும் பேச்சல்ல!

'தம்பி காலக்கண்டன்' என்று கூப்பிட்டுக் கொண்டே படுகுஷியுடன் அலுவலகத்துள் நுழைந்தார் அப்பாக்குட்டி அம்மான்.

'ஏனம்மான் இன்றைக்கு இவ்வளவு குதூகலம்?' என்று கேட்டேன.

'கண்ணை மூடிக் கொள் தம்பி' என்று கூறினார் அம்மான்.

சரி என்ன தான் நடக்கிறது பார்ப்போமே என்று கண்களை மூடிக்கொண்டேன்.

'வாயைத்திற' என்றார் அம்மான். வாய்க்குள் எதையோ திணித்தார். இனித்தது.

ஏதம்மான் இன்று கற்கண்டு? ஏதாவது விசேஷமா?

இல்லைத் தம்பி, எனக்கு ஒரு பேரன் பிறந்திருக்கிறான். அது தான்!

'மகிழ்ச்சியான சமாசாரம் தான்! இது உங்களுக்கு எத்தனையாவது பேரக்குழந்தை?'

'9-வதுபேரக்குழந்தை. ஏன் கேட்டாய்? என்றார் அம்மான்.

'சும்மா கேட்டேன்' என்றேன். அம்மான் விடவில்லை.

'ஏன் தம்பி மறைக்கிறாய். எனது மகற் அதிக பிள்ளைப் பெறுகிறாள என்றா? சிறுபான்மையாயருக்கிற எங்கடை மக்கள் பெருகிறது நல்லதுதானே தம்பீ!' என்றார் அம்மான்.

'சரிதான், ஆனால் பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது; நல்ல முறையில் வளர்க்கவும் வேண்டுமே, அது கிடக்க, இந்தியாவில் கர்ப்பச் சிதைவை சட்ட பூர்வமாக்கப் போகிறார்களாமே!' என்றேன்.

அம்மான் ஒரு துள்ளுத் துள்ளினார். 'என்ன தம்பி பண்பாடு நிறைந்த பாரத நாட்டில் அப்படிச் செய்யப்போகிறார்களா?

'ஆமாம், பெருகி வரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த வேறு வழியில்லையாம். அதுவும் உண்மைதானே!'

'ஆனால், அதுக்கு இது வழியில்லைத் தம்பீ!, இதுகர்ப்பச்சிதைவைச்சட்டபூர்வமாக்கினால் நாட்டில் ஒழுககம் குறையும்; பெண்களின் உடல் நலமும்கெடும், என்ற அம்மான் 'ஒழுக்கம் உயிரினும்ஓம் பப்படவேண்டும் என்று கூறிய வள்ளுவர்பிறந்த நாட்டில் ஒழுக்கம் கெட சந்தர்ப்பம் கொடுப்பது சரியா?' என்றார்.

'அப்போ சனப் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டாமோ?

'தம்பி, சனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். அதற்கு வேறு பல வழிகள் உள்ளன. பணக்காரர்களிலும் பார்க்க ஏழைகளுக்குத் தான் பிள்ளைகள் அதிகம் பிறக்கின்றன. காரணம் என்ன தெரியுமா? பணக்காரர்களுக்குப் பல வழிகளில் பொழுது போக்குவதற்கு வேண்டிய வசதிகள் நிறைய உண்டு. ஆனால் ஏழைகளுக்கு அப்படி வசதியில்லையே! அதுதான் ஏழை வீட்டில் அதிகப் பிள்ளைகள் பிறக்கக்காரணம். ஏழைகளின் வாழ்க்கை நிலையுயர்ந்து, கல்வியிலும் முன்னேறி அவர்களுக்கு போதிய பொழுது போக்கு வசதிகளும் கிடைத்தால், சனப்பெருக்கத்தை பெருமளவில் கட்டுப்படுத்தி விடலாம்' என்று 'லெக்சர்' அடித்தார் அம்மான்.

'சரி அம்மான், நீங்கள் சொன்னதைப் பேப்பரிலேபோடுகிறேன்' என்றேன். இரண்டு நாட்கழித்து வருவதாகக்கூறி அம்மான் விடைபெற்றார்.

# குழந்தை வளர்ப்பு

**தாய்மார்களே! குழந்தை வளர்ப்பு என்பது மிகவும் பொறுப்புள்ள ஒரு வேலை; ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும், அது வளர்க்கப் படும் முறையைப் பொறுத்தே ஏற்படுகிறது. குழந்தை வளர்ப்பு பற்றி தாய்மார்களுக்கு 22 குறிப்புகள் கீழே தரப்பட்டிருக்கின்றன.**

1. சிறு குழந்தைகளுக்கு தினம் 5, 6 வேளைகளுக்கு அதிகமாக ஆகாரம் கொடுக்க வேண்டாம்.
2. இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை குழந்தைகளுக்கு எவ்வித ஆகாரத்தையும்கொடுக்க வேண்டாம்.
3. குழந்தைகளை வெப்பம் நிறைந்த அடைசலறைகளில் அடைத்து வைத்திருந்து, வெளியில் எடுத்துச் சென்றதும், ஜலதோஷம் வந்துவிட்டதென்று கவலைப்பட வேண்டாம்.
4. சூரிய கிரணம் குழந்தைகளின் மீது வீசுவதை தடுக்கவேண்டாம். சூரிய கிரணம் வீசுவதால் குழந்தை நன்றாக வளரும். நோய்களும் வராது.
5. குழந்தைகள் விக்கல் எடுக்கும்போது தண்ணீர் கொடுக்கத் தவற வேண்டாம்.
6. குழந்தைகளின் அழுகைக்கு பசியேகாரணமென்று நினைத்துவிட வேண்டாம். அதிக ஆகாரத்தை உட்கொண்டு விட்டாலும் குழந்தைகள் அழலாம்.
7. நீங்கள் கடித்துத் தின்ற மிச்சத்தை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டாம்.
8. குழந்தைகளை தினந்தோறும் குளிப்பாட்டத் தவற வேண்டாம்.
9. அழுக்கடைந்த உடைகளை குழந்தைகளுக்கு அணிய வேண்டாம்,
10. வயோதிபர்களுடன் குழந்தை படுத்துறங்க விட வேண்டாம்.
11. குழந்தைகளின் முகத்தையும் தலையையும் கம்பளியினாலாவது வேறு எதனாலாவது போர்த்துவது கூடாது.
12. குழந்தைகளை எப்பொழுதும் கைகளிலே வைத்துக் கொண்டிருக்க வேண்டாம். அதனால் குழந்தையினுடைய அங்கங்கள் பின்னப்படுவதுடன், எப்பொழுதும் குழந்தைகளைத் தூக்க வேண்டியும் ஏற்படும்.
13. விரல்களையாவது பொம்மைகளையாவது, குழந்தைகள் சூப்புவதற்கு அனுமதிக்காதீர்கள்.
14. குழந்தைகள் வாயால் மூச்சுவிட அனுமதிக்கக் கூடாது.
15. குழந்தைகளுக்கு பலவந்தமாகஉணவுகொடுக்க கூடாது. உணவு தேவையான நேரம் குழந்தைக்கு தெரியும்.
16. குழந்தைகளை அடிக்கடி நிறுத்துப் பார்க்க தவற வேண்டாம். குழந்தைகள் பிறந்ததும் 5 முதல் 7 இருத்தல் வரையிலும், 5-வது மாதத்தில் அதற்கிரு மடங்கும், ஒரு வருடத்தில் அது போல 3 பங்கும் நிறையிருக்க வேண்டும். நிறை குறைந்தாலும் அதே போல இருந்தாலும் டாக்டரிடம் காட்டுங்கள்.
17. குழந்தைகளுக்கு பூச்சாண்டி காட்டுதலைத் தவிர்க்க வேண்டும்.
18. குழந்தைகளின் நகங்களின் இடுக்கில் அழுக்குச் சேர இடங்கொடுக்க வேண்டாம்.
19. அயலாரும், நண்பர்களும், குழந்தையினுடைய வாயில் முத்தங் கொடுக்க விட வேண்டாம்.
20. குழந்தைகளைச் சுற்றி ஈக்களும், கொசுக்களும், மொய்க்க விட வேண்டாம். வலை போட்டுத் தடுத்துவிடுங்கள்.
21. குழந்தைகள் நோயினால் கஷ்டப்படும் போது டாக்டரின் ஆலோசனையின்றி எந்த வித உணவும் கொடுக்கக்கூடாது.
22. குழந்தைகளை மூட்டைகள் என்று நினைத்துக்கொண்டு 'கீரைக்குத் தண்ணீர் இறைக்க' வேண்டாம்.

## தாய்மார்களுக்கு சில யோசனைகள்

# 4 மணி நேரம் 1 குழந்தையைப் பராமரிக்க 25 ரூபாய்

மணமான பின்னர் கணவனும் மனைவியும் தனிக் குடித்தனம் நடத்த முற்படுவது அமெரிக்காவில் தவிர்க்க இயலாத ஒரு பழக்கமாகிவிட்டது. பெற்றோர் உற்றோர் அடங்கிய பெரிய கூட்டுக் குடும்பங்கள் அமெரிக்காவில் மிகவும் குறைவு. அவற்றை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

கணவன் மனைவியர் கூட்டாய தனிக் குடித்தனம் நடத்த நேரிடுவதன் காரணமாக பல பிரச்சினைகள் அங்கு எழுகின்றன. அமெரிக்காவில் அனேகமாக கணவனும், மனைவியும் வேலைபார்க்கும் பழக்கம் நடைமுறையில் இருப்பதால் குழந்தைகளை வளர்ப்பது அங்கு பெரிய தொரு பிரச்சினை!

ஆனால், செல்வ வளம் கொழிக்கும் அமெரிக்காவில் பணத்தை அள்ளி வீசினால் எந்தப் பிரச்சினையையும் எளிதில் சமாளித்துவிடலாம்; என்றாலும் குழந்தை வளர்ப்பு போன்ற காரணங்களால் தங்கள் வருவாயில் பெரும் பகுதியைத் தொலைத்துக்கட்ட வேண்டியிருக்கிறது என்று அங்கு பெற்றோர் மூக்கால் அழத்தான் செய்கின்றனர். ஏனெனில் வேலைக்காரர்களையோ, வேலைக்காரிகளையோ அமர்த்திக் கொள்வது என்பது அமெரிக்காவில் அளவுக்கு மீறி பணத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரு விஷயம்! 'ஒரு மனைவி தன் வசதிக்கென ஆயிரம் கணவர்களைத் தேடிப் பெறமுடியும், ஆனால் ஒரு வேலைக்காரியை அமர்த்திக்கொள்வதென்பது [illegible] னிய விஷயமல்ல' என்று அமெரிக்காவில் வேடிக்கையாகக் குறிப்பிடுவார்களாம்.

அமெரிக்காவில் வேலைக்காரிகள் நிலைமை எப்படி இருக்கிறது என்பதற்குச் சிறு சான்று ஒன்றைக் காண்போம்.

### வேலைக்காரிகள் நிலைமை

அமெரிக்க தம்பதிகள் ஒரு நாள் திரைப்படக் காட்சி பார்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். அவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது.

அமெரிக்காவில் திரைப்படம் பார்க்கச் செல்லுகையில் குழந்தைகளை உடன் அழைத்துச் செல்லுவதில்லை. அப்படிச் செல்வது நாகரீகக் குறைவு என்பது அமெரிக்கர்கள் கருத்து.

குழந்தைகளுக்கென தனித் திரைப்படக் கொட்டகைகளும், குழந்தைகளுக்கென்றே எடுக்கப்பட்ட தனித் திரைப்படங்களும் அங்கே உண்டு.

## அமெரிக்கப் பெற்றோருக்கு குழந்தை ஒரு தொல்லை

### குழந்தைகளை தனியே விடுவது குற்றம்

குழந்தைகளைத் தனியாக வீட்டில் விட்டுச் செல்ல முடியாது. அப்படிச் செய்வது ஒரு குற்றம் என அமெரிக்க அரசு தடைசெய்திருக்கிறது. குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள நிரந்தரமாக ஆள் போடுவதென்றால் கணவன்—மனைவி ஆகிய இருவர் ஊதியம் முழுவதையும்தரத் தயாராக இருந்தாலும் ஆள் கிடைப்பது கடினம்.

ஆனால் இப்படிப்பட்ட சிக்கலை சில தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தீர்க்க முன் வருகின்றன.

குழந்தைகளைத் தற்காலிகமாக பார்த்துக்கொள்ள உதவும் பல ஸ்தாபனங்கள் அமெரிக்காவில் உள்ளன. அந்த ஸ்தாபனங்களில் ஒன்றுக்கு டெலிபோன் செய்தால் ஆயா (Baby sister) ஒருத்தியை அவர்கள் அனுப்புவார்கள்.

அந்த 'ஆயா'வுக்கு மணி ஒன்றுக்கு முக்கால் டாலர் சம்பளம்; போக்கு வரத்துக்கான கார் செலவும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

### ஐந்து டாலர் செலவு

படம் பார்த்துவிட்டுத் திரும்ப பெற்றோர்களுக்கு நான்கு மணி நேரமாகலாம். அதுவரையில் இந்த ஆயா குழந்தையைப் பார்த்துக் கொள்வாள். பெற்றோர்களின் வழக்கத்தை முன்னதாகக் கேட்டறிந்து அவ்வாறு குழந்தைக்கு உணவு புகட்டுவாள். கணவன் மனைவியர் ஒரு

(14-ம் பக்கம் பார்க்க)

## சில வீட்டுக் குறிப்புகள்

ஸ்டவ்வில் சோறு வடிக்கும்போது சிமசமயம் பொங்கி வழிந்து, ஸ்டவ்வை அணைத்துவிடுவதைக் காணலாம். இதைத் தவிர்க்க ஒரு சுலபமான வழி. சோறு பொங்கி வரும் போது, அதில் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய் ஊற்றிவிட்டால், பிறகு அது பொங்காது. உள்ளடங்கியே கொதித்துப் பக்குவமாகி விடும்.

●

துவரம்பருப்பு சரியாக வேகாவிட்டால், அதில் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெயும், சிறிது சமையல் சோடாவும் போட்டால் நன்றாக விரைவில் வெந்துவிடும்.

●

விலையுயர்ந்த புடவைகளில் எண்ணெய்க் கறை பட்டுவிட்டால், அதைப்போக்க ஒரு எளிய வழி இதோ. கறைபட்ட இடத்தில் சிறிதளவு விபூதி வைத்து, நன்றாகத் தேய்த்துவிட்டு ஒரு துணியால் துடைத்தால், கறை பளிச் சென்று அகன்று விடும்.

●

உபயோகப் படாமல் இருந்த பிளாஸ்குகள் நாற்றம் வீசுகின்றனவா? முதலில் சிறிதளவு 'வினிகர்' ஊற்றி சற்று நேரம் ஊறவைத்துவிட்டு, பிறகு குளிர்ந்த நீரை ஊற்றிக் கழுவினால் நாற்றம் போய்விடும். 'வினிகர்' கடைகளில் கிடைக்கும்.

—சீதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சியின் அடுத்த நடவடிக்கை தெரியுமா?

## 'எத்த' கூறுகிறது கேளுங்கள்!

'தமிழரசுக் கட்சியின் எண்ணத்தின்படி 22 மாவட்டங்களில் மாவட்டசபை அமைப்பது உறுதியாகிவிட்டதால், கட்சியின் அடுத்த நடவடிக்கை தனித் தனி மசோதாக்கள் மூலம் மாவட்டசபைகளுக்கு அதிகப்படியான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தைத் தூண்டுவதேயாகும் என்று முல்லைத்தீவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது' இவ்வாறு 'எத்த' (10-5-67) ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'மாவட்ட சபைமசோதாவைச் சமர்ப்பிப்பதில் செயல் முறையில் ஏற்பட்டிருந்த எல்லாக் கஷ்டங்களுக்கும் பதில் கொடுக்கப்பட்டு விட்டது என்று கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறினர்.

'வட, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்ற சேவையை தமிழர்களுக்கு மட்டும் ஒதுக்குவதற்காக ஒரு குறிப்பிட்ட சம்பளவிகிதத்தைச் சேர்ந்த ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் நேரடியாக! ஊராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் செனட்சபையில் சமர்ப்பித்துள்ள மசோதாவை உதாரணமாகக் கொண்டு, ஒவ்வொரு, விடயத்துக்கும் தனித்தனி மசோதாக்களை தயாரிப்பதின் மூலம் மாவட்டசபைகளுக்கு அதிகப்படியான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

'தமிழரசுக் கட்சி இந்த மசோதாவால் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் நோக்கம், மாவட்டசபை நிறுவுவதின் மூலம் நிறைவேறும் என்று திரு. திருச்செல்வம் திட்டவட்டமாகக் கூறினர்.

'காணி வினியோகம், குடியேற்றத் திட்டங்களை நிறுவுதல் ஆகியவை பற்றி மாவட்ட சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதற்காக இடைக்கால மசோதா ஒன்றினைத் தயாரிப்பது தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கையாக இருத்தல் வேண்டுமென்று தீர்மானத்துடன், இது சம்பந்தமாக அண்மையில் பேச்சு வார்த்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.'

## சிங்கள விசேட விதிகள் இனி இல்லையாம்

### சிங்களே கூறுகிறது

'ஏழு கட்சி கூட்டரசாங்கத்தின் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் அவசியமான விசேட விதிகளை இயற்றுவதாக மக்களுக்கு வாக்களித்திருந்தார். அந்த விதிகளை நிரந்தரமாகப் புதைத்து விடுவதென்று இப்பொழுது தீர்மானிக்கப் பட்டுள்ளது' இவ்வாறு ஒரு செய்தியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்த ஏடான 'சிங்களே (1-5-77) வெளியிட்டுள்ளது.

1966 ஜனவரி 8-ந் திகதி தமிழ் விசேட விதி மசோதாவை நிறைவேற்றிய போது சிங்கள விசேட விதி மசோதாவையும் தாங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப் போவதாக அவர்கள் கூறினர்.

இப்பொழுது தமிழரசுக் கட்சியின் நிர்ப்பந்தத்தின் மீது ஏனைய வாக்குறுதிகளைப் போலவே இந்த வாக்குறுதியையும் கைவிட்டு விட்டனர்.

தமிழ் மொழி விசேட விதிகளால் சிங்களம் மட்டும் சட்டத்துக்குத் தீங்கு ஏற்படுமென்று அகில இலங்கைவிப்பிக்கரு சங்கம் அன்று பிரதமருக்குச் சுட்டிக்காட்டியபோது சிங்கள மொழி விசேட விதிகளை இயற்றும் போது சிங்கள மக்களின் ஐயப்பாடு நீங்கி விடுமென்று பிரதமர் பதிலளித்தார்.

அவ்வாறு கூறி 15 மாதங்கள் கடந்து விட்டன. இன்றுவரை அதற்காக எந்த ஏறபாடும் செய்யப்படவில்லை.

சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் விசேட விதிகளைத் தயாரிக்குமாறு திறைசேரிக்கோ, அரசாங்கச் சட்டநகல் தயாரிப்பாளர்களுக்கோ இதுவரை எத்தகைய சுட்டளையும் கொடுக்கவில்லை.

இதற்கிடையே தமிழ் மொழி விசேட விதிகளை அமுல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பெருமளவு செய்யப்பட்டுள்ளன.

வட, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் தமிழிலேயே செய்வதற்கான ஏற்பாடுகளை கூடிய விரைவில் செய்யுமாறு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ஏற்கனவே விசேட உத்தரவு பிறப்பித்துள்ளார்' என்று 'சிங்களே' மேலும் குறிப்பிட்டுள்ளது.

## சிங்கள இதழ்களில்...

### தேரோவின் புத்தகம்

இம் மாதம் நடைபெற விருக்கும் வெசாக் விழாவுக்கு முன்பு தன்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்யாவிட்டால் பண்டாரநாயக்க கொலை சம்பந்தமாக சில நபர்களின் பெயர்களை வெளியிடுவதாக இக் கொலைவழக்கில் ஆயுள் தண்டனை பெற்று தற்போது சிறைவாசம் செய்யும் புத்தரக்கிரத்த தேரோ கூறியிருப்பதாக அறியப்படுகிறது. சில பிரமுகர்கள் வெசாக் தினத்தன்று அவரை விடுதலை செய்யுமாறு கோரியிருக்கின்றனராம்.

பண்டார நாயக்க கொலைச் சதியின் பின்னணியை விளக்கி புத்தரக்கித்த தேரோ ஒரு புத்தகம் எழுதியிருப்பதாக கூறப்படுகிறது.

—எத்த (9-5-1967)

### 'கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கும் ஏற்பாடுகள் நாசம்'

#### சிங்கள ஏட்டின் கட்டுக் கதை

கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கும் ஏற்பாடுகள் முழுவதையும் அரசாங்கம் நாசமாக்கி விட்டதென்றும், இதற்காக செல்வநாயகம்—தொண்டமான் கோஷ்டியின் நிர்ப்பந்தத்தின் மீது தயாரிக்கப்பட்டுள்ள ஒரு நுட்பமான உபாயம் இப்பொழுது வெளியாகியுள்ளதென்றும் 'பேயா எத்த, என்னும் வாராந்த சிங்கள ஏடு (8-5-67) எழுதியுள்ளது.

கடற்கரையோர காவற் படையிலுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையையும், இச் சாவலுக்காக உபயோகப்படுத்தும் துப்பாக்கி வெடி மருந்து ஆகியவற்றின் தொகையையும் குறைப்பதின் மூலம், கள்ளக் குடியேற்றக் காரர்களை இலங்கைக்குக் கொண்டுவரும் ஏஜண்டுகளுடன் தொடர்புள்ள இராணுவத்தினரையும் அதிகாரிகளையும் கடமையாற்ற நியமிப்பதின் மூலமும் இந்த உபாயம் அமுலாக்கப் படுகிறது என்று 'போதா எத்த' கூறுகிறது.

புள்ளி விவரங்கள் எப்படியிருந்தாலும், கூட்டம் கூட்டமாக இந் நாட்டுக்கு வரும் கள்ளக் குடியேற்றக்காரர்களின் தொகை மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவர்களிற் பலர் முன்பு இங்கு வந்து பிடிபட்டு, திருப்பி அனுப்பப்பட்டவர்களாதலின் பிரச்சினை கடுமையாகியுள்ளது.

இவ்வாறு இரண்டாவது முறையாக வரும் கள்ளக்குடியேற்றக்காரர்களுக்குச் சிங்களம் பேசத் தெரிந்திருப்பதாலும் அவர்களுக்கு இலங்கையில் கிராமங்களின் பெயர் தெரிந்திருப்பதாலும் அவர்களைக் கண்டு பிடிப்பது கடினமாகும். அவர்களுக்கு வடபகுதியில் தமிழரசுப் பிரமுகர்களின் பாதுகாப்பு கிடைப்பதால் பிரச்சினை மேலும் மோசமாகியுள்ளது.

கள்ளக் குடியேற்றக் காரர்களை வைத்திருப்பதாகச் சந்தேகப்படும் மீன்வாடிகளையும், படகுகளையும் சோதனை செய்வதற்குக் கடற்கரையோரக் காவற்படைக்கு முதலில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததென்னும்' இப்பொழுது சோதனையிடுவதைப் பூரணமாகத் தடுத்திருப்பதால், கடற்கரையிற் சந்திக்கும் கள்ளக்குடியேற்றக் காரர்களை மட்டுமே அவர்கள் கைது செய்யமுடியும்' என்று இச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


### உதயசூரியன்

'இந்திய நாம் தமிழர் கட்சியின் ஆலோசனையின் மீது தமிழ் மக்களை ஒன்றுபடுத்துவதற்காக புதிய ஸ்தாபனமொன்று இம்மாதம் 2-ந் திகதி பலாங்கொட ராஸ்ஸகலத் தோட்டத்தில் நிறுவப்பட்டது.

'உதய சூரியன்' என்பதே இந்த ஸ்தாபனத்தின் பெயர்.

திரு. அண்ணாதுரையின் யோசனையின் மீது நிறுவப்பட்டுள்ள இந்த சங்கத்தின் கூட்டத்தில் அவரது படம் ஒன்றும் திறந்துவைக்கப்பட்டது.

—எத்த (11-5-67)

பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நி். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 3597—6322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய், மனைவி உட்படப் 15 பேர் 31 நிமிடத்தில் சுடப்பட்டனர்!

# அமெரிக்காவை உலுக்கிய— பயங்கரப் படுகொலை—

**1966-ம்** ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள்—

அமெரிக்காவிலுள்ள டெக்சாஸைச் சேர்ந்த ஆஸ்டினில் துப்பாக்கிக் கடை ஒன்றுக்குள் பரபரப்போடு நுழைந்தான் ஒரு வாலிபன்; கடைக்காரர்களின் புருவங்கள் ஏனே அவன் பரபரப்பினைக் கண்டு வினாக்குறியாக வளைந்தன.

அங்கே இருந்த அத்தனைவகைத் துப்பாக்கிகளையும் எடுத்துச் சோதனை செய்து பார்த்த அவன்—இராணுவத் துப்பாக்கிகள் பல அடங்கிய பெட்டிகள் சிலவற்றை விலைபேசினான்; கடைக்காரர்கள் குறித்த விலைக்கு மாறுபாடு பேசாமல்——கிறுகிறுவென்று ஒரு 'செக்'கைப் போட்டு அவர்களிடம் நீட்டினான் அந்த இளைஞன்.

''எதற்காக இந்தத் துப்பாக்கிகள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ளலாமா?''—கடைச் சிப்பந்தி ஒருவர் பணிவுடன் கேட்டார்.

''காட்டுப் பன்றிகளை வேட்டையாடவே இந்தத் துப்பாக்கிகள்''—அமைதியாகவே பதில் சொன்னான் அவன்.

அந்தச் சமயத்தில் நகருக்குள்ளே காட்டுப் பன்றிகளின் அட்டகாசம் மிகுந்திருந்ததனால்——அவன் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்.

அதே துப்பர்க்கிகள்—பின்னர் ஒருநாள் 15 பேர்களின் உயிரைக் குடித்து, 31 பேர்களைக்காயப் படுத்திய போதுதான்—ஏன் அதை அவன் அத்தனைப் பரபரப்போடு வாங்கினான் என்பதை அந்தத் துப்பர்க்கி வியாபாரிகளால் புரிந்துகொள்ள முடிந்தது!

அத்தனைத் துப்பாக்கிகளை வாங்கி இத்தனை உயிர்களைச் சேதப் படுத்திய அவன்தான சார்லஸ் ஜே. விட்மன்!

அந்த விட்மனைப் பற்றிய சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

'கொலை வெறி'யின் உச்சக் கட்டத்திற்குச் சென்றுவிட்ட அவன் தனது இரண்டாவது வயதிலேயே துப்பாக்கி விளையாட்டு விளையாட ஆரம்பித்துவிட்டான்; இங்கே துப்பாக்கி என்று குறிப்பிடுவது பொம்மைத் துப்பாக்கி அல்ல; உயிர் குடித்திடும் உண்மைத் துப்பாக்கி!

### சின்ன வயதில்...

சின்ன வயதிலேயே இப்படி துப்பாக்கிபிடித்த சார்லஸ் விட்மன்தான் தனது 25 வது வயதிலே, இப்போது அமெரிக்காவின் கொலைக் குற்றவாளிகளின் பட்டியலில் 15 பேரைக் கொன்று ஒரு புதிய ரெகார்டை உண்டாக்கியவன்.

எப்போது பார்த்தாலும் நகத்தையே கடித்துக் கொண்டிருக்கும் விட்மன், அந்தக் கொலை பாதகத்தை டெக்சாஸ் நகரப் பல்கலைக் கழகத்து 307 அடி உயர மணிக் கூண்டின் மேலே இருந்துதான் நடத்தினான்.

இந்தத் துயரச் சம்பவம் நிகழுவதற்கு ஒரு வாரத்தின் முன்புதான், அந்தக் கோபுரத்தின் உச்சிகுத் தன் தோழர்களோடும் சகோதரர்களோடும் சென்று பார்வையிட்டு வந்தான் அவன்.

கொலைச் செயலுக்குத் தகுதியான இடம் இதுதான் என்று அவன் அப்போதே தீர்மானித்துக் கொண்டானே என்னவோ! அவனுக்கே அது வெளிச்சம்!

அந்த 307 அடி உயர மணிக்கூண்டில் பதுங்கிக் கொண்டும்—அதற்குப் பின்னால் இருந்த சிவப்பு ஓட்டுக் கூரையின் மேல் அங்கு மிங்குமாகத் தாவியும் தான்—நாலா பக்கத்து வீதிகளிலும் போய் வந்துகொண்டிருந்தோரைக் குறி வைத்துத் தீர்த்துக் கட்டியிருக்கிறான் இந்த விட்மன்!

இதிலே ஒரு ஆச்சரியம் என்ன வென்றால், அதே டெக்சாஸ் நகரப் பல்கலைக் கழகத்தில் கட்டடத் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றுவந்த விட்மன் மிகவும் சாந்தமானவன; இவனுக்கு எதிரிகளே கிடையாது!

### 2 துப்பாக்கி 46 குண்டுகள் 15 பேர் பலி

போவோர் வருவோரையும் வீதியிலே நின்று கொண்டிருந்தோரையும், கார் சவாரி செய்து செய்துகொண்டிருந்தோரையும் மட்டுமே அவன் சுட்டுக் கொல்லவில்லை; அதற்கெல்லாம் முன்பாகத் தன் பெற்ற தாயையும், தழுவிக் களித்த மனைவியையும்கூட சுட்டுக் கொலை செய்திருக்கிறான் அவன்.

இரண்டுக்கு மேலான துப்பாக்கிகளால்—46 குண்டுகள் அவனால் வெடிக்கப்பட்டிருக்கின்றன. 31 நிமிடத்தில்! அந்த 31 நிமிடத் துப்பாக்கி சத்தத்துக்குத்தான் 15 பேர் பலியாயினர்; 31 பேர் செத்தும் சாகாத பரிதாப நிலையினை அடைந்தனர்!

46-வது துப்பாக்கி ரவையினலே 307 அடி உயர மணிக கூண்டுக்குக் கீழே இருந்த புத்தகக் கடையில் நின்று கொண்டு எதையோ படித்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தின் உயிரைச்சூறையாடி விட்டு—இந்தக் கூரையிலிருந்து அடுத்த கட்டடத்தின் மாடிக்குத் தாவினான் விட்மன்; இதற்கு நடுவே கீழே சூழ்ந்திருந்த அமெரிக்கப் போலிசார் அவனை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். போலிசாரின் துப்பாக்கிக் குண்டிலே ஒன்று—அடுத்த மாடிக்குத் தாவிய விட்மனின் விலாப்புறத்தைச் சல்லடையாக்கியது!

அத்தனை உயரக் கட்டிடத்திலிருந்து சுற்றி வந்து—தான் சுட்டு வீழ்த்திய பிணங்களின் நடுவே இரத்த வெள்ளத்திலே விழுந்தான் சார்லஸ் விட்மன்.

அவனுடைய பிணத்தைச் சோதித்த மருத்துவர்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்திருகக வேண்டுமென்று நிர்ணயித்துச் சொன்னார்கள்.

### போலிசார் கருத்து

1952-ல் வெளிவந்த 'தி ஒப்பன் ஸ்கொயர்' என்ற படத்தில, டெக்சாஸ் பலகலைக் கழக மணிக் கூண்டு போன்ற கோபுர மொன்றில் ஒளிந்து கொண்டு, நாலா பக்கதது வீதியிலும் போவோர் வருவோரை ஒரு வாலிபன் சுட்டுக் கொன்று குவிப்பதாக காட்டப்பட்டது.

இதே போன்ற துப்பாக்கி நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து 1962-ல்போர்ட் கிளார்க் என்பவர் ஒரு புத்தகம எழுதியிருந்தார்.

சென்ற மார்ச் மாதம் தான் தன் கணவனுக்கும் தனக்கும் இனி சரிப்படாது என்று பிரிந்து விட்டாள்.

இது பற்றித் தனது கல்லூரிப் பேராசிரியர் மொரீஸ ஹீட்லியிடம் பேசிக் கொண்டிருந்த விட்மன்—' அப்பாவைப் பற்றி நினைக்கும் போது, இந்தக் கல்லூரி 'டவரி'ன் மேல் குந்தி போவோர் வருவோரையெல்லாம் சுட்டுத் தீர்க்க லா மா என்று கூட கோபத்தின் நடுவே வெறிப்பிடித்து விடுகிறது'' என்று குறிப்பிட்டான் விட்மன்.

அப்போதே— 'அப்படியெல்லாம் ஆத்திரப் படாதே நீ' என்று அந்தப் பேராசிரியர் அவனுக்குப் புத்திமதிகள் சொல்லி அனுப்பி வைத்திருக்கிறார்.

திருமணமாகி நான்காண்டுகளாகியும் விட்மனுக்குக் குழந்தையில்லாமலிருந்தது; மனைவி சததலீன் ஒரு தொலைபேசி நிலையததில் வேலை பார்த்து வந்தாள்.

### கத்தலீனுக்கு சூடு

''அடிக்கடி எனக்குப் புத்தி பேதம் உண்டாகிவிடுகிறது'' என்று சொல்லி வந்த விட்மன், அதை நிரூபிப்பதற்காகவோ என்னவோ—அவளை ஒரு தனி இடத்துக்கு அழைத்துப் போய் நிறுத்தி, பிடரிப் பககத்தில் சுட்டு அவள தலையைச் சிதறடித்தான்; வலது கை எலும்புகளைச் சுக்கு நூறாக உடைத்துச் சின்னபின்னப் படுத்தினான்!

நடுப்பகல் 12.30க்கு இது நடந்தது; கத்தலீனை நிர்வாணமாக்கி வீட்டுககுத் தூக்கி வந்து கட்டிலின் மேல் போட்டான் அவன்; கொலைவெறி அவன் கண்களைக் கோவைப்பழமாக்கியது; இது நடந்த இரண்டரை மணிநேரத்தில்—அதாவது சரியாக 3 மணிக்கு தன் தாயாரையும் சுட்டுக் கொன்றான் அந்த மாபாதகன்!

இந்த வெறிமாட்டத்தை முடித்து விட்டு மறு நாள் சரியாக 11 மணிக்கு—

## கொலை செய்தவனைப் பற்றி சுவையான தகவல்கள்

—ஒன்று ... சார்லஸ் விட்மன் அந்தப் படத்தைப் பார்த்திருக்கவேண்டும்; அல்லது போர்ட் கிளார்க்கின்புத்தகத்தைப்படித்திருக்கவேண்டும். அதுதான்—துப்பாக்கி சுடுவதிலே கைதேர்ந்தவனான விட்மனுக்கு இப்படி ஒரு வண்ணம் வரக் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்பது அமெரிக்கப் போலிசாரின் அபிப்பிராயமாகும்.

தனது வீட்டையே ஏதோ துப்பாக்கிக்கடை போல அலங்கரித்து வைத்திருந்த விட்மன்—ரோமன் கத்தோலிகக வகுப்பினைச் சேர்ந்தவன். பேப்பர் விற்பவனாகவும், கால் பந்தாட்டக் குழு ஒன்றின் தலைவனாகவும், ஐவுளிக் கடைத் துணி விற்பவனாகவும் அவன் இருந்திருக்கிறான்.

இரண்டு சகோதரர்களைப் பெற்றிருந்த விட்மன், 12-வது வயதிலே 'ஈகிள் ஸ்கவுட்'டில் சேர்ந்தான்; துப்பாககி சுடுவதிலே அப்போது அவனுக்கு இணையாக யாருமே இருந்தது கூடையாது.

1962-ம் ஆண்டில் தனது கல்லூரியிலே ஆசிரியை பயிற்சி பெற்று வந்த கத்தலீன் லெய்சனோர் என்பவளைத் திருமணம் செய்துகொண்டான் விட்மன்; அவன்மீது அன்பு கொண்டோரில் இவளும் அவனது தாயாருமே குறிப்பிடத்தக்கவர்கள். தந்தையாரில் இவனுக்கு ஏனோ பொல்லாத வெறுப்பு. அவரும் இவனை உதாசீனப படுத்தி வந்தார்.

### மனைவி பிரிந்தாள்

16-வது வயதிலேயே தன்னோடு படித்த மற்ற மாணவர்களுக்குத் துப்பாக்கி சுடும பயிற்சி அளிக்கும் அளவுககு இவன் திறமை பெற்றிருந்தான்; ஒரு சமயம் கல்லூரியிலே துப்பாக்கி சுடும் போட்டி நடந்தபோது கூட 250 'பாயிண்டு'களைக் குறி வைத்து ஒன்று கூடப் பிசகாமல் அடித்து இவன் முதல் பரிசு பெற்றிருக்கிறான்.

நாளடைவில் அடங்காப் பிடாரித்தனமாக நடந்து கொண்ட அவனைக் கட்டுப்படுத்திட முடியாமல —விட்மனின் தந்தை தன் மனைவியைக் [illegible]த்தார்; இதிலே [illegible]ப்புற்ற அவள்,

ஒரு ரெமிங்டன் துப்பாக்கி, ஒரு டெலஸ்கோப் குறிவைத்து நெடுந் தூரத்திலிருப்போரை சுடுவதறகான அளவு கண்ணாடி, 9எம்.எம். அளவுள்ள லக்கர் பிஸ்டல், காலஸி பிராசியா பிஸ்டல், 357 அளவுள்ள வெஸ்ஸன் மாக்னம் ரிவால்வர், இவை தவிர இன்னும் மூன்று கைத் துப்பாக்கிகள் ஆகியவற்றோடு இராணுவ வீரனைப் போல வீட்டைவிட்டுவெளியே வநதான் அவன்!

### 30-வது மாடியில்

நேரே தனது கல்லூரிக் கட்டிடத்துக்கு வந்து சேர்ந்தான். 'எலிவேட்டர்' மூலம் 27-வது மாடிக்குப்போன அவன் அங்கே எட்னா டான்சே (47) யைத் தீர்த்துக் கட்டினான்; இன்னொரு பெண்ணைக் காயப்படுத்தினான்! பிறகு 30-வது மாடிக்குப் போய் அங்கே மார்க்கபோரைச் (17) சுட்டுத் தள்ளினான்.

இதன் பிறகு கட்டிட உச்சியிலே தங்க விளிம்புகளோடு பொருத்தப்பட்டுள்ள கடிகாரத்தின் கீழேபோய் உட்கார்ந்து கொண்டான் அவன்; அங்கே போய்த் தடுக்கவோ பிடிக்கவோ யாருக்கும் துணிவில்லை.

சரியாக 11.48க்கு அவனுடைய துப்பாக்கி அலற ஆரம்பித்தது! கால் மணி நேரத்தில் 6 முறை வெடித்துவிட்டு கொஞ்ச நேரம் அவன் அமைதியானான். கல்லூரிக் கட்டிடத்து உச்சியிலிருந்து துப்பாக்கி வெடிச் சப்தம் கேட்கவே—கீழே நின்றுகொண்டிருந்தவர்களெல்லாம் அலறி அடித்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடி ஒளிந்தனர்.

நான்காவது மாடியிலிருந்த நார்மா பார்க்கர் என்பவள் வெளியே எட்டிப்பார்த்தபோது 6பேர் கீழே விழுந்து கிடப்பது தெரிந்தது; துப்பாக்கிப் பயிற்சிக்கான ஒத்திகை நடக்கிறதோ என்று முதலில் நினைத்த அவள்—அந்த உடல்களிலிருந்து ரத்தம் பீறிடுவதைக் கண்டு கதிகலங்கிப்போய் தொலை தூரக் கண்ணாடி மூலம் மேல் மாடியைப் பார்த்தாள்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1967 மே மாதம் 16-ம் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

## பாரதம் காட்டும் வழி

'இந்தியக் குடியரசின் புதிய தலைவராகப் பதவி ஏற்றுள்ள டாக்டர் ஸாகிர் ஹுசேன் அவர்களுக்கும், உதவித் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களுக்கும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் சார்பில் வாழ்த்து கூறுகின்றோம்.

டாக்டர் ஹுசேன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதில் ஈழநாட்டின் சிறுபான்மை மக்கள், சிறப்பாக முஸ்லிம் மக்கள் பெருமகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நவபாரதத்தில் பெரும்பான்மையோருடன் சிறுபான்மையோரும் சம உரிமை பெற்று சரிநிகர் சமானமாக வாழ்கின்றனர் என்பதை அவரது தெரிவு உலகத்துக்கு எடுத்துக்காட்டிவிட்டது. நாட்டின் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவியை வகிப்பதற்கு அந்நாட்டின் எந்தக் குடிமகனுக்கும் உரிமை உண்டு என்பதை மக்கள் அங்கீகரித்துவிட்டனர். இனமோ, மதமோ, மொழியோ அந்த உரிமைக்குக் குந்தகம் விளைவிக்க முடியாது.

43 கோடி மக்கள் வசிக்கும் இந்தியாவில் முஸ்லிம்களின் தொகை சுமார் 4½ கோடியாகும். முஸ்லிம்கள் பெருந்தொகையாக வசித்த பிரதேசங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்று 'பாகிஸ்தான்' என்ற பெயரில் ஒரு தனி நாடும் நிறுவிக் கொண்டன. இந்த நிலையில்தான் ஒரு முஸ்லிம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இதிலிருந்து அந்த நாட்டில் முஸ்லிம் மக்களின் ஜீவாதாரமான உரிமைகள் நன்கு பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்பதும், முஸ்லிம் மக்கள் எல்லாப் பாதுகாப்புடனும் அச்சமின்றி அங்கு வாழ்கின்றனர் என்பதும் தெளிவாகிறதல்லவா? பாகிஸ்தான் பிரிந்து சென்றிராவிட்டாலும்கூட, அந்த முஸ்லிம் மக்களும் எல்லா உரிமைகளுடனும் இந்திய உபகண்டத்தில் சமத்துவ அடிப்படையில் வாழ்ந்திருக்கமுடியும் என்பதும் இன்று நிரூபணமாகிவிட்டது.

தி.மு.க., எதிர்க்கட்சி அணியின் ஐக்கியத்தைக் காப்பதற்காக டாக்டர் ஹுசேனை எதிர்த்து வாக்களித்தாலும், அவர் தெரிவுசெய்யப்பட்டதை அறிஞர் அண்ணா சிறப்பாக வரவேற்றுள்ளார்.

டாக்டர் ஹுசேன் ஒரு காந்தியவாதி. சிறந்த கல்விமான். உயர்ந்த பண்பாளர். காந்தி அடிகள் கனவு கண்ட இராம ராஜ்யத்தை நிறுவ வேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டவர். ஆயினும், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்ட நபர் முக்கியத்துவம் பெறவில்லை.

'பாரதம் சமயச் சார்பற்றது' என்ற உன்னத இலட்சியமே முக்கியத்துவம் பெற்றது. அது வெற்றியும் கண்டது. சுதந்திரம் பெற்ற பின்னர் இந்தியா மதச் சார்பற்ற நாடாகவே விளங்கியதெனினும், இம்முறைதான் இக்கொள்கையைத் திட்டவட்டமாகச் செயல்மூலம் உலகறியப் பறைசாற்றியது.

இக்கொள்கையில் உறுதியாக நின்று, தமது அரசாங்கம் சமயச்சார்பற்றதென்பதைநிரூபித்ததற்காகப் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் துணிச்சலைப் பாராட்டுகின்றோம். இஃது இலங்கையிலுள்ள எதிர்க் கட்சிகளுக்கும், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதன் தலைவிக்கும் நல்ல படிப்பினையாகும்.

டாக்டர் ஹுசேனின் தெரிவு சிங்கள பௌத்த அரசாங்கமொன்றினை இங்கு நிறுவ வேண்டுமென்று கூச்சலிடுபவர்களுக்குப் பேரிடியைப் போன்றதாகும். நம்நாட்டு வகுப்புவாதிகளுக்கு, மீண்டும் நல்ல வழியைக் காட்டியிருக்கிறது பாரத நாடு. இனவாரி, மதச்சார்புள்ள அரசாங்கத்தை நிறுவும் குறுகிய மனப்பான்மையை அவர்கள் இனிமேலாவது கைவிட்டுவிடுவார்களென்றே நம்புகின்றோம்.

இந்தியாவில் ஒரு முஸ்லிம் ஜனாதிபதியாக முடியுமென்றால் இலங்கையில் ஒரு தமிழரோ, ஒரு முஸ்லிமோ ஏன் தேசாதிபதியாக முடியாது? அத்தகைய பரந்த எண்ணமும், பெருந்தன்மையும், அரசியல் வளர்ச்சியும் சிறந்த பண்பாடும் இந்த நாட்டு மக்களுக்குக் கிடையாதா?

ஈழத்தில் குடியரசு நிறுவப்பட்டதும், அதன் முதலாவது ஜனாதிபதியாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரைத் தெரிவுசெய்யும் பரந்த மனப்பான்மை ஈழமக்களுக்கு இருத்தல் வேண்டும். அதுதான் டாக்டர் ஹுசேனின் தெரிவு இந்நாட்டுக்குக் கற்பிக்கும் படிப்பினை!

## ஒப்பந்தத்துக்குச் சாவுமணி

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை தொடர்ந்து எதிர்க்கட்சிகள் விஷமத்தனமான வகுப்புவாதப் பிரசாரத்தில் இறங்கியுள்ளன. அதற்காக அப்பழுக்கற்ற வகுப்புவாத ஸ்தாபனமான "நாம் சிங்களவர்" இயக்கத்துக்கும் புத்துயிரளித்துள்ளன.

மசோதா ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. இக்குழு மசோதாவுக்குப் பல்வேறு திருத்தங்களைச் சிபாரிசு செய்யக்கூடும். அதன் பிறகே மசோதாவின் முழு உருவம் தெரியும். அதற்குமுன்பு மசோதாவை எதிர்த்துப் பிரசாரம் செய்வது விஷமத்தனமாகும்.

மசோதா பற்றி தத்தம் கருத்துக்களைப் பொது மக்களும், ஸ்தாபனங்களும் தெரிவுக்குழுவிடம் தெரிவிக்க வசதியளிக்கப்பட்டிருக்கும்போது, வெளியே மக்களிடம் சென்று பிரசாரம் செய்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது?

ஆதலின், இப்பிரச்சாரத்தில் ஓர் உள்நோக்கம் இருக்கிறது. அது தான் ஒப்பந்தத்துக்குச் சாவுமணி அடிப்பது. இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படுபவர்களைத், தனி இடாப்பில் பதிய வேண்டுமென்று கூறுகின்றனர். இது ஒன்றே ஒப்பந்தத்துக்கு குழிதோண்டிவிடும்.

தனி இடாப்பில் பதிவுசெய்வது, அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்குவதாகும்—இதர மக்களிடமிருந்து பிரித்து ஒதுக்கி வைப்பதாகும்—அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதாகும். பிரஜாவுரிமை வழங்கிய பிறகும் அவர்களைச் சந்தேகப்படுவதனால், அந்தப் பிரசாவுரிமையால் அவர்களுக்குப் பயனில்லை. தென்னாபிரிக்காவைப் போன்ற இன ஒதுக்கல் கொள்கைக்கு அவர்கள் இணங்கமாட்டார்கள்.

கட்டாய நாடு கடத்தல் பிரசாரம் சிங்கள மக்களை ஏமாற்றவே உதவும். அதனை அமுல் நடத்தவே முடியாது. ஆகவே எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுள்ள பிரசாரம் ஒப்பந்த அமுலைத் [illegible] பயங்கரமான வகுப்புவாதச் சூழ்நிலையையும் உருவாக்கி விடுமென்றும் எச்சரிக்கின்றோம்.

# கட்டாய நாடு கடத்தலும் தனி வாக்காளர் பட்டியலும்

# திருமதி சிறிமாவோ நடத்தும் அரசியல் செப்படி வித்தை

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கிளப்பி விடப்பட்டிருக்கும் வகுப்புவாதப் பூதம் மிகப் பயங்கரமாக விசுவரூபமெடுத்து வருகிறது. நாளிலும் பொழுதிலும் இந்த மசோதாவுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டிவிடும் முயற்சி நடைபெற்று வருகிறது. இந்தப் பிரசாரத்தில், சுதந்திரக்கட்சியினருடன் மல்வத்தை பீடாதிபதியும் சேர்ந்து கொண்டிருக்கிறார்.

இலங்கை இந்தியர் பிரச்சினை குறித்து, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே 1964-ம் ஆண்டு உருவான ஒப்பந்தத்தின் மாதா, இன்று அவ்வொப்பந்தத்தை அமுல் நடத்தும் மசோதாவை எதிர்த்து நடக்கும் பிரசாரத்துக்கு தலைமை தாங்கும் எதிர்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ அம்மையாரே என்பதை இலங்கை மக்கள் மறந்து விடமாட்டார்கள். அவ்வொப்பந்தத்துக்குப் பெயரே சிறிமா - சாத்திரி ஒப்பந்தம் என்பதே.

### திருமதி சிறிமாவோ கூறும் 2 காரணங்கள்

இன்று அவ்வொப்பந்த அடிப்படையில் எழுந்த இலங்கை இந்திய மசோதாவை எதிர்ப்பதன் மூலம் சிங்கள மக்களின் பாதுகாவலன் போல தன்னைக் காட்டிக் கொள்ள முற்பட்டுள்ள திருமதி சிறிமாவோ, அம் மசோதாவை எதிர்ப்பதற்கு கூறும் காரணங்கள் இரண்டு. ஒன்று, மசோதாவில் கட்டாய நாடு கடத்தல் கிடையாதென்பது: மற்றது இலங்கைப் பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்படும் மலையகத் தமிழர்களை தனி வாக்காளர் ஜாபிதாவில் வைக்க வேண்டுமென்பது.

### ஒப்பந்தமே உருவாகியிருக்காது

சிறிமாவோ — சாத்திரி உடன் படிக்கையில் இவையிரண்டுக்கும் சிறிதும் இடம் கிடையாது. இன்று இந்தியர்களைக் கட்டாயமாக நாடு கடத்த வேண்டுமென்று கூறும் திருமதி சிறிமாவோ, கட்டாய நாடு கடத்தலை தாம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்திலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கலாமே! இப்படி அன்று காலஞ்சென்ற திரு. சாத்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது கூறியிருந்தாரென்றால், சிறிமா - சாத்திரி ஒப்பந்தம் என்று ஒன்றே உருவாகியிருக்கமுடியாது. இதைத்திருமதி சிறிமாவோ மறுக்க முடியுமா? கட்டாய நாடு கடத்தல் என்று காலஞ்சென்ற திரு. லால் பகதூரிடம் திருமதி சிறிமாவோ அன்று வாய் திறந்திருந்தால், 'சரிதான் போயவாங்கம்மா' என்று அனுப்பி விட்டிருப்பார். இதை நன்கு தெரிந்து கொண்டிருந்தபடியால் தான் திருமதி சிறிமா அன்று வாயேதிறக்கவில்லை.

### சுவரண்சிங் கொடுத்த பதிலடி

கட்டாய நாடு கடத்தல், தனிவாக்காளர் ஜாபிதா, இரண்டும் கிடையாது என்ற அடிப்படையில்தான் இந்திய அரசாங்கம் இந்த ஒப்பந்தத்திற்கு கையெழுத்திட்டது. ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் அன்று கையெழுத்துப் போட்ட திருமதி சிறிமாவோ, இன்று செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் உணர்ச்சிகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் முரணான பட்டவகையில் பேசுவது அழகல்ல.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

சிறிமா - சாத்திரி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு நாடு திரும்பியதுமே திருமதி. சிறிமாவோ, தனிவாக்காளர் பட்டியல் பற்றி முணுமுணுக்க ஆரம்பித்தார். ஆனால் அதற்கு உடனடியாக அப்போதைய இந்திய வெளிவிவகார மந்திரி சுவரண்சிங் லோகசபையில் பதிலடி கொடுத்து, தனி வாக்காளர் பட்டியலை இந்தியா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்றும் அது ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிருந்த உணர்ச்சிகளுக்கு முரண்பட்டதென்றும் கூறியிருந்தார்.

திருமதி சிறிமாவோ காலஞ்சென்ற திரு. சாத்திரியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது. கட்டாய நாடுகடத்தல், தனி வாக்காளர் பட்டியல், என்ற இரண்டும் கிடையாது என்பதை நன்கு அறிந்து கொண்ட பின்னரே கையெழுத்துப் போட்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

### யார் துரோகி

இன்றோ திருமதி சிறிமா, கட்டாய நாடு கடத்தல் வேண்டும் என்றும், பொதுவாக்காளர் பட்டியலில் மலைநாட்டுத் தமிழரை சேர்ப்பது சிங்கள மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும் கூறுகிறார். திருமதி. சிறிமாவோ கூறுவது உண்மையென்று வைத்துக்கொண்டாலும் கூட, சிங்கள மக்களுக்கு இத்துரோகத்தைச் செய்தவர் திருமதி. சிறிமாவோ என்றே கூற வேண்டும். ஏனெனில், அம்மையார் தான் இந்த ஒப்பந்தத்தையே உருவாக்கியவர்.

சிறிமா அம்மையார் உருவாக்கிய ஒப்பந்தத்தையே தேசிய அரசாங்கம் அமுல் நடத்துவதற்கு மசோதா கொண்டுவந்திருக்கிறது. எனவே தேசிய அரசு சிங்கள மக்களுக்கு துரோகம் செய்கிறதென்று எப்படிக் கூற முடியும்?

### இந்தியா நிராகரிக்கும்

கட்டாய நாடு கடத்தலையும், தனிவாக்காளர் பட்டியலையும், இலங்கை அரசாங்கம் வற்புறுத்துமானால், இந்தியா கண்டிப்பாக இந்த ஒப்பந்தத்தையே நிராகரித்துவிடும் என்பதை இலங்கை இந்திய ஒப்பந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியா உடன்படிக்கையை நிராகரிக்குமானால், இலங்கை இந்திய பிரச்சினை விரைவில் தீரக் கூடிய சாத்தியக் கூறுகள் மீண்டும் அண்மையில் ஏற்பட முடியாது.

மனித அடிப்படையில், மனிதத்தன்மையுடன் அணுகி தீர்த்துவைக்கப்பட வேண்டிய மலைநாட்டுத் தமிழர் பிரச்சினையை பூதாகாரமாக்கி, தேசிய அரசாங்கத்துக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விட்டு ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பது, படுகேவலமானதும் அற்பத்தனமானதுமான அரசியல் நடவடிக்கையாகும்.

ஆகவே நாட்டு நன்மையில் எதிர்க்கட்சிகளுக்கு அக்கறையிருந்தால், இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை ஆதரிக்க முன்வருவார்களாக.

அரசாங்கத்துக்கும் ஒன்று கூறவிரும்புகிறோம்! எதிர்க்கட்சிகளின் திசை திருப்பும் பேச்சுக்களுக்கு உடனுக்குடன் பதிலளித்து, நாட்டு மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்லி, துணிவுடன், நேர்மையான பாதையில் செல்ல பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா முன் வருவாராக.

## 'கேசரியின்' தவறான செய்தி

முல்லைத் தீவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில், மாவட்டசபைகள்பற்றி தமிழரசுத்தந்தை பேசியதாக 9-5-67 வீரகேசரியில் வெளி வந்த செய்தி தவறானதென்றும், அக்கூட்டத்தில் மாவட்ட சபை பற்றி தமிழரசுத் தந்தை எதுவுமேபேசவில்லையென்றும் சுதந்திரன் முல்லைத் தீவு நிருபர் அறிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரத்தைத் தூண்ட எதிர்க் கட்சியினர் முயற்சி

## நாடெங்கும் நடைபெறும் தமிழ் துவேஷப் பிரசாரம்

இலங்கையில் மீண்டும் ஒரு வகுப்புக் கலவரத்தை தூண்டி விட எதிர்க்கட்சிகள் முயற்சி செய்து வருவதாக சுதந்திரனுக்கு ஒரு அந்தரங்கச்செய்தி கிடைத்துள்ளது. வகுப்புக்கலவரத்தை தூண்டுவதற்கு முன்னேடியாக, இலங்கை இந்திய மசோதா மாவட்ட சபைகள் மசோதா ஆகிய இரு மசோதாக்களால், சிங்கள இனம் இந்த நாட்டிலிருந்து பூண்டோடு அழிந்து விடுமென்று சிங்கள மக்களிடம் விஷமப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. வகுப்புக் கலவரத்தை தூண்டி விடுவதன் மூலம், தேசிய அரசாங்கத்தை வீழ்ச்சியடையச் செய்வதே எதிர்க்கட்சிகளின் நோக்கம் என்று கூறப்படுகிறது. ஆனல் எந்த நிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதென்றும், நிலைமைகளை இரகசியப் பொலிஸார் உன்னிப்பாக கவனித்துவருவதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய அரசாங்கத்தை பதவியிலிருந்து வீழ்த்துவதற்கு இது தவிர வேறுமார்க்கமில்லையென்றும், இலங்கை இந்திய அமுல் மசோதா, மாவட்ட சபைகள்மசோதா ஆகிய இரு மசோதாக்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி சிங்கள மக்களிடம் துவேஷ உணர்ச்சியை வளர்த்து அதன் மூலம் நாட்டில் ஒரு தமிழ் சிங்கள கலவரத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டுமென்றும் சமீபத்தில் நடந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரின் ரகசியக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதன் எதிரொலியாக நாட்டில், தமிழ் துவேஷப் பிரசாரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இலங்கை இந்திய மசோதாவிற்கு எதிர்ப்புக் கூட்டம் என்ற போர்வையில் நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களிலும், சிங்கள மக்களின் உணர்ச்சிகளை தமிழ் மக்களுக்கெதிராக தூண்டி விடும் முறையில் காரசாரமான பேச்சுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த முயற்சியில் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் நாம் சிங்களவர் இயக்கமும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஈடுபட்டிருக்கின்றன.

இவ் வாரம் டெடிகமையில் ஒரு கூட்டத்தில் பேசிய திருமதி. சிறிமாவோ சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தட்டிக் கொடுக்கும் முறையில் பேசியுள்ளார். தேசிய அரசாங்கம் தமிழர்களின் விருப்பப்படியே நடைபெறுகிறதென்றும், தமிழரசுக்கட்சியும், தி. மு. க. வும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கைகோத்துக் கொண்டு சிங்கள இனத்தைவிழுங்கிவிட முயற்சி செய்து வருகின்றனவென்றும், நாடுமுழுவதையும் சிங்கள மக்கள் அடுத்த இரண்டரையாண்டுகளுக்குள் கைப்பற்றத்தவறினல், வடக்கும் கிழக்கும், மலைநாடும் தமிழ் நாடாகி விடுமென்றும், சிங்கள மக்களுக்கென்று உலகில் இலங்கை மட்டுமேயிருப்பதாகவும் கூறியதாக செய்திகள் கூறுகின்றன.

எதிர்க்கட்சியிலுள்ள வகுப்புவாதிகள் ஒருபக்கம் இப்படி வகுப்புக் கலவரத்தைத் தூண்டவிட முயற்சிசெய்து வருகையில், இடதுசாரிகள் இதுபற்றி 'உருத்திராட்சப் பூனை' நிலையில் இருக்கின்றனராம்.

வகுப்புக் கலவரம் ஒன்று தூண்டப்படுமாஞல் எந்தநிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், நிலைமைகளை பொலீஸ் மேல் அதிகாரிகள் கவனித்து வருவதாகவும் அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

## 'தமிழ் சட்டத்தை அமுலாக்க தனிப்பிரிவு வேண்டும்'

### அ. எ. வி. சங்கம் கோருகிறது

"தேசிய மொழித் திணைக்களம் மூடப்பட்டு அரசகருமமொழித் திணைக்களத்தில் தமிழ் பிரிவு ஏற்பட்டபின் தமிழ் அங்கே படுகொலைக்குள்ளாகியுள்ளது. அரசகருமமொழித் திணைக்களம் தமிழைப் பேண எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனுல்தான் தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்த தனிப்பிரிவு வேண்டுமென்று கோருகிறேம்'' இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 1966—67ம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இம்மாதம் 15ம்திகதி திங்கட்கிழமை பட்டக்களப்பு நகர மண்டபத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 6ம் ஆண்டு பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

மாநாட்டில் அரசாங்க எழுதுவினைஞர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுடன், பொதுவாக தமிழ்பேசும் மக்களை எதிர் நோக்கும் பிரச்சினைகளும் ஆராயப்படுமென்று தெரிகிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுக் கூட்டம் மொத்தம் 20 தீர்மானங்களை நிறைவேற்றவிருக்கிறது.

—

முத்தமிழ் விழா

கொழும்பு அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி தமிழ்க் கலாமன்றத்தினர் நேற்றும், இன்றும் முத்தமிழ் விழா கொண்டாடுகின்றனர். இவ் [illegible] ர் ஜனாப். ஜாபிர் ஏ. காதர் தலைமைவகிக்கிறார்.

## போதனு மொழி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனல் திரு. பொன்னம்பலமோ ஆங்கில மூலம் கற்பதுதான் எளிது என்கிறர்.

சில தமிழர்களுக்கு ஆங்கில மோகம் இன்னும் அகலவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்று.


ஆங்கிலமே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்று தமிழ் காங்கிரஸில் ஒரு சாராரும், தமிழே போதனு மொழியாக இருக்கவேண்டுமென்று மற்ருெரு சாராரும் கூறிவருகிருர்கள் என்று தெரிகிறது.

அத்துடன், "சர்வகலாசாலைக் கல்வி பெறக் கூடிய செல்வந்தர்களான பிள்ளைகளுக்கு இன்று உயர்தரக் கல்வி ஊட்டப்படுகின்ற விதம் திருப்திகரமாயில்லை'' என்று அதே கூட்டத்தில் கவலை தெரிவித்திருக்கிருர் திரு. பொன்னம்பலம்.

இலட்சோபலட்சம் ஏழைப் பிள்ளைகள் உயர்தரக் கல்வி பெற வசதியின்றி கஷ்டப்படுவது பற்றியெல்லாம் அவர் கவலை தெரிவிக்க வில்லை. சகல வசதிகளையும் பெற்றுள்ள செல்வந்தர்களின்பிள்ளைகளைப் பற்றிதான் அவரது கவலை!

அவர் யாருடைய நலன்களைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளார் என்ற அந்தரங்கத்தை இந்தப் பேச்சு காட்டிக்கொடுத்து விட்டதாக கருதப்படுகிறது.

## புதிய இந்திய ஜனதிபதி



புதிய இந்திய ஜனதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன், அவருக்கு முந்தியவர் போல ஒரு ஆசிரியர்.

டாக்டர் ராதா கிருஷ்ணனைப் போலகல்வித்துறையில் அவர் நீண்ட காலம் சிறந்து விளங்கியவர்.

30வருட காலம் துணை வேந்தராகவும், 10வருடம் கவர்னராகவும், உபஜனதிபதியாகவும் பணிபுரிந்த பிறகு டாக்டர் ஹுசேன் இந்திய நாட்டின் அதிபராகியிருக்கிறர். •

விடுதலை இயக்கத்தின் போது தேசிய கண்ணேட்டம் கொண்டிருந்ததற்காக அவர் பெரிதும் மதிக்கப்படுகிறர். டில்லியில் தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையை (ஜாமியா மிலியா இஸ்லாமியா) தோற்றுவித்தவர் அவர்.

உத்திரப்பிரதேசத்தின் பருகாபாத்ஜில்லாவில் உள்ள குனவம் கஞ்சில்பல நூற்றுண்டுகளாக வசிக்கும் ஆப்கன் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் ஹுசேன்1867 பிப்ரவரி 8ம்தேதி ஹைதராபாத்தில் பிறந்தார். அவர் தந்தை அங்கு வக்கீலாக இருந்தார்.

எடாவா உயர் நிலைப்பள்ளியிலும், அலிகர் எம். ஏ. ஓ. கல்லூரியிலும் அவர் படித்தார். ஜெர்மனியில் அவர் 3 ஆண்டுகள் பொருளாதாரம் படித்தார்.

1937ல் ஆதாரக் கல்வி கொள்கையை காந்திஜி உருவாக்கிய போது, ஆதாரக் கல்வி தேசியக் கமிட்டி தலைவராக டாக்டர் ஹுசேனை அவர் நியமித்தார். ஆதாரக் கல்வியை பரப்புவதில் டாக்டர் ஹுஸேன் பெரும் பங்கு வகித்தார்.

1948ல் அவர் அலிகர் சர்வகலாசாலை துணைவேந்தரா நியமிக்கப்பட்டார். 1956 வரை அப்பதவியில் இருந்தார். கல்வி கமிஷன்களிலும் கமிட்டிகளிலும் அவர் அங்கத்தினராக இருந்து, கல்வியின் எல்லாத் துறைகளிலும் குறிப்பிடத் தக்க உதவி புரிந்தார்.

1957 ஜூலை 6ம் தேதி அவர் பீஹார் கவர்னராக நியமிக்கப்பட்டார். 1962 மே 13ம் தேதி அவர் உபஜனதிபதியானர்.

## கப்பல்களுக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் வீரர்களினதும் பெயர்களையும் அவற்றுக்கு சூட்டலாமே! இதன் மூலம் இலங்கையின் இரண்டாவது பெரிய இனமான தமிழினத்தைக் கௌரவிப்பதாகவும் இருக்கும். இக்கோரிக்கையை விரைவில் பிரதமரிடம் சமர்ப்பிக்கவிருக்கிறேம்' என்று கூறினர்.











Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறு கதை

# உறவு பலத்தது

புகையிரதம் முக்கிமுனகி 'கூ' ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்தது. நாளை இரண்டாந் தேதி. அரசினர் பாடசாலைகள் யாவும் ஆரம்பமாகும் தினம். ஆகையால் புகையிரதப் பெட்டிகளை ஆசிரியர்கள் நிரப்பிக் கொண்டு இருந்தனர். 1980ம் ஆண்டும் தொடங்கி எட்டு மாதமும் கழிந்து விட்டது.

ஓர் 'கம்பாட்மென்றின்' ஓர் மூலையில் தூங்கி விழுந்து; தலையைப் பெட்டியுடன் மோதிக் கொண்டிருந்தார், ஆசிரியர் சுப்பிரமணியம். 59 வயது கொண்ட அவர் நித்திரையில் ஆட்டப்படாது என்ன செய்வார்? அவர் தலையில் வெள்ளி போன்ற கேசங்கள், நெற்றிச் சுருக்கம், அநுபவ முதிர்வை மட்டுமல்ல, அறிவுத் திண்மையையும் உணர்த்திக் கொண்டிருந்தது.

சுப்பிரமணிய ஆசிரியர் இதே புகையிரதத்தில் எத்தனையோ முறை பிரயாணம் செய்திருப்பார். அரசினர் பாடசாலையில் 30 வருடமாகக் கடமை யாற்றும்அவர், புகைவண்டிக்குப் பேசு மாற்றிருப்பின் அவருடன் தோழமைபூண்டு உறவாடுமே! அவர் இருந்த இடத்திற்கு முன்னுல் ஒருவாலிபன் கோட்டும், சேட்டும் பூட்சுமாக — நாகரிகம் பெற்ற யுவனுக— உட்கார்ந்திருந்தான். அந்த வாலிபனது காலடியில் ஒரு 'சூட்கேஸ் கிடந்தது. அதில் 'சந்திரமோகன்,' சர்வகலாசாலை, பேராதெனிய என்ற விலாசமிட்டுக் கிடந்தது.

கால் செருப்பை மாட்டக் குனிந்த ஆசிரியர் கண்களை, சூட்கேஸ் எழுத்துக்கள் கவர்ந்தன. கண்களில் பட்ட எழுத்துக்கள் ஆசிரியர் உள்ளத்தை தட்டி விட்டது. ஆசிரியர் வாலிபனை ஊடுருவி நோக்கினுர் — வாலிபன் ஊடாகப் பார்த்தார், அவனது கன்னக் க்துப்புகள் மொழி கூறும் விழி இரண்டு; சிறுது நீண்டகன்ற அழகுவாய்; பொது நிறம்...... அந்தக் கவர்ச்சிகரமான உரு ஆசிரியர் உள்ளத்தை உருட்டியது; பழமை காட்ட உதவியது. எண்ணங்களை — அங்குள்ள ஏக்கங்களை நினைவுத் திரையிட்டது.

உள்ளம் வேகமாக உருண்டது...... பின் நோக்கி உருண்டது. முப்பது வருடங்களுக்கு முன் போய்த் தாமதித்தது.

அங்கே... அந்த நேரம்... அவர் வாழ்வு...! 'இந்த வாலிபன்' அந்தக் காலத்தைக் கண்ணுடியாகக் காட்டுகிருனே! அவன் தோற்றம் ஒரு பெண்ணுக இருந்தால்; — ஆசிரியர் உள்ளத்தை உருட்டாது; முடியாது. வாலிபன் வண்ணவதனத்தில் ஆசிரியர்வேருேர் வதனத்தை — அவருயிருடன் ஒன்றிச் சேர்ந்து கொண்ட— இன்னுேர் வதனத்தையல்லவா கண்டார்?

ஆசிரியரால் வாலிபனைப் பார்க்காது இருக்க முடியவில்லை. வாலிபனும் அடிக்கடி பார்த்தான். வாலிபனுக்குப் புதிராக இருந்தது அவரது பார்வை.

வாலிபன் கரத்திலே ஒரு 'நாவல்' இருந்தது. அந்நாவலின் நாமம் 'நிலவும் பெண்ணும்' இந்நாவலை எழுதிய கதாசிரியரது புகைப்படம் முதற் பக்கத்தில் அழகாக அச்சிட்டுக் கிடந்தது. அப்புகைப்படத்தை அவ் வாலிபன் உற்று நோக்கினுன்; பிறகு ஆசிரியருடன் ஒப்பிட்டுநோக்கினுன். ஆனுல் அப்புகைப்படம் ஒரு வாலிபனுடையது. சுப்பிரமணியம் ஆசிரியரது முகத்துடன் ஒப்புமை உண்டே. ஆசிரியர் வாலிபனுனல், அப்புகைப்படம் போல இருக்குமே இப்படியெல்லாம் வாலிபனது உளமேடை ஆடியது.

இளமைத் துடிப்புடைய அழகு முகம்; தலையில் சிறு சுருள் எதையும் தாங்கும் பழக்கமுள்ள அமைதி நயனங்கள்; பார்க்கப் பரவசம் தரும் வாலிபம்... இப்படித் தோன்றியது புகைப்படம். இப்புகைப்படத்தை முதிர்ச்சியடையச் செய்தால்...! தலை நிறைந்த வெள்ளிக் கேசம் முகத்தில் சில சுருக்கங்கள்; அநுபவக் கோடுகள்;... கட்டாயம் சுப்பிரமணிய ஆசிரியர் போன்றிருக்கும்!

அப்படியானுல் சுப்பிரமணிய ஆசிரியர் இளமையில் எழுதிய நாவல் தானு?... இப்படியான எண்ணக் கோவைகள் வாலிபனது உளப் பாதையில் புகைவண்டிபோல ஓடிக் கொண்டிருந்தன.

விலகிப் போன ஸ்டேசன் போல ஆசிரியரது உளமும் முப்பது வருடம் முன்பு போய்க் கிடந்தது.

பன்னிரண்டு மணி ஆயது. நடு இரவு வண்டியிலுள்ள பிரயாணிகள் 'காட்டுன்' படங்கள் போலத் தூங்கி விழித்துக் கொண்டிருந்தனர். பொதுவுடமைச்சொத்தாய நித்திரை யாரைத்தான் விடும் ஆனுல் ஆசிரியரை மட்டும் நித்திரை அணுகவில்லை; ஆனுல் எண்ணங்கள் அல்லவா அணுகிப் பிரளயம் புரிந்து கொண்டிருந்தன.

'தம்பி; என்ன புத்தகம்' எனக்கேட்டார் ஆசிரியர்.

'நிலவும் பெண்ணும்'

'யார் எழுதியது?'

'பல சிறு கதைகள்? பல தொடர் கதைகள் தீட்டிய யாழ்ப்பாணத் தமிழ் மக்கன் யாரோ அவர் தான் 'என்றுன் வாலிபன் புது முறுக்குடன்.

'நல்ல மதிப்புரை தான். ஆனுல் யான் கேட்டதுகதாசிரியரது பெயரை மட்டும் தானே' இப்படிப் பேசினுர் ஆசிரியர்.

'கதாசிரியரைத் தெரியாது. அவா உள்ளம் தெரியும்'

'நிலவும்பெண்ணும்தானே! சுத்த மோசம்; கயிறு திரிப்பு ஒரு அநுபவமற்ற வாலிபனின் பிதற்றல்... வெளிவந்தபோதே வாசித்த ஞாபகமுண்டு 'என்ருர் ஆசிரியர்,

வாலிபன் இடைமறித்தான், 'பெரியவராக இருக்கிறீர்கள். அல்லது எனது ஞாபகம் என்னவாக இருக்குமோ தெரியாது! ஒரு போதும் ஒரு ஆசிரியரைக் கண்டபடி கூறக் கூடாது. குறைமட்டும் சொல்லி விடலாம், ஆனுலதையே செய்ய யாராலும் முடியாது. இது தமிழ்ப் பரம்பரையின் சாபத்தீட்டுத்தான்' எனச்சிறிது உரத்தேபசி விட்டான் வாலிபன்.

ஆசிரியர்முறுவல் செய்தார். கண்கள் வாலிபனை அளந்தன. 'என் அபிப்பிராயம் கூடக் கூறக் கூடாதா — அதுவா சாபத்தீட்டு'

'சரி உங்கள் அபிப்பிராயம் தான் யாது ஏன் பிதற்றல்...' ஆவலும் கோபமும் அணிசெய்யக் கேட்டான் வாலிபன்......

'நிலவும் பெண்ணும் ஒரு கதை; காதற் கதை, கலைச் செறிவே கிடையாத இளமையின்பத்தின் படப்பிடிப்பு. அது மட்டுமல்லாது காதல் உண்மை தெரியாது வரைந்த ஒரு கண்மூடி நாவல்...' என ஆசிரியர் முறுவலிட்டபடி பேசினுர்.

'இல்லை! இல்லை!! காதலை வாழ்க்கைக் கலையாக்கி; நிலவாக்கிக் குளிர்ச்சி காட்டுகிருர். இந்நாவலில்' என வாலிபன் கூறினுன்.

'அப்படியா?' —ஏளனமாகக் கூறினுர் ஆசிரியர் இப்படி.

'உங்களுடன் கதைக்க விரும்பவில்லை' என்றுன் படீரென வாலிபன்.

சிரித்தபடியிருந்தார் ஆசிரியர்! சில நிமிடங்கள் கரைந்தன.

'தம்பி—கதை பற்றி வேண்டாம்—அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் நாம்.— எங்கே போகிறீர்?'

'பேராதனை சர்வகலாசாலைக்கு'

'சொந்த ஊர்'

'யாழ்ப்பாணம்'

'பெயர்'

'சந்திர மோகன்'

'கூ' ஒலியுடன் புகையிரதம் நின்றது: அது ஒரு ஸ்டேசன் அப்பொழுது சந்திர மோகன் மடியிலிருந்த் நாவல் பெட்டியின் இழுவலால் ஆசிரியரது காலடியில் போய் வீழ்ந்தது. புத்தகத்தை எடுத்து விரித்தார் ஆசிரியர்.

முதல் பக்கத்தில் மையினுல் எழுதப்பட்டிருந்தன; சிலவாக்கியங்கள், யாரோ அன்பளிப்புச் செய்த நாவலது. அவ் வாக்கியங்களை ஆசிரியர் வாசித்தார்.

—'இதயச்சேர்வேவாழ்வின் உயர்வு. அதுவே ஆனந்த கீதம். இறந்தும் மாறுத இதய ஒட்டுறவே இன்னிசை யாழ் நாதம். எனது அன்பு இதயம் வாழ்க! பலமுடன் பல்லாண்டு வாழ்க...... என் என் காதல் இதயத்தால் முரசு கொட்டி; தங்கள் பிறந்தத்தினப் 'பரிசாக'; என் அன்புயர் தந்தையின் அற்புத நாவலை அன்பளிப்பு ஆக்குகிறேன்'—

'தங்களிதயம்'

எஸ். மல்லிகா

(15-5-1980)

'மல்லிகா'... சந்திரமோகன் பிறந்ததின அன்பளிப்பு;காதல் இதயமுரசம்......'

ஆசிரியரை ஆச்சரியம் முழுக்காட்டியது. அந்தக்கையெழுத்துக்கள்... ஆசிரியரைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு மேலே மேலே போயின. ஆச்சரியம் என்றமலை மேலே நின்ருர். ஆசிரியர் ஓர் புதுக்கதை படித்ததுபோல் எண்ணக் கம்பிகளுள் 'சிந்தனை' உணவை உண்டு கொண்டிருந்தார்!

'தம்பி' இந்தக கையெழுத்துக்களின் சொந்தக்காரி மல்லிகா தானே!'

'ஆமாம்'

'யார் அப்பெண்?'

[illegible]

திருமதி' என்றுன் தயக்கமின்றிச் சந்திரமோகன், தயக்கமேயில்லாத 1980ம் ஆண்டல்லவா?

'மல்லிகாவின் பெற்றேரும் உங்கள்காதலைஒப்புக்கொண்டு விட்டார்களா?'

'தாய் கிடையாது, தந்தை மட்டுமே அவரும், ஒரு முற்போக்குவாதி. காதலைக் கண்ணியத்துடன் மதித்துப் போற்றுபவர். இந்த நிலவும் பெண்ணும் எழுதிய கதாசிரியர் தந்தையானுல் கேட்கவும் வேண்டுமா?'—என மகிழ்வு உறவாடக்கூறிக் கொண்டிருந்தான் சந்திர மோகன்.

'எழுதலாம், பேசலாம், சீர் திருத்தம் செயலில் செய்யத் தான் தயங்குவார்கள்?'

'அது உங்கள் காலம்! இது 1980ம் ஆண்டு. இருபதாம் நூற்றுண்டின் கடைசிக கூறு. சாதியும் ஆச்சாரமும் இன்று கேலிமொழிகள்; பைத்தியச் செயல்கள் இது காதலைக் கண்ணெனக் கருதும் பொற் காலம்......' மகிழ்வில் பேசினுன் சந்திரமோகன்.

'ஓகோ! மாமாவின் நாவல் என்றதால் தானே அப்போது அத்தனை ஆத்திரம் அடைந்தாய்' எனக்கேட்டார் ஆசிரியர் முறுவலுடன்.—

'அதுதான் போக; உனது பெற்றேரின் சம்மதம் உண்டா? என்ருர் ஆசிரியர்.

'சிறுவயசிலேயே தந்தையை இழந்தவன். தாய் இருக்கிருர் என் தாயும் என் எண்ணத்துக்கு ஒருபோதும் குறுக்கே வரமாட்டார்.புதுமையுள்ளம் கொண்டவர் என் அன்னை; அறிவுமிக்கவர் என் அன்னை. என் அன்னை கூடப்பல புதுமைக் கதைகள் எழுதியவர்...' என சந்திரமோகன் கூறினுன் பெருமை கட்டியமிட.

'தாயாரது பெயர்...?'

'சந்திராவதி' என்றுன் சந்திரமோகன்.

'சந்திரா!'... இந்த மூன்று எழுத்துக்கள் உயிருடன், மூச்சுடன், வாழ்வுடன் ஒவ்வொரு எழுத்தும் கலந்து ஆசிரியனுகத தூக்கி நிறுததியது! ஆசிரியர்எழுந்தார்! அங்கும் இங்கும் நடந்தார்! உளத்திலே எண்ணச் சுழல்கள் சுற்றிய வேகம், உள்ளத்தை உருட்டியது, உளச் சுழலிலே'உலக வாழ்வு' புரண்டது.ஆசிரியரால் தாங்க முடியாத பழமை எண்ணச் சிதைவுகள்; சிதறல்கள்; ஏக்கங்கள்...! தலையைக் கையினுல் பொத்தியபடியிருந்தார். கண்களிலே நீர் முட்டின. கன்ன வழி உருண்டன.

'ஏன் கலக்கமடைகிறீர்கள் எனத் துயருடன்; பிரச்சினையுடன் சந்திரமோகன் கேட்டான்.

'புகைவண்டி டிக்கரி விழ்ந்து விட்டது வழியில் என ஆசிரியர் புழுகினுர்.

புகைவண்டி நின்றது. ஆசிரியர் இறங்க வேண்டியிருந்ததால் இறங்கிவிட்டார். ஆவலுடன் சந்திர மோகனைப் பார்த்தபடி பிரிந்தர்.

காலம் சுழன்றது...! பாடசாலை லீவு ஆரம்பம் சந்திர மோகன் வீடு போனுன் ஆனுல்; சுப்பிரமணியம் ஆசிரியரை அவனுல் மறக்க முடியவில்லை. அவர் ஒரு புதிராகவே அவனுக்குத் தோற்றினுர்.

தாயாரிடம் மோகன் கூறினுன் —ஏனம்மா உங்கள் பெயரைக் கேட்டதும் அவர் கண் கலங்கினுர் — எனவும் கேட்டான்?

சந்திராவின் உள்ளம் படபடத்தது. ஆச்சரியம் முட்டியது; வீட்டுள் புகுந்தாள். பெட்டியைத் திறந்தாள்.

ஒரு போட்டோவை எடுத்தாள். கொண்டு வந்து மோகனிடம் காட்டினுள். 'இப் போட்டோதான் அவரது வாலிப காலத் தோற்றம்— இப்படியா இருந்ததார் எனக் கேட்டாள் ஆவலுடன்.

'இந்தப் போட்டோவில் உள்ளவர் முதியவரானுல் அப்படித்தான் இருப்பார் அம்மா' என்றுன் மோகன்.

'சந்திராவிக்கினுள்; அழுதாள்; 'அண்ணு' என்றுள்... என் அண்ணு...!'.

'அம்மா! அம்மா! என் அம்மா! விளங்கத்தான் சொல்லுங்களேன்—'.

—'மோகன் கேள்—.' பதினெட்டு வயசுடன் மகிழ்வுடன் இளமைத் துடிப்புடன் நானிருந்த பொழுது. யான் கல்லூரியல் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு அவர் பாடம் சொல்லித்தந்தார். பாடத்துடன் அறிவுமிகு— வாழ்க்கைக்கு அவசியமான யாவற்றையும் நன்றுக விளக்குவார். நல்ல அறிவாளி. கூர்ந்த மதி கொண்டவர். எனக்குக் கூடப் பல கதைகள் எழுதும் ஆற்றலும் அளிந்த பெருந்தகை அவர்தான். எங்கள் குடும்ப நண்பனுக மாறி விட்டார். எனது உயிர்ச் சோதரன் ஆனுர். ஒரு நாளைக்கு அவரைக் காணுவிடில் என் கண்நீர் காணும், சந்திரா—சந்திரா என்று அழைத்தபடி வீட்டில் நுழைந்தால், யான மாணுகித் துள்ளுவேன். அண்ணு, அண்ணு என அடிக்கடி அழைத்தபடி அவருடன் சம்பாஷிப்பதில் பெரிய மனத் திருப்தி. அற்புத ஆனந்தம். அவர் வாயில் இருந்து உதிரும் சொற்கள் தானடா தமிழின் இனிமைக்கு எடுத்துக் காட்டு. என் தாய் கூட அவரை மகனுகவே எண்ணினுர்; அன்பு செய்தார். என் தாய் பெற்றுத் தராத குறை ஒழிய என் இதயச் சகோதரன் ஆனுர். அக்காலம் இன்று போலல்ல. ஆணும் பெண்ணும் கதைத்து விட்டாலே பலவாருகக் கதையளக்கும் பொல்லாத காலம். 1950-ம் ஆண்டு. பழைமையுமற்ற புதுமையுமற்ற காலமல்லவா? வீண் வதந்திகள் பறந்தன. எமது சகோதர பாசம் வேறு மாதிரிப்பட்டது. சமூக நாக்குகளுக்கு: பேசத் தீர்த்தன. நாம் காதல் புரிகிருேமாம். எனக் கயவர்கள் பிதற்றினர். நாடெல்லாம் இதே வதந்தி. யான் கண்ணீர் விட்டேன். எதையும் புதுமையுடன் நோக்கும் அவர்; என் துயரத்தைத் தன் அறிவுச் சாதுரியப் பேச்சால் மாற்றி வந்தார். காலம் நகர்ந்து; ஓடியது. யான் விவாகம் புரிந்தேன. மணமும் முடிந்து ஒரு மாசமும் கழிந்தது. வழக்கம் போல அவருடன் யான் உறவாடினேன்; நடமாடினேன்; கதைத்தேன்; மகிழ்ந்தேன். ஆனுல்; என் கணவர் அறிவுவிட்டு உணர்வுக்கு மட்டுமே இடம்கொடுத்தார். சந்தேகப்பட்டார். குடும்பத்துள் புயல் அடிக்க ஆரம்பித்தது. உடனே அவர்

(14-ம் பக்கம் பார்க்க)

— புதுமைலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. தொ. கழகத்தின் தோற்றமும் எழுச்சியும்

மலையகத்தில் நாளுக்கு நாள் நிமிடத்துக்கு நிமிடம் தொழிற்சங்கங்கள் பெருகிக் கொண்டிருக்கும் வேளையில், மலையக மக்களின் பிரச்சினைகள் பெருகிக் கொண்டே வருகின்றன.

மலையக மக்களை ஏமாற்றிக் காசு பறிக்கும் சங்கங்கள் தலை தூக்கித் தாண்டவமாடும் இந்நேரம் மலையக மக்களை அறியாமை என்னும் இருளும் கொள்ளை யென்னும் பேயும் ஆட்டிப் படைத்தன. இதில் அப்பழுக்கற்ற பெருமக்கள் அணுவணுவாக செத்துக் கொண்டே இருந்தனர்.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி பாடு படும் தொழிலாளியின் பிரச்சினைகள் கவனிக்கப்படவில்லை; வருமானம் கவனிக்கப்பட்டது. தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து முதலாளி பக்கம் பரிவு காட்டினார்கள். இதனால் தொழிலாளி ஏமாற்றப்பட்டான்; அவன் ஒரு நிலையில்லாதவனாக இந்த சங்கத்தில் சேருவோமா? அந்த சங்கத்தில் சேருவோமா? என்று தடுமாறிக் கொண்டிருந்தான்.

1958 ல் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த பெரும் போராட்டத்தை மலையக மக்கள் நுகர்ந்தார்கள், போராட்டத்தின் விறுவிறுப்பினை பத்திரிகை வாயிலாகவும், கேட்டார்கள், நேராகவும் கண்டார்கள்.

போராட்டங்களைக் கொண்டு சரித்திரம் சமைத்தார்கள். ஈழநாட்டில் மொழிக்கும் இனத்துக்கும் ஒரு கட்சி உண்டென்றால் அது, தமிழரசுக் கட்சிதான். தமிழனை தலை நிமிரச் செய்ததே தமிழரசுக் கட்சி தான் என்பதைத் தெட்டத் தெளிவாக விளங்கிக் கொண்டார்கள்.

## காங்கிரஸ் கோட்டை சரிந்தது

'தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்' என்பார்கள். அதற்கேற்ப வடக்கு கிழக்கு மக்களின் உணர்ச்சியைக் கொண்ட மலையக மக்கள் 'தமிழர்' என்ற ஒரே பிணைப்பால், இனம் இனத்தோடு தான் சேரும் என்பதை நிர்ணயித்தார்கள்.

காங்கிரஸ் கோட்டை சரிந்தது. கழகத்தின் புனித கொள்கை காட்டுத்தீபோல் மலையகமெங்கும் பரவியது. கொள்கையை உணர்ந்த மக்கள் கழகத்துக்கு ஆதரவு அளித்தார்கள்.

இதற்கிடையில் தோன்றிய எதிர்ப்புக்கள் பனிபோல் மறைந்தன. கழகம் இளம் பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்தது. ஏமாற்றுச் சங்கங்கள் கழகத்தின் புனித சேவையைக் கண்டு பொருமை கொண்டன! கொக்கரித்தன. என்னவென்று? 'மலைநாட்டான் யாழ்ப்பாணத்தான்' என்ற பேதமையைக்காட்டி! அதற்கு மக்கள் அசையவில்லை.

இவ்வாறு நாளடைவில் தொழிலாளிகள் கழகத்தின் கொள்கையை கடைப்பிடித்தார்கள்.

இந்த நேரத்தில் துவேசிகள் சிலர் கழகப் பணிமனையை தலவாக்கொல்லையில் தீயிட்டுக் கொழுத்தினர். அந்நேரமும் சிறிதேனும் கழகத் தோழர்கள் மனந்தளராது மீண்டும் கழகப் பணிமனையை அந்நகரத்திலேயே ஸ்தாபித்தனர். இதைபோல் 1965ல் ஜனவரி 4ந் திகதி இராகலைக் கிளையை காடையர்கள் தாக்கினார்கள். கழகத்தின் ஆதரவாளர்களும் கழக அன்பர்களும், விடேன் தொடேன் என்ற நிலையில் கழகத்தைக் காப்பாற்றினார்கள்.

இராகலை நகரில் வால் காட்டித் திரிந்த காடையர்கள் தலைக்கனம், துவேசம் எல்லாம் ஜனவரி 4ந் திகதியோடு போய்விட்டது. இராகலையில் இன்று தமிழன் தலைநிமிர்ந்து நடக்கக் காரணம் கழகமே. கழகம் வந்திராவிட்டால் இராகலையில் தமிழினம் அடிமைகளாக, துவேசத்துக்கு ஆளாகியிருப்பார்கள்.

இராகலையில் மட்டுமல்ல மஸ்கெலியா, அட்டன் போன்ற நகரங்களிலும் தமிழினத்தின் விரத்தினை நிர்ணயித்திருக்கிறது கழகம். மலையகத்தில் நிகழ்ந்த போராட்டங்களால் ஒவ்வொரு தமிழனும் தன்மானம் உள்ளவன் என்பதை துலக்கிக் காட்டியது கழகமே.

## முன்னணியில் திகழும்

குறுகிய காலத்தில் தோன்றி இவ்வளவு மின்னல் வேகத்தில் இன்று மலையகத்தில் 2வது இடத்தை வகிக்கின்றது என்றால் அதன் சேவையை சொல்லவும் வேண்டுமா?

இன்னும் ஒருவருடக் காலங்களில் கழகம் மலையகத்தில் முன்னணியில் திகழும் என்பதில் ஐயமில்லை.

தொழிலாளர்களுடைய நலன்களை மட்டுமல்ல பொது மக்களுடைய நன்மை தீமைகளையும் கழகம் பகிர்ந்து கொள்கிறது. இடைநிலைப் பள்ளிகளும், தோட்டப் பாடசாலைகளும் கழகத்தின் முயற்சியால் ஆங்காங்கே நிறுவப்பட்டு தமிழினத்தின், தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி நலனையும் கண்காணிக்கின்றது.

கழகம் தன் மேற் குறித்த கொள்கைகளை மலையக மக்களுக்கு என்றும் செய்யும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. கழகத் தலைவர்கள் தங்கள் தொகுதியைவிட கழகத்தின் சேவையை பெரிதாக மதிக்கிறார்கள். கழகம் தன் புனித சேவையின் மூலம் மலையக மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும். அதனால் மலையக மக்கள் நன்மையடைவார்கள். அதற்காக தமிழரசுப் பிரமுகர்களும், கழக ஊழியர்களும் பெரும் போராட்டங்களை நடத்தி அவர்களின் நலவுரிமைகளைப் பெற்றுக் கொடுப்பார்கள். கழக அன்பர்கள் ஆதரவளிப்பார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. கழகத்தின் முக்கிய நோக்கம் மொழியும் இனமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே. கழகம் வளர்க! அதன் இலட்சியம் வாழ்க!!

**இராகலை மு. மூர்த்தி**

# மலையகத்தில் தமிழ் முழக்கம் செய்வீர்

நமது இனம் வாழ நமது தொழிலாளர்கள் இனம் செழிப்புடன் வாழ நமது சேவையை செவ்வனே செய்தல் வேண்டும். நாம் மேற்கொள்ளும் திட்டங்கள் மூலம் எமது தொழிலாளர்களைச் சூழ்ந்திருக்கும் அறியாமைப் பேயை விரட்டியடிக்கமுடியும். காணவந்த காட்சியென்ன வெள்ளி நிலவே என்று சினிமா பாடல்களை பாடுவதைவிட்டு பாரதியின் விடுதலை உணர்ச்சியை ஊட்டும் பாடல்களை வாலிபர்கள் பாடவேண்டும், அதன் மூலம் எமக்கும் எமது இனத்திற்கும் விடுதலைஉணர்ச்சியை பரப்ப முடியுமென்று எண்ணுகிறேன். உலகெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும் என்று பாரதி பாடிய பாடலை பாடிபாடி எமது கலை கலாச்சாரம் ஆகியவற்றை நாம் பரப்புவதற்கு முயற்சி செய்தல் வேண்டும் அப்போதுதான் இன்று மங்கி மறைந்து கொண்டிருக்கும் எமது பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்.

இவ்வாறு கடந்த 17-4-67 இராகலையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வாலிப முன்னணியின் மாநில கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் துணைசெயலாளரும் வாலிப முன்னணியின் அமைப்புச் செயலாளருமான திரு. கே. பி. செல்லத்துரை கூறினார்.

இந்த வாலிப முன்னணியின் விசேட கூட்டத்தில் நாவலப்பிட்டியைச் சேர்ந்த அநேக வாலிபர்கள் பங்குபற்றி வீர முழக்கம் செய்தனர். இராகலை மாவட்ட வாலிப முன்னணி தளபதி திரு. அ. ம. பிரகாசம் தலைமை வகித்தார்.

3000க்கு மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், நாவலப்பிட்டிய வெஸ்டோல் தோட்டத்தைச் சேர்ந்த வாலிபர்களாகிய திரு. என். ரெங்கசாமி, திரு. மாயாவ, ஆகிய இருவர்கள் கொண்டுவந்த பிரேரணைக் கொப்ப மே மாதம் 16ம் திகதி நாவலப்பிட்டி கொத்மலை பகுதியைச் சேர்ந்த வாலிபர்கள் மாநில மகாநாட்டை கொத்மலையில் நடத்துவதெனஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் இக் கூட்டத்தில் தலைமை அலுவலக பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராஜன் இராகலை மாவட்ட தளபதி திரு. அ. ம. பிரகாசம் ஆகியோர் உட்பட பலர் சொற்பெருக்காற்றினர்.

# மே தினப் புரட்சி

## அந்த 'மந்திரி யார்?

தலைநகரிலே காலிமுகத்திடலின் வடக்கு எல்லையிலே அமைந்துள்ளது பாராளுமன்றம். அதனைச் சுற்றியுள்ள வட்டாரத்திலே இன்று கேட்கப்படும் கேள்வி 'யார் அந்த மந்திரி' என்பதே! திடலின் வானவெளியிலே சஞ்சரிக்கும் காற்றாடியின் செவிகளிலும் இக்கேள்வி வந்து மோதுகிறது.

யூ. என். பி— ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைப்புக்காக எதிர்க்கட்சித் தலைவியிடம் தூது சென்ற மந்திரியை அல்லது மந்திரிகளை பிடித்து அம்பலத்தில் கொண்டு வந்து நிறுத்த சிலர் முயற்சிக்கின்றனர். பாவம் அந்த அநாமதேய மந்திரிகள்.

யூ. என். பி—சுதந்திரக்கட்சி திருமணத்திற்காக தரகுவேலை பார்த்தவர்களில் இரு மந்திரிகளும் பிரமுகர்கள் சிலரும் தலைமைபிக்குகள் சிலரும் இருக்கின்றனர். மேதினம் இந்தமுயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சுதந்திரக் கட்சித்தலைவி தமது மேதினச் செய்தியில் இணைப்பு யோசனையை முற்றாகநிராகரித்தார்.

இதற்கிடையே இத் திருமணத்திற்கும் தமக்கும் சம்பந்தமில்லை யென்று பகிரங்கமாக அறிவிக்கும்படி பிரதம மந்திரியை மற்றொரு முக்கிய மந்திரி வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

ஆகவே 'எங்களுடன் சேரும்படி நாங்கள் உங்களை அழைக்கவில்லையே' என்று காலிமுகத் திடலில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் பிரதம மந்திரி சுதந்திரக் கட்சித்தலைவியைப் பார்த்துக்கேட்டார்.

**காற்றாடி**

அம்மையாருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. 'உங்களின் மந்திரி ஒருவர்தான் என்னிடம் வந்து இணைப்புப் பற்றிப் பேசினார். அவசியமானால் அந்த மந்திரியின் பெயரை பாராளுமன்றத்தில்வெளியிடுவேன்' என்றுஅம்மையார் முழங்கினார், கண்டி போகம்பரத் திடலில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில்.

விடுவாராபிரதமர்?' இணைப்புப் பேச்சுக்கு எந்த மந்திரிக்கும் நான் அதிகாரமளிக்கவில்லை' என்று பதிலடி கொடுத்தார்.

பிரதமருக்குப் பதிலளித்த அம்மையார் 'அந்த மந்திரி என்னிடம் வந்து இணைப்புப் பற்றி அரை மணிநேரம் ஆங்கிலத்தில் பேசினார். பிரதமரின் சம்மதத்துடன் தாம் வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்' என்று ஒரு போடு போட்டார்.

இந்த மந்திரி யார்? இக் கேள்வி தான் எங்கும் கேட்கப்படுகிறது. அவருடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று அம்மையாருக்கு ஆலோசனைக் கூறி தலையங்கம் தீட்டியுள்ளது ஒரு சிங்களத் தினசரி.

அந்த மந்திரி யாரென்பது காற்றாடிக்குத் தெரியாமலிருக்க முடியுமா? ஆனால் பெயரை வெளியிடும் பொறுப்பு அம்மையாருடையதேயன்றி காற்றாடியுடைய தல்ல இவ்விஷயத்தில் முந்திரிக் கொட்டையைப் போல முந்திக் கொள்ள காற்றாடி தயாரில்லை.

சிங்கள பௌத்த அரசாங்கம் நிறுவ முயற்சி செய்தவர்கள் இப்பொழுது விழி பிதுங்க கையைப் பிசைவதைக் காண காற்றாடிக்கு ஒரே மகிழ்ச்சி!

●

இது மட்டுமல்ல—மற்றொரு மேதினப் புரட்சியும் நடந்திருக்கிறது.

மூன்று எதிர்க்கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து தலைநகரில் நடத்திய மேதின ஊர்வலத்தில் சுதந்திரக் கட்சிக் கொடிகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன.

அது மட்டுமா? திரு. மைத்ரீ தவிர வேறு எந்த சுதந்திரக் கட்சி தலைவரும் ஊர்வலத்திற் கலந்து கொள்ளவில்லையே! திரு. ஆர். ஜி. போன்ற தலைவர்கள் ஊர்வலத்தில் மட்டுமல்ல, கூட்டத்துக்கே தலை காட்டவில்லை.

ஆகவே ஊர்வலமும் கூட்டமும் மற்ற இரு கட்சிகளின் "ஷோ" என்று தான் கூற வேண்டும் மேதினத் தன்று தங்களின் வல்லமையைக்காட்டப்போவதாக இவ்விரு கட்சிகளும் முதலில் தம்பட்டமடித்தன.

அரசாங்கத்துக்குக் காட்டியது எப்படி இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவிக்குத் தங்களின் சக்தியைக் காட்டிவிட்டன என்றே கூறலாம்.

காற்றாடி இந்த மேதினக் கூட்டத்திற்கு மேலால் பறந்து ஒரு கண்ணோட்டம் விட்ட போது, யாரோ சிலர் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதைக் கண்டது. அவற்றில் இரு பிரசுரங்கள் காற்றாடியின் நூலில் சிக்கிக்கொண்டன.

இந்தப் பிரசுரங்கள் எதிர்க்கட்சிகளைச் சுவைபடத் திட்டித்தீர்த்து எழுதப்பட்டிருந்தன. ஒன்று 'தம்பு'முகாமிலிருந்ததும், மற்றது 'சண்' முகாமிலிருந்ததும் வெளி வந்தவைகளைப் போலத்தொனித்தன.

●

இதோ பிறிதொரு மேதினப் புரட்சி —

திரு. நாகலிங்கம் சண்முகதாசனின் பீகிங் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி 'கம்கருவா' (தொழிலாளி) என்ற ஒரு சிங்களத் தினசரியை நடத்தி வந்ததல்லவா? அந்தத் தினசரி மேதினத்தன்று இடமொன்று வெளிவரவில்லை.

அது புர்ர்ரட்சிக் கட்சியல்லவா? ஆகையால் இதுவும் அக்கட்சியின் புர்ர்ரட்சியோ என்றசந்தேகம்காற்றாடிக்கு வந்துவிடவில்லை.

ஒரு தினசரி 2000 பிரதிகளுக்கு குறைவாக விற்பனையானால், அதனைஎப்படிநடத்துவது இந்தக் கதிதானும்'கம்கருவா' பத்திரிகைக்கு.பாவம்! அதற்கு மூடுவிழா நடந்து விட்டதாம்.

அரசாங்க கட்சிகளையும் எதிர்க்கட்சிகளையும் ஏககாலத்தில் தாக்கி ஒருபத்திரிகை எழுதினால், அதனை வாங்குவதற்கு புர்ர்ரட்சிக் காரர்களல்லவா வேண்டும்? அம்மாதிரி புர்ர்ரட்சிக் காரர்களைச் சீனாவிற்தானே கண்டு பிடிக்க முடியும்?

திரு. சண்முகதாசன் சீனாவுக்குப் பறந்து சென்றிருக்கிறார். அவர் சீனாவுக்கு புறப்பட முன்பு தனது புர்ர்ரட்சியைச் சிறிது காலத்துக்கு ஒத்தி வைப்பதற்கு மறந்து விடவில்லையாம். அவர் திரும்பி வந்து

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாட்களின் பின்னர்

# மக்கள் திலகம் முடி சூடிய காட்சி

சென்ற திங்கள் 21-ம் நாள் காலை—

கலையுலகம் புத்துயிர் பெற்றது; பூரித்து எழுந்தது!

நல்லிதயம் படைத்த மக்கள் — நாட்டோரிலே பெரும் பத்தியினர் - ஆனந்தக் கூத்தாடினார்கள்!

ஆம்: கலையுலகத்தில் மட்டுமல்ல; பாசத்தையும் பண்பையும் மதிக்கின்ற இந்தப் பூவுலகத்திலும் இருண்ட நூறு நாட்கள் இடையிலே அழிய கருணை ஒளி காட்சியளித்தது.

அன்றுதான் மறுபிறவி எடுத்த மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் மீண்டும் தன் கலைப்பணியைத் தொடர்ந்தார்!

'பிழைப்பாரா'—என்று திகிலுடன் காத்திருந்த நெஞ்சங்களை மகிழ்வித்து — அண்ணனைக் காணுது அழுதிருந்த லட்சக்கணக்கான தம்பிகளின் கண்ணீரைத் துடைத்து —

அவர் நுழைந்தார் சத்யா படப்பிடிப்பு நிலயத்தில்!

ஸ்டுடியோவெங்கும் மாவிலை தோரணங்கள் — வாசலில் சூழ்ந்திருந்த ஆயிரக்கணக்கானோர் நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சித் தோரணங்கள்!

ஆனந்தப்பண் எழுப்புகின்றன, காத்திருக்கும் இசைக் கருவிகள்— ஆனல், 'வருக, வருக, வள்ளலே!' என்று எழுப்பும் மகிழ்ச்சிக் குரலிலே அது மங்கி மறைகுறது!

காரைவிட்டு இறங்குகிறார், கூப்பிய கரங்களுடன்! நண்பர்களும், கலையுலகப் பிரமுகர்களும் வருகிறார்கள்! மாலைகள் விழுகின்றன! கண்ணீர்விட்டபடியே கட்டித் தழுவுகின்றனர் பேசும் சக்தியை இழந்துவிட்டவர்கள்! காலைத்தொட்டு தங்கள் வணக்கத்தைக் கொட்டுகிறார்கள் வயதிலே குறைந்தவர்கள்!

எல்லாரையும் இன்முகத்துடன் நோக்கிச் சிரிக்கிறார்-'உங்களைவிட்டு என்னைப் பிரிக்க இந்த உலகத்தில் எந்தச் சக்தியும் இல்லாதபோது, ஏன் அச்சம்? ஏன் இந்தப் படபடப்பு?' —என்று கேட்கிறது அந்தச் சிரிப்பு!

எல்லாரும் சிரிக்கிறார்கள்-

இயற்கை...?

அது வாளாவிருக்குமா?

அதுவும் சிரிக்கிறது—

'சடசட'வென்று பொழிகிறது வானம்!

மக்களின் இதயம் மலர்ந்தது! பூமி குளிர்ந்தது!

மக்கள் திலகம் வேடமணிந்து, பள்ளிச்சிறுர் போல் குதித்துக்கொண்டே நுழைகிறார், படமெடுக்கும் 'செட்'டுக்குள்!

விளக்குகள் காத்திருக்கின்றன—

காமிரா தயாராக இருக்கிறது—

'ஸ்டார்ட்' என்கிறார், டைரக்டர் சக்ரபாணி.

வாழ்க! மன்னன் வாழ்க!' என்று குரலெடுத்துக் கத்துகிறார், நடிகர் வீரப்பா.

மறுகணம் எம்.ஜி.ஆர். தலையிலே மகுடம் ஏறுகிறது!

'வாழ்க' - ஒலி எங்கும் எழுகிறது!

'அரச கட்டளை' படத்திற்கான காட்சிதான்; ஆனுலும் அவர் தலையிலே மகுடம் சூட்டப்பட்டது திரைப்படக் காட்சியாகத் தோன்றவில்லை, மற்றவர்களுக்கு.

வந்திருந்தோரிலே ஒருவர் சொல்லுகிறார், 'படத்திலே மகுடம் எதற்கு? வெளியே மக்கள் சூட்டி விட்டார்கள் அன்பு மகுடத்தை' என்று!

'காலிலே ஒரு விபத்து; தலையிலே ஒரு விபத்து! முதலும், முடிவும் நடந்து விட்டது! இனி அவரை யாரும் எதுவும் செய்ய முடியாது!'

என்று உறுதியுடன் சொல்கிறார், ஒரு ஸ்டூடியோ தொழிலாளி!

உள்ளே காட்சியின் வசனம் பேசுகிறார் வீரப்பா!

'இவனை நான் ஏன் மன்னனுக்கினேன்? ஏன் இந்த ஆட்சி மாற்றம்? காரணத்தைச் சொல்கிறேன். இது நாடல்ல கொடும்புலி வாழும் காடு; குற்றமிலார் உயிர் பறிக்கும் வீடு—என்று உணர்த்தியவன் இவன்!

'இது அரியாசனமல்ல—மக்களின் குறைகளை அறியாத ஆசனம்!

'இதுவரை நான் பிடித்திருந்தது செங்கோல் அல்ல; கொடுங்கோல்: கொள்ளையர் சுமக்கும் கன்னக்கோல்-என்று உணர்த்திய உத்தமன் இவன் தான்!'

— என்கிறார். மேலும் பேசுகிறார். டைரக்டர் கட்டளை இடுகிறார்: ஊழியர்கள் பணி புரிகிறார்கள்; விளக்குகள் அணைகின்றன: எரிகின்றன; படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது.

இடை இடையே தன்னைக் காணவந்து வாழ்த்துச் சொல்கின்ற தன் உயிர் நண்பர்களுடன் பேசி மகிழ்ந்தார் மறுபிறவி எடுத்த மக்கள்திலகம்!

# எம். ஜி. ஆரைப்பற்றி தவருன செய்திகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

படத்தின் ஆரம்ப தினத்தன்றே ரிலீஸ் தேதியையும் கொடுத்து விட்டு எம். ஜி. ஆரையும் நடிக்க வைத்து படத்தை முடித்துவெளியிட்டு விடுகிறாரே அப்படி இந்த தேவரிடம் என்னதான் வசியம் இருக்கும் என்று பலர் பேசிக் கொள்வதை நானே கேட்டிருக்கிறேன்.



என்னிடம் வசியம் எதுவும் கிடையாது! வேலையை நான் ஒழுங்காகச் செய்கிறேன்.

கதையை முதலிலேயே ஒழுங்கு படுத்திக் கொள்கிறேன். கதா பாத்திரங்களுக்கேற்ற உடைகளை ஒன்றுக்கு இரண்டாக தைத்து வைத்துக் கொள்கிறேன், பாட்டுக்களை முன் கூட்டியே பதிவு செய்து விடுகிறேன். நடிகர்களிடம் இன்னின்ன தேதியில் வேலை இருக்கும் என்பதை பல நாட்கள் முன்னதாகவே சொல்லி விடுகிறேன். ஒன்றுக்கு இரண்டு செட்டுக்களாக போடுகிறேன், ஒன்றில் வேலை தடைப்பட்டாலும் மற்றொன்றில் படப்பிடிப்பை வைத்துக் கொள்கிறேன். படத்தை முடிக்கிறேன்.

ஒன்று மட்டும் சொல்ல ஆசைப் படுகிறேன்.

பல நாட்கள் அவர் படப்பிடிப்புக்கு நாட்களை கொடுத்து விட்டு, [illegible] சந்தர்ப்பட்டவர்கள் அதை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் வீணடித்து விட்டதை நான் அறிந்திருக்கிறேன். ''சரியான திட்டமின்றி வரும் இவர்கள் என்னை வீணே குறைகூறுகிறார்களே, என்று இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மனம் குமுறியிருக்கிறார் அவர். ''பழி ஓரிடம் பகை ஓரிடம்'' என்ற பழமொழியின் உண்மையை இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தான் நான் அறிந்தேன்.

எனக்கு மட்டுமில்லை. நல்ல திட்டத்தோடு நாணயத்தோடு யார் வந்தாலும் எம். ஜி. ஆர் படத்தை நிச்சயம் முடித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். இதிலே சின்னவர்கள் பெரியவர்கள் பழகியவர்கள் பழகாதவர்கள் என்றெல்லாம் வித்தியாசமே அவர் பாராட்டுவதில்லை. ''தொழில் வேறு நட்பு வேறு'' என்றெல்லாம் சொல்லி வரும் அவர் ''நான் இரண்டையுமே ஏமாற்ற விரும்புவதில்லை'' என்று அடித்துச்சொல்வார்.

எம். ஜி. ஆர். கதைஅமைப்பில் குறுக்கிடுவார், படப்பிடிப்பில் வந்து வசனத்தை மாற்றிச் சொல்வார், காட்சியைத் திருத்துவார். என்றெல்லாம் ஒரு புகார் இருந்து வருகிறது. என்னைப் பொறுத்த அளவில் அவர் இம்மாதிரி எந்தச் சந்தர்ப்பங்களிம் நடந்தது கிடையாது.

ஆனுல் ஒன்று மட்டும் உண்மை! கதையை அவர் ஆரம்பத்தில் படிக்கிறார். தனக்கேற்றதாக இல்லையென்றுபட்டால் திருத்தி அமைக்கும்படி சொல்கிறார். அப்படிச் செய்ய இயலாவிட்டால் அந்தக் கதையில் நடிப்பதையே ஒதுக்கி விடுவார் அவர்.

'கஷ்டம் என்று யார் வந்து அவரிடம் முறையிட்டாலும் உடனே அவர் அந்த ஆளை மேலும் கீழுமாகப்பார்ப்பார்: அவர் சொல்வது உண்மையென தனக்குப்பட்டால் யார் தடுத்தாலும் உதவி செய்யாமல் இருக்கமாட்டார்!

—அடுத்த இதழில் முடியும்.

## திரைவாணன் பதில்கள்

எல். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: தமிழ்த் திரையுலகில் அதிக பணம் வாங்கும் நடிகர் எம்.ஜி. ஆர். என்கிறேன் நான். என் நண்பர் சிவாஜி, என்கிறார் இதில் யார் சொல்வது சரி?

ப: சிவாஜி, எம். ஜி. ஆர், இருவரிலும் யாருக்கு அதிக ரசிகர்களின் ஆதரவு இருக்கிறதோ அவரே அதிகப் பணம் வாங்குபவர்.

கே: மக்கள் திலகம் நடித்த படங்களில் அதிக நாட்கள் ஓடிய படம் எது?

ப: 'எங்க வீட்டுப்பிள்ளை. இப்படம் சென்னையில் 211 நாட்கள் ஓடியது.

ஃ

எஸ். எம். சின்னவெல்லை
ஏருவூர்.1

கே: நடிப்பிலே சிறந்த நடிகராக 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் இருந்தும், எண்ணற்ற சினிமா இரசிகர்களின் மனதிலே எம். ஜி. ஆர். நீங்காத இடத்தைப் பெற்றிருப்பதற்கு காரணம அவர்கள் எம். ஜி. யார் மீது கொண்டிருக்கும் மாருத அன்பு என்கிறேன் நான். தாங்கள்...

ப: தாங்கள் கூறியதை அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறேன்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.

கே: சிவாஜிகணேசன் நடித்த வீரபாண்டிய கட்டபொம்மன், பாசமலர், இருவர் உள்ளம், ஸ்ரீ வள்ளி, பராசக்தி ஆகியபடங்கள் இலங்கையில் முறையே எத்தனைநாட்கள் ஓடின?

ப: இவையனைத்தும் இலங்கையில் மகத்தான மக்கள் ஆதரவைப் பெற்ற படங்கள். பராசக்தி, ஸ்ரீவள்ளி, கட்டபொம்மன், பாசமலர் ஆகியபடங்கள் 100 நாட்கள் வரை ஓடியுள்ளன. 'இருவர் உள்ளம்'70நாட்கள் ஓடியது.

கே: 'கந்தன் கருணை' இந்தியாவில் எத்தனைநாட்கள் ஓடின?

ப: 100 நாட்களுக்கு மேல்!

ஃ

தா. இராஜமோகன்,
லிந்துலை.

கே: எம். என். ராஜம் தற்பொழுது எந்தப் படங்களில் நடித்து வருகிறார்? அவர் திரையுலகிலிருந்து மறைந்ததன் காரணம் என்ன?

ப: திரையுலகில் அசல்களுக்கு மதிப்புக் குறைந்து நகல்களுக்கு மதிப்பேறி விட்டதுதான் ராஜம் போன்ற நல்ல நடிகைகற் பின்னுக்கு தள்ளபபட்டதற்கு காரணம். அவரது நல்ல நடிப்பை 'தாலிபாக்கியத்தில்' காணலாம். பெயரிடப்படாத ஒருபுதியபடத்திலு ம்இப்பொழுது நடித்து வருகிறார்.

ஃ

ஆ. மாணிக்கராசா,
கல்முனை

கே. மக்கள் திலகம் நடித்துள்ள படங்களிலும் நடிகர் திலகம் நடித்துள்ள படங்களிலும் இலங்கையில் அதிக நாட்கள் ஓடியது எவை?

ப: நடிகர் திலகம் நடித்த பாசமலரும், மக்கள் திலகம் நடித்த 'நாடோடிமன்னனும்' இலங்கையில் அதிக நாட்கள் ஓடின.

ஃ

இ. நா. ராஜா
தாழங்குடா

கே: சிவாஜியின் மார்க்கட் சரிவதன் மர்மம் என்ன?

ப: எங்கே சரிகிறது? இன்று எம். ஜி. ஆரைவிட அதிக படங்களில் சிவாஜியே நடித்து வருகிறார். ஸ்ரீதரின் 'நெஞ்சிருக்கும் வரை' கே. எஸ்.ஜி.யின் 'பேசும் தெய்வம்' ஆகிய இரு படங்களும் வெளியிடப்பட்டபின்னர் நடிகர் திலகத்தின் மார்க்கட் எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டதே!

கே: எம்.ஜி. ஆர் நடித்த நான் ஆணையிட்டால், சென்னையில் எத்தனைநாட்கள் ஓடியது?

ப:100 நாட்கள் ஓடவில்லை!

ஃ

எம். கணபதி
உடப்பு

கே: பெற்றால்தான் பிள்ளையா படத்தின் மூலம் எம். ஜி. ஆர். தன்னல் குணசித்திரபாக மேற்று நடிக்க முடியுமென்று நிரூபித்து விட்டாராமே?

ப: உண்மைதான்! எம். ஜி. ஆரை அப்படி நடிக்க வைத்த பெருமை டைரக்டர்களான கிருஷ்ணன் பஞ்சுவையே சேரும்!



'தாய்க்குத் தலைமகன்' படத்தில் மனோகரும் எம். ஜி. ஆரும் மோதிக் கொள்ளும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகையர் திலகம் டைரக்டராகிறார்

நடிகை சாவித்திரி, சினிமா பட டைரக்டர் ஆகிறார். முதல் முதலாக தெலுங்குப் படம் ஒன்றை டைரக்ட் செய்கிறார்!

100க்கு மேற்பட்ட படங்களில் சாவித்திரி நடித்திருக்கிறார். இப்போதும் அவர் படங்களில் கதாநாயகியாகவே நடித்து வருகிறார்.



கடந்த ஆண்டு 'நவராத்திரி' படத்தை தெலுங்கில் சொந்தமாகத் தயாரித்தார் சாவித்திரி! இப்போது மீண்டும் ஒரு தெலுங்குப் படம் தயாரிக்கப் போகிறார். சாவித்திரியுடன் பிரபல தெலுங்குப்படத் தயாரிப்பாளர் ஒருவரும் கூட்டுச் சேர்ந்திருக்கிறார். இக் கம்பெனிக்கு ஸ்ரீமாதா புரொடக்ஷன்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை சாவித்திரியே ஏற்றிருக்கிறார்! அதோடு படத்தில் கதாநாயகியாகவும் அவரே நடிக்கிறார்!

இப்படத்தின் இசை அமைப்பை பாடகி பி. லீலா ஏற்றிருக்கிறார். நடிகர் நடிகைகள் தேர்வு முடிந்ததும், அடுத்த மாதம் படப்பிடிப்பைத் தொடங்க, நடிகை சாவித்திரி தீர்மானித்திருக்கிறார்!

## செம்மீன் கணக்கு

'செம்மீன்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் இரண்டெழுத்துக் காரரான 'ஷீலா'

தயாரிப்பாளர் 'பாபு'வும் இரண்டெழுத்துக்காரர்.

படப்பிடிப்பு செய்த ஒளிப்பதிவாளர்கள் இரண்டுபேர்கள்.

1956-ம் ஆண்டு அகில இந்தியாவில் சிறந்த நாவல் எனப் பரிசு பெற்ற 'செம்மீன்' கதை, படமாக்கப்பட்டவுடன் கூட சிறந்த படம் என ஜனாதிபதியின் பரிசைப் பெற்றுள்ளது. ஆகஜனாதிபதி பரிசு கிடைத்தது இரண்டு தடவைகள்

மலையாளத்தில் மூன்றாவதாகத் தயாரிக்கப்பட்ட வண்ணப் படம் இது.

நடித்தவர்களில் பலர் இரண்டெழுத்து மூன்றெழுத்துக் காரர்கள். ஷீலா மலையாளத்தில் நடித்த முதல் வண்ணப் படம் இது. ஷீலாவின் முக்கியமான ஆசைகளும் இரண்டு. ஒன்று படத்தில் நடிப்பது. இரண்டாவது கதைகள் எழுதுவது. 'செம்மீன்' படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது ஷீலாவுக்கு இரண்டு பெயர்கள். படத்தில் 'கறுத்தம்மா'. படப்பிடிப்பின் போது இவர் மற்றவர்களால் அழைக்கப்பட்டது 'செவத்தம்மா' என்று!

## யார் சொன்னது சரி?

தியாகராயர் கல்லூரியின் விடுதிவிழா அண்மையில் நடைபெற்றது. விழாவின் முக்கிய விருந்தினர், அக்கல்லூரியின் குழுத்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள்.

சொற்பொழிவாளர்களில், ஒருவராகிய செனட் அங்கத்தினர் திரு. க. அறிவழகன் எம். ஏ. அவர்கள் தன்னுடைய பேச்சில் மேல் நாட்டிலிருந்து வெளிவரும் 'அப்சர்வர்' என்ற பத்திரிகையில் சுவிட்சர்லாந்திலுள்ள உலக நிருபர் ஒருவர் அப்பத்திரிகையில் எம். ஜி. ஆரின் படத்துடன், அவர் ஒரு சாது என்றும், அவருடைய வருமானத்தில் 80 சதவிகிதத்தைப் பொது காரியங்களுக்குக் கொடுத்து விடுகிறார் என்றும் எழுதி இருப்பதாகக் கூறினார்.

உடனே பக்கத்தில் அமர்ந்திருந்த எம். ஜி. ஆர். 'அப்பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பது 80 சதவிகிதமல்ல, 70 சதவிகிதமே' என்று கூறித்திருத்தினார்.

அறிவழகன் அவர்கள் சிரித்தபடியே, 'இப்படி ஏதாவது ஒரு தவறு நேர்ந்துவிடும், எம். ஜி. ஆரிடம் மாட்டிக் கொள்வோம் என்றுதான், நான் அப்பத்திரிகைச் செய்தியைக் கையோடு கொண்டு வந்தேன்' என்று கூறி, செய்தியை எடுத்துப் பார்த்து விட்டு எம். ஜி. ஆர், சொன்னது சரிதான் என்று அசடு வழியக் கூறியதும், கூடியிருந்தவர்கள் அனைவரும், எம். ஜி. ஆர் உட்பட, 'கொல்' என்று சிரித்தார்கள்,



'தாய்க்குத் தலைமகனில்' எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா

## மக்கள் திலகம் ஒரு "கைக் குழந்தை"

எம். ஜி. ஆரா, சிவாஜி கணேசனா வயதில் இளையவர்? இதில் என்ன சந்தேகம்? சிவாஜிதான் என்கிறீர்களா?

நீங்கள் சொல்வது தவறு. நாம் இப்படிச் சொல்லவில்லை. எம். ஜி. ஆரே சொல்லியிருக்கிறார். திகைக்கிறீர்களா?

எம். ஜி. ஆர். பின்வருமாறு கூறுகிறார், படித்துவிட்டு உங்கள் திகைப்பை நிறுத்துங்கள்!

'சென்னை அரசாங்க மருத்துவ மனையில் மருத்துவ நிபுணர்கள் பெருமுயற்சி செய்து எனக்கு உயிரைக் கொடுத்து இந்த உலகத்திற்கு மீட்டுத் தந்தார்களே,—அந்த 1967 சனவரி 13ந் திகதி தான் சமீபத்தில் நான் பிறந்த நாள்.

'வயதில் நான் சிவாஜியை விட மூத்தவன். ஆனால் சமீபத்தில் நான் மறுபிறப்பு எடுத்ததாக கருதுகிற தேதியை கவனித்தால் நான் ஒரு கைக் குழந்தை என்றே நினைக்கிறேன்.'

இப்பொழுது உங்கள் மயக்கம் தெளிந்ததா?

திரைவிமர்சனம்:

## தாய்க்குத் தலைமகன்



ஒரு தாய்க்கு பல பிள்ளைகள் இருக்கலாம். ஆனாலும் மூத்த பிள்ளையிடம் தான், தனி வாஞ்சையும் விசேட அன்பும் அவளுக்கு இருக்கும். மூத்த பிள்ளை, பெற்ற தாயை இகழ்ந்தாலும், கெட்டவனாக மாறினாலும் தாய் அவன் மேல் கொண்ட பாசம் மட்டும் ஒரு துளியும் குறையாது. இந்தக் கருத்தை வைத்துப் பின்னப்பட்டிருப்பதுதான் தேவர் பிலிம்சாரின் 'தாய்க்குத் தலைமகன்'

சமீபகாலமாக, சண்டைக்காட்சிகளைக் குறைத்து, கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து படங்களைத் தயாரித்து வரும் தேவர் இதிலும் அதையே கையாண்டிருக்கிறார்

குடும்பத்தின் மூத்த பிள்ளையாக வருகிறார் அசோகன். படத்தின் முற்பாதியில் சகோதர பாசமும், தாய்ப் பாசமும் நிறைந்த குடும்பத் தலைவனாக வருபவர், பிற்பாதியில் சந்தர்ப்ப வசத்தினால் கெட்டவராகி விடுகிறார். நல்ல நடிப்பு.

எம். ஜி. ஆர். அவரது தம்பி. தம்மால் இயன்றவரை சிறப்பாக நடித்திருக்கிறார்.

எம். ஜி. ஆர். வந்தால் அவருடன் மோதுவதற்கு ஒருவர் வேண்டுமே என்கிறீர்களா?

கவலையை விடுங்கள். அந்தப் பணியை மனோகர் ஏற்றுக் கொண்டு எம். ஜி. ஆரிடம் 'வாங்கிக் கட்டுகிறார்'.

கார் டிரைவராக வரும் நாகேஷ், மனோரமாவுடன் நடத்தும் காதல் போட்டி வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்.

ஜெயலலிதா முன்னுக்கு கவர்ச்சிப்பாவையாகவும் பின்னர் குடும்பப் பெண்ணாகவும் நடிக்க முயற்சித்திருக்கிறார்.

ரங்கராவின் நடிப்பு எடுபடவில்லை. அவருக்கு அதிக சந்தர்ப்பமும் இல்லை.

ஆரூர்தாசின் வசனங்கள் பொருள் பொதிந்துள்ளன. பாடல்கள் மனதில் பதியும் படியாக இல்லை.

நல்ல பல கருத்துக்களும், படிப்பினைகளும் கொண்ட இப் படத்தை ஒவ்வொரு குடும்பத்தினரும் பார்க்கலாம்.

## பாம்பு வளர்க்கும் ஜோதிலட்சுமி

நடிகைகள் சாதாரணமாக வீட்டில் என்ன வளர்ப்பார்கள்?

நாய் வளர்ப்பார்கள், கிளி வளர்ப்பார்கள் ஜமுனாவைப் போல அபூர்வமாக காட்டு அணிலை வளர்ப்பார்கள்.

ஆனால் ஜோதிலட்சுமி என்ன வளர்க்கிறார் தெரியுமோ? பாம்புவளர்க்கிறார்.

ஜோதிலட்சுமியின் வீட்டில் நுழைந்தவுடனே இடது பக்கம் ஒரு பெரிய பாம்புப் புற்று இருக்கிறது. அதில் தான் இந்தப் பாம்பும் வாடகை தராமல் சுகவாசம் செய்து வருகிறது. 'நாங்கள் இந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து இந்தப் புற்று இருக்கிறது. ஒரே ஒரு சமயம் நாங்கள் இந்தப் பாம்பைப் பார்த்திருக்கிறோம்' என்று சொல்லும் ஜோதிலட்சுமி, வெள்ளிக்கிழமை, மற்றும் விசேட நாட்களில் இதற்கு பூசை செய்கிறார். ஒரு பட்டுப் பாவாடைதைத்து இந்த நாகராஜனுக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

பால், முட்டை படைப்புக்களும் நடக்கின்றன.

'வீட்டில் ஏதாவது சோதனையான கட்டங்கள் வரும் போது இந்த நாகராஜனை வேண்டிக் கொள்வதுண்டு. அது சரியாகிவிடும்' என்கிறார் ஜோதிலட்சுமி.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பதுக்கு விதி விலக்கு இந்தஜோதிலட்சுமி.



'தாய்க்குத் தலைமகனில்' மனோகரும் எம். ஜி. ஆரும் மோதிக் கொள்ளும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்புகடிக்கு..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாம்பின் விடம் இரத்தத்தில் கலப்பதைத் தடுப்பதற்கு கடி-வாய்க்குமேல் ஒருகட்டுப் போடுவதும் விடம் இரத்தத்தில் பரவுவதை தாமதப்படுத்தும். கடிவாயைக் கீறுவது அவ்வளவு புத்தியானதல்ல.

ஏனைய பிற விஷங்களை உட்கொள்ளுவதால் சம்பவிப்பது போன்றும், சம்பந்தப்பட்ட பாம்பின் தன்மையையும், உட்சென்ற விஷத்தின் அளவையும் பொறுத்ததாகவே பாம்புக்கடியின் தாக்கம் இருக்கும். இலங்கையில் காணப்படும் பாம்புகளில் மிகப் பெரும்பாலானவை விஷமுள்ளனவல்ல. ஆகவே, அவற்றின் கடிக்கு விஷ வைத்தியம் தேவைப்படாது. விஷப் பாம்புதான் ஒருவரைத் தீண்டியிருப்பினும் அச்சமயம் அதன் கரப்பியில் போதிய விடம் இருந்திராவிட்டால் (உதாரணத்துக்கு உணவு உட்கொண்ட பின்) விஷத்திற்குரிய அறிகுறிகள் நோயாளியில் தீவிரமற்றதாக சிறுதலவே காணப்படும். எதுவித சிகிச்சையும் அளிக்கப்படாவிட்டாலும் நோயாளி நோயாளி குணமடைவார்.

### சிறு நீரகம்

விடம் பெருமளவில் உடம்பில் பாய்ச்சப்பட்டிருப்பின் விடத்திற்கு எதிரான மாற்று மருந்து விடத்தைப் பலனற்றதாக்கி ஈடு செய்யும். ஒருக்கால் பெருமளவு விடம் இரத்தத்தில் செறிந்துவிட்டிருக்குமாகில் உடம்பின் சில உறுப்புக்கள் சேதமுறவே செய்யும். ஆயினும் நோயாளியை இறந்துபோக விடாது காப்பாற்றி உயிருடன் வைத்திருக்கக் கூடுமாகில், அதிர்ஷ்ட வசமாக இவ்வுறுப்புக்கள் யாவும் பின் பூரண குணமடைந்து விடும். சிறு நீரகம் சேதமடையும்போது மட்டுமே ஆபத்து நிறைந்த சிக்கல்கள் உண்டாகின்றன. அவ்விதம் பாதிக்கப்பட்டவர் ஒருவரா காலத்திற்கிடையில் இறந்து போவார். சிறு நீரகம் 1-2 வார காலத்திற்குத் இயக்கம் கெட்டு தொழிற்பட மாட்டாது. ஆயினும் பின் பூரண குணமடையும்.

### பாம்புகடிக்கு பலியாகாதீர்

தற்காலிகமாக சிறு நீரகத்தின் தொழிலை மேற்கொள்ளக் கூடிய நவீன வைத்திய முறைகளைக் கையாண்டு நோயாளியை குறிப்பிட்ட காலக்கெடு முடியும் வரை உயிரோடு வைத்திருக்க முடியுமானல் அதன் பின் நோயாளி குணமடையத் தொடங்குவார்.

பொது மக்கள் இதனை அறிந்து பயனடைய வேண்டுமென்பதற்காகவே பத்திரிகை வாயிலாக இதை யாவருக்கும் தெரியப்படுத்துகிறேன். ஆகவே, பாம்பு கடிக்கு உள்ளானவர்களை உடனடியாக அரசினர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதன் மூலம் சிறிது கவனமெடுத்தால் காப்பாற்றப்படக்கூடிய மனிதர்களை அற்ப ஆயுளில் மரிக்க அனுமதிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## இராமனின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்திமானுமாகிய ஒரு சிறந்த மன்னன் வாலி இறந்து விட்டமை வாலியிடம் அனுதாபத்தை உண்டுபண்ணுகின்றது.

வாலியைக் கொன்றதில் நீதி தவறு இராமனும் நீதி தவறிவிட்டான் எனலாம்.

வாலிமீது ஏவப்பட்ட அம்பை வாலி பிடுங்கியதினுல் தனது வீரத்தின் ஆற்றலுக்கு பங்கம் ஏற்படுத்திக்கொண்டதுடன். வாலிவதையைநிகழ்த்தியதினுல் அவனது உண்மைக்கும், நடுநிலைக்கும் இராமன் மாசு ஏற்படுத்திக் கொண்டு விட்டான். வாலியைப் பொறுத்தவரை இராமன்நெறி தவறிவிட்டான்.

## அமெரிக்காவை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

6 எம். எம். துப்பாக்கிஒன்றையும், 357 கைடு துப்பாக்கிஒன்றையும் கையிலேவைத்துக்கொண்டு தொலைதூரக் கண்ணுடியால் பார்த்துப் பார்த்து விட்மன் சுட்டுக்கொண்டிருப்பது தெரிந்ததும் அவள் ரத்தம் உறைந்தே போய்விட்டது!

### 20 நிமிடத்தில்...

20 நிமிட நேரம் இப்போது விட்மனின் துப்பாக்கி அலறியது.

இந்த 20 நிமிடத்தில்—

தாமஸ் எக்மான் (19), ராபர்ட்போயர் (33), பில்லி ஸ்பீட் (23), ராய் ஸ்கிமிட் (29), தாமஸ் அஸ்டன் (22), பால் சான்டாக் (18) கிளவ்டி யாரட் (18), ஹாரி வல்சக்(39), தாயஸ்கர்(24).

—ஆகியோர் அந்தத் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாயினர்; பலர் காயமுற்றனர்.

இதற்கு நடுவே—

அமெரிக்கப் போலிசார் 100 பேரும், விஷேச இராணுவத்தைச் சேர்ந்த 30 பேரும் அங்கு விரைந்து வந்து சேர்ந்தனர்; ஆங்காங்கே பதுங்கிக் கொண்ட அவர்கள் கண்களிலிருந்து விட்மன் தன்னை மறைத்துக் கொள்ள முடியவில்லை; இவர்கள் துப்பாக்கிகள் கர்ஜித்தன; அவன் சளைப்பதாயில்லை. மீண்டும் சுட ஆரம்பித்தான் அவன்!

இப்போது அவனுடைய துப்பாக்கிரவைகள்--மார்க்ரெட் லாம்பார்ட், என்பவளின் உயிரைக் குடித்தது.

ரத்த வெறி பிடித்துவிட்ட சார்லஸ் விட்மனை எப்படிச் சுடுவது என்று போலிசார் யோசித்துக் கொண்டிருந்த அதே வேளையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த மணிக்கூண்டின் பின்புறம் எழுந்து ஓடினன் விட்மன்.

### போலிசார் சுட்டனர்

'எப்படியும் இனி அவன் வெளிப்படக்கூடும்; நாங்கள் சுட்டுத் தள்ளுகிறோம் அவனை'—என்று உயிரை வெறுத்துக் கூறிய ஹஸ்டன் மக்கே, ஜெர்ரிடே, ரமிரோ மார்ட்டினஸ், ஆலன்கிரம். ஆகிய நான்கு போலிசார்—பதுங்கிய இடத்திலிருந்து வெளியே வந்து துப்பாக்கி ஏந்திக் குறி பார்த்தபடியே நாலாபுறமும் மணிக்கூண்டைப் பார்த்தவாறே ஓடினர். அவர்கள் நினைத்ததுவீண் போகவில்லை.

திடீரென்று அடுத்த கட்டிடத்துக்குத் தாவிய விட்மனை, சடசட வென்று வெடித்த மார்ட்டினஸின் 6 துப்பாக்கி ரவைகள் சல்லடையாகத் துளைத்தன! மக்கேயின் குண்டுகள் அவன் தலையைச் சிதறடித்தன! 'ஓ' வென்று அலறிக் கொண்டே 307 அடி உயரத்திலிருந்து கீழே வந்து விழுந்தான் சார்லஸ் விட்மன்!

கீழே விழுந்த அவனுடைய உயிர் பிரியும் போது சரியாக மணி 1.24 ஆயிற்று.

15 பேர்களின் உயிரைக் குடித்த அவன் பரிதாபமாகச் செத்துக் கிடந்ததை அந்த நகரமே திரண்டு வந்து பார்த்தது; போலிசார் பிணத்தைக் கைப்பற்றிப் பரிசோதனைக்குக் கொண்டு போயினர்.

'திடீரென்று அவனுக்குப் பிடித்த ரத்த வெறியே—பைத்தியமே இந்த வெறித்தனமான போக்குக்குக் காரணம்' என்று தீர்ப்பு கூறினர் அமெரிக்காவின் கை தேர்ந்த சில மருத்துவ நிபுணர்கள்.

'உண்மை எதுவாயினும் ஆகட்டும்; ஒரு கொலைபாதகனைத் தொலைத்துக்கட்டினேம்'என்று பெருமைப்பட்டுக் கொண்டனர் அமெரிக்கப் போலிசார்.

## மே தினப்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

'கம்கருவா'வுக்குப் புத்துயிரூட்டுவாரோ, என்னவோ!

இப்பத்திரிகைக்கு மாதம்ரூ. 25,000 நஷ்டம் ஏற்பட்டதாக காற்றிலே மிதந்து வந்த ஒரு வதந்தி காற்றுடியிலே மோதியது.இந்த நஷ்டம்பற்றி முக்கியமான ஓர் இடத்துக்குத் தெரிவிக்கப்பட்டதாம். அந்த இடம் எது என்பது காற்றுடிக்குத்தான் வெளிச்சம். எடுத்த காரியம் கைகூடாததால் பத்திரிகைக்கு முழுக்குப் போடும்படி பத்திரிகை உலகின் ஒரு பெரிய புள்ளி யோசனை கூறினராம். அதுயார்?

மேதினப் புரட்சி தெற்கே மட்டுமன்றி வடக்கேயும் நடந்திருக்கிறது.

வடபகுதி மக்களுக்குத்தேர்ந்த கட்சிகள் மீது திடீரென மோகம் கூடிவிட்டது என்று மூன்று எதிர்க்கட்சிகளும் கண்டு பிடித்தன. எனவே ஒரு மேதினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தி மூன்று கட்சிகளை சேர்ந்த மூன்று சிங்களப் பிரமுகர்கள் பேசினர்கள்

'சோஷலிஸம் ஏற்பட்டுவிட்டால் தமிழ்ப் பேசும் மக்களுக்கு மொழி உரிமை உட்பட எல்லா உரிமைகளும்தானுகவே கிடைக்கும்' என்று அவர்கள் ஓங்கி அடித்தார்கள்.

'அப்படியா?' என்று எந்த தமிழரோ, முஸ்லிமோ வாயைப் பிளக்கவில்லை. அதற்குப்பதிலாக அவர்கள் ஒரு சவால் விட்டார்கள்!

'அப்படியானுல், சோஷலிஸ்ட் ஆட்சி ஏற்பட்டதும் தமிழ் மொழிக்குச் 'சம அந்தஸ்து' வழங்கப்படும் என்றும் தமிழ்ப் பேசும் இனத்துக்கு 'சுய நிர்ணய உரிமை' வழங்கப்படுமென்றும் சிங்கள மக்களுக்கும் கேட்கக் கூடியதாக அவர்கள் இன்றே பிரகடனம் செய்ய முடியுமா' என்று கேட்டார்கள். பதில் கிடைத்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? அவர்களின் ...ம் கம்பெனியாக கும் எட்டியது.

# 'சாதிப் பிரிவினிலே தீயைமூட்டுவோம்'

### தீண்டாமை ஒழிய வேண்டும்

சித்தர்கள் சிவத்தைக் கண்டவர்கள்; தங்கள் சித்தத்தின் வலிமையினுல் எட்டுச் சித்திகளையும் அனுபவித்தவர்கள். அவர்களை விடவா மற்றைய மதவாதிகள் உயர்ந்தவர்கள்? அவர்கள் சாதிமத பேதத்தைச் சாடினர்கள்! சீரிய வாழ்க்கை சிறப்பதற்கு வழிகூறினர்கள். ஆனல் நம்மவர்கள் அச்சித்தர்களின் கொள்கைகளுக்கு மதிப்பளியாமல் மதமூடக் கொள்கைகளையே பெரிதாகக் கருதினர்கள். அதனல் பாவமூட்டைகளையே சேமித்துக் கொண்டார்கள்! இதோ சித்தர்கள் கூறிய அர்த்தமுள்ள சில வாக்கியங்கள்:—

1. 'பறைச்சியாவதேதடா? பணத்தியாவதேதடா? இறைச்சி தோல் எலும்பிலும், இலக்கமிட்டிருக்குதோ? பறைச்சிபோகம் வேறதோ? பணத்திபோகம் வேறதோ? பறைச்சியும் பணத்தியும், பகுத்து பாரும் உம்முளே!'

2. 'சாதியாவதேதடா? சலம் திரண்டநீரலோ? பூதவாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ! காதில் வாளி, காரை, கம்பி, பாடகம் பொன் ஒன்றலோ! சாதிபேதம் ஓதுகின்ற தன்மையென்ன தன்மையே!'

— சிவவாக்கியர்

3. 'மேதியோடு ஆவுமே விரும்பியே புணர்ந்திடில்,சாதிபேதமாயுருத் தரிக்குமாறு போலவே வேத மோதுவானுடன் புலைச்சிசென்று மேவிடில் பேதமாய்ப் பிறக்கிலாவ வாற தென்ன பேசுமே!'

— சிவவாக்கியர்

5. 'சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்'!

— பாம்பாட்டி

6. 'சாதி பேதமில்லை, அகப்பேய்! தானுகிநின்றவர்க்கே!'

— அகப்பேய்ச்சித்தர்

6. 'சாதிபேதங்கள் சொல்லுகிறீர்! தெய்வம் தானெற்றெருருவுடல் பேதமுண்டோ? ஓதிய பாலதில் ஒன்றுகிதிலே உற்பத்தி நெய், தயிர், மோராச்சு'

— கொங்கணர்

ஆகவே மேற்கூறிய வாசகங்களை புணர்ந்து, தெளிந்து தீண்டாமையைப் பூண்டோடு ஒழிப்போம்.

— மதிவாணர் —

## மீண்டும் மதமாற்றம்

மேமாதம் 16ம் திகதி போயா தினத்தன்று கொழும்பு, ஹவ்லக் டவுன், லும்பினி மண்டபத்தில் மீண்டும் 'மதமாற்றம்' என்னும் நாடகம் அரங்கேற்றவிருக்கிறது.

பலமுக நடிகவேள் என்று போற்றப்படுபவரும் 'சலோமியின் சபதம்', யாருக்காக அழுதான்', 'நாடற்றவன்' போன்ற பல வெற்றி நாடகங்களைத் தயாரித்து அளித்து வரும் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனர் பற்றி வில்லுப் பாட்டுப் பாடி வில்லிசை வேந்தர் என்று பாராட்டப்பட்டவருமான லடீஸ் வீரமணி இந்நாடகத்திற்கு நெட்டுவாங்கும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

## உறவு.....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

—என் அன்புயர் அண்ணன் 'உன் நன்மைக்காகப் பிரிகிறேன்'; எனக் கூறிப் பிரிந்தார். பிரிந்தே விட்டார்! அவர் காலைப் பிடித்தபடி கடைசியாக அழுதுவிட்டு பிரிந்தேன் பின்பு சந்தித்ததே கிடையாது'— என சந்திரா கூறி முடித்தாள்.

'நிலவும் பெண்ணும்' என்ற நாவலை சந்திராவின் கைகள் எடுத்தன். அதிலிருந்த படத்துடன்; தாய் கொடுத்த படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். ஒரே படங்கள் தாயிடம் கேட்டான்.

'ஆமடா! இந்த 'நிலவும் பெண்ணும்' அவர் எழுதியது தானடா' இது கூட அவர் கூறக் கூற யான் எழுதிக் கொடுத்தேனடா' என சந்திரா பெருமூச்சுடன் கூறினள்.

ஒஅவருக்குரு மகள் உண்டல்லவாம்மா' என்முன் சந்திரமோகன்.

உனக்கெப்படித் தெரியும்'

'அவள் பெயர் மல்லிகாம்மா. அவளும் யானும்...' என்று இழுத்தான் மோகன்.

சந்திராவின்கண்களில் கண்ணீர்; அது ஆனந்த நிலை தந்த

## தமிழ் கலைஞர்களுக்கு பொன்னுடை

இம்மாதம் 12ந்திகதி முதல் இலங்கை தியாகராஜ கான சமாஜத்தின் ஆதரவில் தலைநகரில் நடைபெற்று வரும் ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 200வது ஜயந்தி உற்சவத்தின் இறுதி நாளாகிய 16ந் திகதி ஈழத்தின் தலை சிறந்த இசை, நடனக் கலைஞர்களுக்கு மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவையினுல் பொன்னுடை போர்த்தி கௌரவிக்கப்படவிருக்கிறது.

நாதஸ்வர மேதை என். கே. பத்மனுதன், சங்கீதமேதை திரு. என். அச்சுதன் பாகவதர், திருமதி கமலா ஜோன்பிள்ளை ஆகியோரே பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறர்கள்.

இந்த வைபவம் 16ந்திகதி மாலை 7. 30மணிக்கு வெள்ளவத்தை சம்மான் கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் சமாதான நீதவான் திரு. கே. நாகலிங்கம் தலைமையில் நிகழும்.

—o—

## 4 மணி நேர...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தடவை திரைப்படம் பார்க்கச்சென்று வருவதனுல் தங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் ஆயாவுக்காக குறைந்தபட்சம் ஐந்து டாலர் செலவு செய்ய வேண்டியதாம். நம்முடைய ரூபாய்க் கணக்கில் பார்த்தால் இருபத்தைந்து ரூபாய்கள்.

ஆகவே அமெரிக்கப் பெற்றோருக்கு குழந்தைகள் பெருஞ் சுமையாகத் தோன்றுவதில் வியப்பென்ன!

கண்திவலைகள்? சந்திரா இளமங்கை போல உடலில் புது உற்சாகம் கொண்டாள்.

பின்பென்ன......!

'இதய அன்பு மாற்றமில்லா மாமருந்து'—ஒருவன்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை பெறுவது எப்படி?

(சென்றவாரத்தொடர்ச்சி)

நம்முடன் பிறந்த சில ஆற்றல்கட்கு கவசமிடுதல் இரண்டாவது படியாகும். பல பொருட்களின் உள்ளடக்கம் பற்றி பேசுகின்றோம்; அவைகள் முக்கியமும் கூட, ஆனால் பொருள்களின் தன்மைகள் அனைத்தும் அடிக்கடி அதனின்றும் தொலைவிலேயே காண்கின்றோம்.

தன்னம்பிக்கை என்பது சமூகத்தின் அருளால் வளர்வது. நம்மிலே பலபேர் நமக்கு நல்ல நம்பிக்கையோடு இருக்கலாம். மற்றவர்களைப் பார்க்கின்ற போதுதான் தொல்லை தொடங்குகிறது. எனவேதான் நமக்கு உதவக்கூடிய பலதரப்பட்ட மக்களுடன் நம்மால் முடிந்த அளவு தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களின் அனுதாபமும் அறிமுகமும் நம்மை வலிவுள்ளவர்களாக ஆக்குவதுடன் நல்ல உபதேசமும் பெறும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

அப்படிப்பட்ட தன்னம்பிக்கையுள்ளவர்களுடன் போட்டி போட்டு நம்முடைய தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பட்டவர்களுடன் பழகுவதே நமக்கு நல்ல ஒழுக்கத்தையும் மன வலியையும் அளிக்கக்கூடியதாகும். அவர்களின் இயல்புகளில் ஏதேனும் சிலவற்றை நாம் பெறுதல் இயலும்.

அப்படி ஒன்று கலந்து பழகுவதால் ஏற்படக்கூடிய இரண்டாவது பயன் நாம் அளவு கடந்த யோசனைகளைப் பெறுகின்றோம். சில பொருட்களைப் பெறுகின்றோம். சில பொருட்களை நாம் நன்றாக அறிவோம் என்கின்ற எண்ணம் நமக்கிருந்தால் அதுவே தன்னம்பிக்கை எனும் கொடி பறக்கும் மரமாகும்.

இங்கே அகந்தைக்கு அவசியமில்லை. ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி முற்றிலும் அறிந்தவர்கள் மற்றவர்களை விட மிகப் பணிவாக இருப்பதை காண்கிறோம். மனிதத் தன்மை என்பது உண்மையான பேரறிவின் உருவம்.

கற்பனை:- குற்றம் சாட்டக் கூடிய எந்த ஒரு பகற் கனவுமின்றியே நாம் விரும்பக் கூடியவர்களை போன்று நம்மையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

தன்னம்பிக்கை வளர்ச்சிக்கு உடல் வலிவு மிகவும் உதவியாக இருக்கும். கூன் விழுந்த முதுகும் குழி விழுந்த கண்களும் நாம் பெற்றிருக்கும் நிராசைகளை நிரந்தரமாக்கிவிடும். விம்மும் தோள்களும்; தளராத நடையும் தன்னம்பிக்கையை வளர்க்க துணை நிற்கும்.

நாம் நினைக்கின்ற படி நம்முடைய உடற் தோற்றத்தை காட்சி தர செய்வதற்கு கற்பனை மிகவும் பயன் படும்.

தெளிவு:- இன்னமும் கருத்தினை அறிவிப்பதற்கு சிறந்த வழியாக இருப்பது பேச்சுத்தான். தன்னம்பிக்கையில்லாத பல பேர் இங்கேதான் உருகுலைக்கப் படுகிறார்கள். அப்படியும் அவர்கள் எண்ணங்களையும் திட்டங்களையும் அறியாதவர்கள் அல்ல இருந்தாலும் தாங்கள் அறிந்தவற்றை சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வருகின்ற பொழுது தள்ளாடுகிறார்கள்! தவறிவிடுகிறார்கள்.

தன்னம்பிக்கை இன்றி இன்னல் படுபவர்கள் அதனின்றும் விடுபடுவதற்குள்ள ஒரே வழி பல பொதுக் கூட்டங்களில் பேசி பழகுவதுதான்: கண்ணாடி முன்னால் நின்று கூட பேசலாம்; ஆனால் கண்ணாடி என்பது பார்வையாளர்கள் அல்ல! உன்னுடைய பிரதிபிம்பமும் பொது மக்களல்ல!

சில பொருள்களில் மட்டும் நம்பிக்கையோடும்; ஒரு கூட்டத்தை சமாதானப் படுத்தக் கூடிய வகையிலும்; நினைத்ததை நன்றாக தெளிவாகவும் திருப்தி ஏற்படும் வகையிலும் பேசுகிறோம்.

இந்த திறமையை நல்ல பயிற்சியின் மூலமாகவே பெற இயலும் ஒரு முறை நீங்கள் பொது மேடையேறி பலர் முன்னிலையில் பேசிப் பழக்கப்பட்டுவிட்டால்; பிறகு நீங்கள் உலகத்தில் உள்ள எந்த ஒரு மனிதனுடனும் பேசுகின்ற துணிவை பெற்று விடுகிறீர்கள்.

## அந்தரலோகம் போய்வருவோம்!

—பாலமுருகன்—

நீலவான நெற்றியிலே
நீயோ வண்ணப் பொட்டிட்டாய்?
நீலவானில் ஏறுதற்கு
ஏணி தந்தவர் யாரம்மா?
ஏணி தந்தவர் உண்டென்றால்
ஏன்தான் திரும்பி வந்தாயோ?
மான்போல் துள்ளி மகிழாமல்
மருண்டு நிற்பது ஏனம்மா?
வண்ணப் பொட்டா அதுவில்லை
வடிவாய் தெரியும் அம்புலிதான்
அம்புலிக்குள்ளே ஆச்சியென்று
அன்று சொன்னவர் யாரம்மா?
அறிவோமின்று நாமிருவர்
அந்திர லோகம் போய் வருவோம்.

தெரிந்துகொள்ளுங்கள்

## நட்சத்திரம் என்ன நிறம்?

கருமேகத்தின் இடையே, வைரக்கற்கள்போல, நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக்கொண்டு இருக்கின்றன! இவை நம் கண்களுக்கு வெள்ளை வெளேர் என்று தெரிகின்றன. இதனால் நட்சத்திரங்களை 'வெள்ளி' என்றும் சொல்வது உண்டு.

ஆனால், தொலை நோக்கிக் கருவிகளைக் கொண்டு வானத்தை ஆராயும் நிபுணர்களுக்கு, நட்சத்திரங்கள் எல்லாம்வெள்ளையாகத் தெரிவது இல்லை. சில நல்ல சிவப்பாகவும், சில இளஞ் சிவப்பாகவும், சில நீல நிறமாகவும், சில கரு நீலமாகவும் தோன்றுகின்றன!

இந்த நிற வேறுபாட்டை வைத்து, நட்சத்திரங்களின் வயதை நிர்ணயிக்கலாம் என்று நிபுணர்கள்கூறுகிறார்கள்.

வாயுவும் அணுத் துகள்களும் செறிந்த மேகக் கூட்டம் சுருங்கி நட்சத்திரம் ஆகும். இந்த மாற்றம் ஏற்பட 500 கோடி ஆண்டுகள் கூட ஆகலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

# மாணவர் அரங்கு

## கோழிகள் பேசும் மொழி

"கோழிகளுக்கு தனி மொழி இருக்கின்றன. அவை ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்கின்றன" என்று கூறுகிறார், ஒரு நிபுணர்!

இவர் பெயர் டாக்டர் எரிச். மேற்கு ஜெர்மன்நாட்டில் வாழ்கிறார். கோழிகளின் வாழ்க்கையைப் பல ஆண்டுகளாகவே கவனித்து வருகிறார். கோழிகளின் மொழியை உணர்ந்தவர் உலகத்திலேயே இவர் ஒருவர்தான் என்று கூறப்படுகிறது. அவர் கூறுவதாவது:-

"கோழிக் குடும்பத்தின் தலைவன், சேவல். தன்குடும்பத்திற்கு ஆபத்து வருவதைக் கவனித்து, அதைத் தடுக்க அல்லது எதிர்க்க எப்போதும் சேவல் தயாராக இருக்கிறது. தன்பெட்டைக் கோழிக்கு வரும் ஆபத்தை முன்னதாகவே உணர்த்துகிறது. அது போடும் 'கொக்கரக்கோ' சத்தத்தை அறிந்து பெட்டைகளும் குஞ்சுகளும் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொள்கின்றன.

பெட்டைக் கோழிகள் தனித்து இருக்கும்பொழுது, ஜாக்கிரதையாக இருப்பது இல்லை. ஆனால், தன் குஞ்சுகளிடன் இருக்கும்பொழுது மிகவும் விழிப்பாக இருக்கின்றன. முட்டை யிடுவதற்கு முன், பெட்டைக் கோழிகள் ஒருவித சத்தத்தை வெளியிடுகின்றன. அந்தச் சத்தத்தில் இருந்தே அது முட்டையிடுகிறது என்பதை சொல்லிவிடலாம்.

எல்லாக் கோழிகளும்ஒரே மாதிரியான மொழியையே பேசுகின்றன. அவை ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்வதைக் கவனிக்க, மிகவும் நன்றாக இருக்கும். கோழி [illegible]
[illegible]
இவ்வாறு டாக்டர் எரிச் கூறுகிறார்.

அன்புள்ள தம்பி தங்கைகளே,

வணக்கம். உங்கள் எல்லோருக்கும் என் நல்வாழ்த்துக்ள். வாழ்த்துக்களுக்கு மட்டுமென்ன குறைச்சல்! எங்கே அண்ணா இவ்வளவு நாளும் போயிருந்தீர்கள் என்று உரிமையுடன் முணுமுணுப்பது எனக்கு கேட்கிறது.

என்ன இருந்தாலும் உங்கள் அண்ணன் தானே! மன்னித்துவிடுங்கள்! இனிவாராவாரம் தொடர்பு கொள்கிறேன்.

தம்பி தங்கைகளிடமிருந்து கட்டுரைகள், கதைகளை எதிர்பார்க்கிறேன். நகைச்சுவைத்துணுக்குகள் உலகப் பெரியாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் போன்ற சுவையான விசயங்களை சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.

இன்னுமொரு விடயம். மாணவர்களாகிய உங்களுக்கு பல பிரச்சினைகள் தோன்றலாம். பல்வேறு சந்தேகங்கள் எழலாம். அவற்றை அண்ணா தீர்த்துவைக்க காத்திருக்கிறேன். 'உங்கள் பிரச்சினை' என்ற தலைப்பின் கீழ் உங்கள் பிரச்சினைகளுக்கு விரைவில் பதிலளிக்கவிருக்கிறேன். உங்கள் கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள். வேறு என்ன? இனி வாராவாரம் சந்திப்போமே!

அன்புள்ள
**கோபு அண்ணா**

## இமய மலை

உலகிலேயே மிகவும் உயரமான சிகரம் எவரெஸ்ட் சிகரமாகும். இதன் உயரம் 29,141 அடிகளாகும். இந்தச் சிகரம் இமயமலை சிகரங்களில் ஒன்றாகும். இப்படி பார்க்கும்போது உலகிலேயே உயர்ந்த மலை இமயமலைஎன்று புலனாகின்றது அல்லவா?

இது இந்தியாவின் வடக் கெல்லையாக அமைந்திருக்கும் மலைத்தொடராகும். ஹிமாலயம் என்னும் வடமொழிச் சொல் பனியின் இருப்பிடம் என்ற பொருள்படும். திபெத்தையும், இந்தியாவையும்பிரிக்கும் பெரிய மதில்போன்று இது அமைந்துள்ளது. மத்திய ஆசியாவின் மிகப் பெரிய பீடபூமியின் தெற்குப்புறத்திலுள்ள செங்குத்தான சரிவு என இதைக் கூறலாம். இந்தியாவின் பக்கத்தில் இது அடிவாரம் வரை மிகச் செங்குத்தாக அமைந்துள்ளது.

மத்திய ஆசியாவின் பக்கத்தில் சரிவு மிகச் சாய்வாக உள்ளது. இமயமலை நாம் இடைவெளிகள் அற்ற ஒரே மலைத் தொடர் என்று கருதிவிட முடியாது. இமயமலைத் தொடரில் தான்கைலாச சிகரமானதுஉள்ளது. இதன் உயரம் அ, 982 அடிகளாகும்.

இமயத்தின் கிழக்குப் பகுதியில் மேற்குப் பகுதியை விட வெப்பமும் மழையும் அதிகம். கிழக்கில் வெண்பனிக்கோடு 14,000 அடி உயரத்திலும், மேற்கே 19,000 அடி உயரத்திலும் உள்ளது. வறட்சியான திபெத்துப் பகுதியில் இதுஇன்னும் 3500 அடி உயரத்தில் உள்ளது. இந்தியப் பகுதியில் வெப்பநாட்டுக் காட்டுவிலங்குகள் உள்ளன திபேத்தில் காணப்படுபவை குளிர்ப் பிரதேசங்களில் வாழும் விலங்கினங்கள். மிகப் பெரிய பல பறவைகளும் இமயமலையில் உள்ளன.

2000 அடி உயரம்வரை நாகப்பாம்பு காணப்படுகின்றது. பல்லிகளும், தவளைகளும் 18000 அடி உயரத்தில் வாழ்கின்றன. இவைகளின் உரோமங்கள் தப்பித்துச் காணப்படுகின்றன. இதுவே இமயம்.

—தமிழ்வேந்தன்

### எத்தனை போத்தல்?

முருகன் ஒரு பால் வியாபாரி. அவனிடம் உள்ள ஒரு பசுமாட்டையும், ஒரு எருமை மாட்டையும் வைத்துக் கொண்டு, தினமும் பால் கறந்து விற்பனை செய்து வந்தான். ஆனால், அவனிடம் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. அதாவது எவ்வளவு பால் வைத்திருப்பானோ, அதே அளவுக்கு தண்ணீர் கலந்து விற்பனை செய்வான். இப்படி தினம் 24 போத்தல் பால் விற்பனை செய்து வந்தான்.

ஒரு நாள் அவன் வீட்டுக்கு விருந்தினர் வரவே, தண்ணீர்கலந்திருந்த கலப்பு பாலில்ஒருபோத்தல்எடுத்து வைத்துக்கொண்டு, மீதியுள்ள கலப்புப் பாலில் மேலும் தண்ணீர் சேர்த்து 3 போத்தலாக்கி, விற்பனை செய்தான்.

அப்படியானால், கடைசியாக கலந்த கலப்புப் பாலில் எத்தனை போத்தல் சுத்தப் பால் இருந்தது?

(விடை: அடுத்த இதழில்)

## கண்டு பிடித்தவர்கள்

| | | |
|---|---|---|
| ஆகாயவிமானம் | — | ரைட்சகோதரர்கள் |
| பாரமானி | — | தொரி செல்லி |
| நவீன சுருருள் | — | ஸ்ரார்லி |
| டீசல் இயந்திரம் | — | டீசல் |
| டைனமைட் | — | நோபல் |
| டைனமோ | — | பரடே |
| ஊற்றுப்பேனா | — | வாட்டர்மான் |
| பரசூட் | — | லெனொர்மாண்ட் |
| சட்டை ஊசி(Safety pin) | — | (H)கன்ட் |
| வானொலி | — | மார்க்கோனி |
| நீராவிஇயந்திரம் | — | ஜேம்ஸ்உவாட் |
| தொலைபேசி | — | கிரகாம்பெல் |
| தொலைப்பார்வை(Television) | — | ஜெ. எஸ். பயார்ட் |
| தட்டச்சுப் பொறி(Typewriter) | — | சோல்ஸ் |
| 'எக்ஸ்' கதிர்கள்('X' Rays) | — | ரொன்ஜன் |

தொகுத்தவர்: ந: திருஞானசம்பந்தர், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தந்திமைத்தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


# 2வது வெற்றி வாரம்

எம்பயர் (கொழும்பு) செல்லமகால் (கொட்டாஞ்சேனை) றீகல் (நாரஹேன்பிட்டி) நெல்சன் (திருமலை)
இம்பீரியல் (மட்டுநகர்) அசோகா (புத்தளம்) றீகல் (கம்பளை) விஜிதா (இரத்மலானை)
வின்சர் (யாழ்ப்பாணம்) ஆகிய திரைகளில்

எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நம்பியார் நாகேஷ் பாரதி நடிக்கும்

## நாடோடி



கெயிட்டி 38-வது வாரம்
சைராபானு, இராஜேந்திரகுமார் நடிக்கும்

## ஆயி மிலான் கி பேலா
(கலரில்)

# 2-வது புரட்சி வாரம்

வாழ்க்கைப் பிரச்சினையை பிரதிபலிக்கும், வலிமை மிகுந்த குடும்பச்சித்திரம்!
உள்ளத்தைத் தொடும் கதையமைப்பும் உருக்கமான பல சம்பவங்களும் மலிந்தது!

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) லெவீனியா (நுகேகொடை)
ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை) லிபர்டி (அட்டன்) சிகிரி (பண்டாரவளை) மீபுர (நீர்கொழும்பு) ஆனந்தா (கம்பளை)

தேவர் பிலிம்ஸ்

## தாய்க்குத் தலைமகன்



எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
அசோகன், மனோகர்
ரங்கராவ் நாகேஷ்
இன்னும் பலர் நடித்தது

கதை—தயாரிப்பு
எம். எம். ஏ. சின்னப்பா
தேவர்

டைரெக்‌ஷன்:
எம். ஏ. திருமுகம்



# வெற்றி முழக்கமிடும் 3வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்) விஜிதா (அட்டன்) மொடோன் (பதுளை)



● ரவிச்சந்திரன் ● ஜெயலலிதா
நாகேஷ் மனோகர் ரங்கராவ் நடிக்கும்

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

## குமரிப்பெண்



# அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது காட்சி தருகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) திவொளி (நாரஹேன்பிட்டி) மொடேன் (பண்டாரவளை) ராஜ் (நீர்கொழும்பு)

சிவாஜி கணேசன் நடிக்கும்

## தூக்குத் தூக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் மே மாதம் 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.